பக்கங்கள்: முப்பத்திரண்டு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 12 வியாழக்கிழமை (24.02.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 090



04 வெல்லப்போவது எந்தத்தீவு



16 மக்கள் தம்வழியில் வென்றனர்



20 சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு உலகக் கிண்ணம்



24 நடிகர் சத்தியராஜ் கண்டனம்



31 சுயாதீன ஆணைக்குழு இயங்கவில்லை

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இந்தியா வழங்கிய உதவிகள் துஷ்பிரயோகம்

## சுமந்திரன் எம்.பி. சபையில் குற்றச்சாட்டு



கொழும்பு, பெப்ரவரி 24

முப்பது வருட யுத்தத்தாலும், தொடர்ந்து ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய அரசால் வழங்கப்பட்ட உதவிகள் துஷ்பிரயோகப்படுத்தப்பட்டுள்ளன. அவை பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடையவில்லை.

இவ்வாறு யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று நாடாளுமன்றில் குற்றஞ்சாட்டினார்.

இந்திய அரசு 50 ஆயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதாக உறுதியளித்தது. ஆனால் இன்றுவரை ஒரு வீட்டுக்கான அடிக்கல்லைக் கூட நடவில்லை.

வட பகுதி விவசாயிகளுக்கென விசேடமாக வழங்கப்பட்ட 500 உழவு இயந்திரங்களில் 76 உழவு இயந்திரங்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. ஏனையவை அரச கூட்டுத்தாபனங்களுக்கும், தென் பகுதிக்கும் கொண்டு செல்லப்படுகின்றன என்று அவர் சுட்டிக்காட்டினார். (32 ஆம் பக்கம் பார்க்க)

## பார்வதி அம்மாளின் அஸ்தி சிதைப்பு நாய்களையும் சுட்டுப் போட்டிருந்தனர்

### உச்சக்கட்ட இழிசெயல் என சிவாஜிலிங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், பெப். 24

பார்வதி அம்மாளின் அஸ்தியை சமுத்திரத்தில் கரைப்பதற்கும், மற்றச் சடங்குகளுக்குமாக அச்சொட்டாக எடுக்கமுடியாத அளவுக்கு அஸ்தி சிதறடிக்கப்பட்டு அள்ளி இறைக்கப்பட்டு விஷமத்தனம் செய்யப்பட்டுள்ளது என்றும் அத்துடன் மூன்று நாய்கள் துப்பாக்கியால் சுட்டு அந்த இடத்தில் போடப்பட்டு எரியூட்டப்பட்டிருந்தன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாள் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை காலமானார். (32 ஆம் பக்கம் பார்க்க)

## அஸ்தியைச் சிதைத்த அநாகரிகச் செயலுக்கு அரசுதான் பொறுப்புக்கூற வேண்டும்

யாழ்ப்பாணம், பெப்.24

வல்வெட்டித்துறை ஊரணி இந்து மயானத்தில் எரியூட்டப்பட்ட பார்வதியம்மாளின் அஸ்தியை இனந்தெரியாதவர்கள் கிளறி சிதைத்து நாசப்படுத்தியுள்ள அநாகரிக - மிருகத்தனமான செயலாகப் பலரும் கண்டித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தமிழ்த்

### பலரும் கண்டனம் தெரிவிப்பு

தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தவை வருமாறு:-

இந்தச் சம்பவம் மோசமான காட்டு (29 ஆம் பக்கம் பார்க்க)

## பான் கீ மூனுடன் சந்திப்பா? அடியோடு மறுக்கிறது அரசு

கொழும்பு, பெப். 24

வெளி விவகார அமைச்சின் செயலாளர் ரொமேஷ் ஜயசிங்க மற்றும் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் ஆகியோர் நியூயோர்க்கில் வைத்து ஐ.நா. பொதுச்செயலாளர் நாயகம் பான் கீ முனைச் சந்தித்தார் என வெளியாகிய செய்திகளை அரசு நேற்று நிராகரித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரொமேஷ் ஜயசிங்க தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டு வெளிநாடு சென்றுள்ளார் எனவும் தனக்குத் தெரிந்த வகையில் சட்டமா அதிபருக்கும் ஐ.நா. செயலாளருக்கும் இடையில் எந்தவித சந்திப்பும் ஏற்பாடு செய்யப்படவில்லை எனவும் பிரதியமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்தார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் (29 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. நிபுணர் குழுவின் இலங்கை விஜயம் இன்னும் இழுபறி நிலையில்

### நியூயோர்க்கில் இலங்கை அதிகாரிகளுடன் பான் கீ-மூன் பேச்சு

நியூயோர்க், பெப். 24

ஐ.நா. நிபுணர் குழுவின் இலங்கை விஜயம் குறித்து ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் இலங்கையின் உயர்மட்ட அதிகாரிகளுடன் நேற்று பேச்சு நடத்தினார் என 'இன்னர் சிட்டி பிரஸ்' செய்தி வெளியிட்டிருந்தது.

சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ், வெளி விவகார அமைச்சின் செயலாளர் ரொமேஷ் ஜயசிங்க ஆகியோர் இப்பேச்சுகளில் கலந்துகொண்டனர் என்றும் நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. தலைமையகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது எனவும் 'இன்னர் சிட்டி பிரஸ்' தெரிவிக்கின்றது.

இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பாக ஆராயவென ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூனால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு விசாரணை மேற்கொள்ள இலங்கை வருவதற்கு விசா வழங்கப்படமாட்டாது என ஏற்கனவே வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்திருந்தமை தெரிந்ததே. (29 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மீனவர் நலனிலும் அக்கறை செலுத்த வேண்டும் என்கிறது இந்தியா

கொழும்பு, பெப். 24

இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக இரு நாடுகளினதும் கூட்டுச் செயற்குழு ஒன்று அடுத்த மாதம் சந்தித்துப் பேசவுள்ளது - என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பலவருடங்களுக்குப் பின்னர் மீண்டும் மீன்பிடியை ஆரம்பித்துள்ள இலங்கை மீனவர்களின் நலன் தொடர்பிலும் அக்கறை செலுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய நாடாளுமன்றில் வைத்து நேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு (29 ஆம் பக்கம் பார்க்க)

### சம்பந்தன் தலைமையில்

## அரசியல் கள நிலவரங்கள் குறித்து சென்னையில் கூட்டமைப்பு ஆராய்வு

யாழ்ப்பாணம், பெப்.24

எதிர்வரும் முதலாம் திகதி இடம்பெறவுள்ள அரசு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உப குழுக்கூட்டத்தில் ஆராயப்படவேண்டிய விடயங்கள் மற்றும் தற்போதைய அரசியல் கள நிலவரங்கள் தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல் கடந்த வாரம் சென்னையில் இடம்பெற்றது.

சென்னையில் வைத்திய சிகிச்சை காரணமாக தங்கியுள்ள கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தனுடன் உப குழுவில் இடம்பெறும் ஏனைய உறுப்பினர்கள் இந்த மந்திராலோசனையில் பங்கு கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், (29 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டு அபிவிருத்திப் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபடுவது ஏன்?

### ஐரோப்பிய ஒன்றியத்தினர் அரச அதிபரிடம் கேள்வி

யாழ்ப்பாணம், பெப்.24

சிவில் சமூகத்தில் ஏன் இராணுவத்தினரது அதிகரித்த பிரசன்னங்கள், இராணுவத்தினர் ஏன் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத்தின் தெற்காசியாவுக்கான நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்விகளை எழுப்பியுள்ளனர்.

யாழ்.மாவட்டத்துக்கு நேற்று விஜயம் செய்த ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாழ்.மாவட்ட செயலகத்தில் அரச அதிபருடன் கலந்துரையாடினர். அந்தச் சந்தர்ப்பத்திலேயே இந்தக் (29 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பாகிஸ்தானுக்கு இரையாகியது கென்யா


கம்ரான் அக்மலின் அதிரடித் துடுப்பாட்டம்


பிடியெடுத்த மகிழ்ச்சியில் பாக். வீரர்கள்...


உமர்குல்லின் பந்தில் நொக்சீ விக்கெட் தகர்ப்பு..

-டிலீப்-

ஆறாவது ஆட்டம் அம்பாந்தோட்டையில் நேற்று. பலம் பார்த்தன பாகிஸ்தான்-கென்யா. ஆரம்பம் கென்யா வசம், பறித்தெடுத்தது பாகிஸ்தான். முதல் கோணல் முற்றும் கோணல். பொருந்தும் இது கென்யாவுக்கு. முதல் ஆட்டத்தில் நியூஸியிடம் மரண அடி. வெற்றி பெறவேண்டி இறங்கியது. தொடக்கம் முதல் தோல்விதான் கென்யாவுக்கு.

நாணயச் சுழற்சி வெற்றி கூட கென்யாவுக்கு இல்லை. சுழற்சியில் வென்றதால் அதிரடி காட்ட களமிறங்கியது பாக். மொஹமட் - அஹமட் இறங்கினர் களத்துக்கு அதிரடி காட்ட. காட்டினர் வீரியங்களை கென்யர்கள் தம் பந்து வீச்சில். ஆரம்பம் சிக்கியது பாக்கிற்கு. ஓட்டம் பெற முடியவில்லை ஓடித்தன்னும். இறுக்கமாய் இருந்தது களத்தடுப்பு. அதிரடிக்காய் இறங்கியவர்கள் அடக்கி வாசித்தார்கள்.

கென்யர்கள் அனுப்பி வைத்தனர் மொஹமட்டை. தொடர்ந்து சென்றார் அஹமட். 12 ஓட்டங்கள் இழந்தது இரண்டு விக்கெட்டுக்கள். இக்கட்டு நிலைமை பாக்கிற்கு. இலகுவாய் மீட்டுச் சென்றது அடுத்த ஜோடி. அதிரடிகளின் ஆரம்பம் அப்போதுதான் தொடக்கம். கம்ரான் அக்மல் - யுனிஸ்கான் மீட்டனர் இணைந்து.

தாறுமாறாகியது கென்யப் பந்துகள். வீசும் பந்துகள் தேடிச் சென்றன எல்லையை. சரிவுக்கு மீட்சி நல்லதாய் அமைந்தது. கடந்தனர் அரைச்சதங்கள். நிலைத்தனர் களத்தில். விக்கெட் வீழ்வதாய் இல்லை. இறுதியாய் சரிந்தார் கம்ரான் அஹ்மல். அதிரடி காட்ட முன் வந்தார், சென்றது பந்து கீப்பர் ஒயுமாவிடம். தட்டிச் சரித்தார் விக்கெட்டை. பிரிந்தது இணைப்பு. கம்ரான் 55 ஓட்டங்கள் அணிக்காய் ஆடி எடுத்தார்.

வந்தார் மிஷ்பா. இணைந்தார் யுனிஸுடன். சறுக்கியது ஆரம்பத்தில் பாக். ஆட்டம். சுதாகரித்தாடியது மத்திய வரிசைத் துடுப்புக்கள். எகிறியது ஓட்ட வேகம். திண்டாடினர் பந்துவீச்சாளர்கள். வருபவரெல்லாம் காட்டினர் வாணவேடிக்கை. இடையிடையே விக்கெட் சரிவுகள். ரிக்கோலா வீழ்த்தினார் யுனிஸின் விக்கெட்டை. உமர் அக்மல் புகுந்தார் களத்துக்கு. அதுவரை ஆடியது ''சாம்பிள்'' அதிரடி. எடுக்கப்பட்டது ''பட்டிங் பவர் பிளே''. தும்சம் செய்யப்பட்டது கென்யரின் பந்து வீச்சுக்கள். உமர் அக்மல் ஆடினார் பேயாட்டம்.

ஒடுயா முடித்தார் உமரின் ஆட்டத்தை. 52 பந்துகள் எடுத்து அடித்து முடித்தார் 71 ஓட்டத்தை. ஒரு சிக்ஸரும் 8 பவுண்டரிகளும் சர்வசாதாரணமாய் அடங்கியது. பின்னரங்குகள் சாதித்தது அடக்கமாய். அள்ளி வழங்கியது கென்யா உதிரிகளை. 46 ஓட்டங்கள் வந்து சேர்ந்தது பாகிஸ்தானுக்கு உதியாய். இறுதியாய் 317/7 என்ற நிலையில் முடிந்தது ஆட்டம். பாகிஸ்தானுக்கு அள்ளி வழங்கியதால் பந்து வீச்சில் சிறப்புப் பெறுதி யாருமில்லை.

தொடங்கியது கென்யர் ஆட்டம். இலக்கு இவர்களுக்கு அதிகம். அதிரடியும் இல்லை இவர்களிடம். முடிவு முதலிலேயே தெரிவு. இருந்தும் தொடர்ந்தது ஆட்டம்.

ஆரம்பம் எப்போதும் கென்யர்களுக்கு ராசி. முதல் விக்கெட் பிரிவதற்கு எடுத்தது நீண்ட நேரம்.

அவசரம் அதிகரித்தது கென்யர்களுக்கு. குறும் ஓட்டத்தினால் விக்கெட் வீழ்ந்தது. தொடங்கியது கென்யரின் சரிவு.

ஆசிய மண் சுழலுக்குச் சொந்தம். நிரூபனமாகவில்லை இதுவரை ஆட்டங்களில். நிரூபித்துக் காட்டினார் அப்ரிடி நேற்று.

அப்ரிடியின் சுழலில் சிக்கி கென்யர்களின் ஆட்டம் முடிவு கண்டது. அப்ரிடியின் பந்தை துடுப்பால் தடுக்கவில்லை. மாறாய் கால்களால் தடுத்ததால், கென்யர்களின் மூன்று விக்கெட்டுக்கள் அப்ரிடிக்குச் சொந்தம்.

ஒபுயா சமாளித்தார் சாமர்த்தியமாக. இறுதி வரை தனித்து நின்றார் பாகிஸ்தானை எதிர்த்து. கைக்கொடுக்கத் தவறினர் சக துடுப்பாட்ட வீரர்கள். 58 பந்துகள் எதிர்த்தார் ஒபுயா. பெற்றுக்கொண்டார் 47 ஓட்டங்களை.

மறுமுனையில் அப்ரிடியின் தாக்குதல் உக்கிரம். இதனால் மடிந்தவர்களும் அதிகம். அப்ரிடிக்கு இலகுவாய் வந்து சேர்ந்தது கென்யர்களின் விக்கெட்.

கென்யர்களின் பின் அரங்குகள் தகர்ந்தது அப்ரிடியின் பந்துகளில். முடிவுக்கு வந்தது கென்யர்களின் ஆட்டம். 112க்கு சகல விக்கெட்டுக்களும் கொய்யப்பட்டது.

அதிரடி அதிகம் காட்டியதால் ஆட்டநாயகனாய் வலம்வந்தார் உமர் அக்மல். தொடர்கிறது கென்யர்களின் சோகம்.

## 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ண நான்காவது ஆட்டம்

ஆட்டம்: பாகிஸ்தான் Vs கென்யா | நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்
முடிவு: பாகிஸ்தான் 205 ஓட்டங்களால் வெற்றி | ஆட்டநாயகன்: உமர் அக்மல்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| வொட்ஸன் | lbw b கீரீமேர் | 79 | 92 | 08 | 1 |
| ஹடின் | lbw b உர்ஷேயா | 29 | 66 | 03 | 0 |
| பொன்டிங் | Run out ( மொப்வூ ) | 28 | 36 | 00 | 0 |
| கிளார்க் | ஆட்டமிழப்பில்லை | 58 | 55 | 04 | 0 |
| வைட் | b மொப்பூ | 22 | 36 | 00 | 0 |
| ஹஷி | b பிறிஸ் | 14 | 08 | 01 | 1 |
| ஸ்மித் | c சக்காபாவா b மொப்பூ | 11 | 04 | 01 | 1 |
| ஜோன்ஷன் | ஆட்டமிழப்பில்லை | 07 | 03 | 01 | 0 |
| ரைட் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| கிரேஜா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| பிரெட் லீ | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (ப0, lb 3, w37, nb 3) | 46 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| மொப்வூ | 09 | 58 | 2 | 0 |
| பீறிஸ் | 10 | 43 | 1 | 0 |
| உர்ஷேயா | 10 | 43 | 1 | 2 |
| கீரீமேர் | 10 | 41 | 1 | 0 |
| ரெயிலர் | 09 | 23 | 0 | 0 |
| சிக்கம்புறா | 02 | 18 | 0 | 0 |
| வில்லியம்ஸ் | 06 | 29 | 0 | 0 |

TOTAL - 262/6 (50)

1-11(மொஹமட்), 2-12 (அஹமட்), 3-110 (கம்ரான் அக்மல்), 4-155(யுனிஸ்கான்), 5-273(மிஷ்பா), 6-289 (உமர் புல்) 7- 289 (அப்ரிடி)

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ரெயிலர் | b ரைட் | 16 | 24 | 1 | 0 |
| கொவன்ரை | c&b லீ | 14 | 24 | 1 | 1 |
| தைபு | c வொட்ஷன் b ஜோன்ஷன் | 07 | 17 | 1 | 0 |
| ஈர்வினி | lbw b ஜோன்ஷன் | 00 | 06 | 0 | 0 |
| வில்லியம்ஸ் | c வொட்ஷன் b ரைட் | 28 | 40 | 1 | 1 |
| சிக்கம்புறா | c ஹடின் b கிரேஜா | 14 | 14 | 2 | 0 |
| உர்ஷேயா | c பொன்டிங் b ஹஷி | 24 | 45 | 1 | 0 |
| சக்காபாவா | lbw b கிரேஜா | 16 | 18 | 0 | 0 |
| கீரீமேரி | c ஹடின் b ஜோன்ஷன் | 37 | 51 | 4 | 0 |
| மொப்வூ | c ஹடின் b ஜோன்ஷன் | 02 | 11 | 0 | 0 |
| பீறிஸ் | ஆட்டமிழப்பில்லை | 05 | 19 | 0 | 0 |
| உதிரிகள் | (b4, lb 3, w3, nb 1) | 11 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ரைட் | 09 | 34 | 2 | 1 |
| லீ | 08 | 34 | 1 | 1 |
| ஜோன்ஷன் | 9.2 | 19 | 4 | 2 |
| கிரேஜா | 08 | 28 | 2 | 0 |
| வொட்ஷன் | 03 | 07 | 0 | 0 |
| ஸ்மித் | 05 | 24 | 0 | 0 |
| ஹஸி | 04 | 12 | 1 | 1 |

TOTAL - 171/10 (46.2)

1-37(வோர்டேர்ஸ்), 2-43 (ஒயுமா), 3-73 (ரிக்கோலோ), 4-79 (மிஷ்ரா), 5-85 (பட்டேல்), 6-87 (கமண்டீ), 7-101 (ஒடுயா), 8-112 (ஒபுயா), 9-112 (ஒட்ஹீயாம்போ), 10-112(நொக்சீ)

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

நெல்லியடியில் ஆரம்பம்
சுயதொழில் வாய்ப்பு கற்கைநெறி
NOKIA vodafone LG SAMSUNG Sony Ericsson
Diploma in Mobile Phone Flashing & Unlocking
(Nokia, Samsung, Ericsson & LG )
சகலவகையான கைத்தொலை பேசிகளையும் Flashing & Unlocking செய்தல்
இக்கற்கை நெறியானது Mobile Phone Repairing Shop ஒன்றை ஆரம்பிக்க இருப்போர் மற்றும் ஏற்கனவே Phone Shop ஒன்றை வைத்திருப்போருக்கும் மிகவும் பயனுள்ள கற்கைநெறி. ஆர்வமுள்ள அனைவரும் இக்கற்கைநெறியில் பங்குபற்றலாம். - காலம் ஒரு மாதம் - பயிற்சியின் முடிவில் அரச அங்கீகாரமுடைய சான்றிதழ் உடன் வழங்கப்படும்.
Course Fees :- Rs.20000/= Only
உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் :-
0777 110 862
(தனிப்பட்ட வகுப்புக்கள்)

விசேட விலையில்...
கைத்தொலைபேசிகள்
10 ஆவது உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில் உலகக் கிண்ணத்தை இலங்கையணி கைப்பற்ற எமது வாழ்த்துக்கள்.
வாழ்த்துவோர்:
புதிய வினோ நகைமாடம்
பிரதான வீதி, சங்கானை.
செலான் வங்கி அருகில்.
கிளை நிறுவனம்:
Mobile Plaza
Phone Shop
(NSB Bank அருகில்) T.P. 0779352902



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளைய ஆட்டம்

மிர்பூர், காலை 9.30

பங்களாதேஷ் – அயர்லாந்து



நியூஸிலாந்து – ஆஸ்திரேலியா

நாக்பூர், பி.ப. 2.30



**உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம் 2011**

# வெல்லப் போவது எந்தத் தீவு?



ஆஸ்திரேலிய-நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான லீக் ஆட்டம் நாக்பூரில் நாளை இடம்பெற உள்ளது. இந்தப் போட்டியில் எந்த அணி வெற்றிபெறும் என்பதை ரசிகர்கள் ஓரளவுக்கு ஊகிக்கக் கூடியதாக இருக்கும்.

ஏனெனில் இரு அணிகளும் சம பலத்தில் இல்லை. ஆஸ்திரேலியாவின் கையே ஓங்கியுள்ளது. நியூஸிலாந்து அணியின் சமீபத்திய பெறுபேறுகள், ஆஸியின் சமீபத்திய பெறுபேறுகளுடன் ஒப்பிடும்போது மிகத்தாழ்ந்த மட்டத்திலேயே உள்ளது. ஆஸ்திரேலிய அணி ஆஷஷ் தொடரை இழந்திருந்தாலும் அதன் பின்னராக அதே இங்கிலாந்து அணியுடன் இடம்பெற்ற ஏழு ஒருநாள் போட்டிகளில் ஆறு போட்டிகளில் வென்று அசத்தியது. மறுபுறம் நியூஸிலாந்து தனது சொந்த மண்ணில் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டித் தொடரைக் கோட்டை விட்டது.

இருப்பினும் உலகக்கிண்ணத் தொடரில் இரண்டு அணிகளும் கத்துக்குட்டி அணிகளுடன் தலா ஒரு போட்டிகளில் விளையாடியுள்ளன. நியூஸிலாந்து அணி கென்யாவுடனும், ஆஸ்திரேலிய அணி சிம்பாப்வே அணியுடனும் மோதின. இதில் ஆஸியும், நியூஸிலாந்தும் வெற்றிபெற்றன.

நியூஸிலாந்து அணி கென்ய அணியை பத்து விக்கெட்டுக்களால் அபாரமாக வெற்றிகொண்டது. நியூஸிலாந்து அணி வீரர் பெனெட் அபாரமாகப் பந்து வீசி கென்ய அணியை 69 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழக்கச் செய்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூஸி அணி எட்டு ஓவரிலேயே குறித்த இலக்கை எந்தவித விக்கெட் இழப்புமின்றி அடைந்தது. இதன் மூலம் தேறிய சராசரி ஓட்டவிகிதத்தில் முதலிடம் பிடித்தது. கென்ய அணியையும் அவ்வளவு இலகுவில் எடுத்துக் கொள்ள முடியாது. எனவே இந்த அபார வெற்றி மூலம் நியூஸிலாந்து மீண்டும் தனது 'போர்முக்கு' திரும்பியுள்ளதே என்று கருத வேண்டியுள்ளது.

ஆனால் ஆஸ்திரேலிய அணி சிம்பாப்வே அணியுடனான போட்டியில் தடுமாற்றத்துடனேயே வெற்றி கொண்டது. முதலில் ஆடிய ஆஸி 262 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. சிம்பாப்வே அணியின் சிறப்பான பந்து வீச்சின் முன்னால் ஆஸியின் அதிரடிகள் அடங்கிப்போய்விட்டன. பதிலுக்கு ஆடிய சிம்பாப்வே 171 ஓட்டங்களைப்பெற்றது. இதன் மூலம் ஆஸி மீண்டும் சரியத் தொடங்கிவிட்டது என்றே எண்ணத் தோன்றுகின்றது.

இந்த நிலையில் நாளைய போட்டியில் எந்த அணி வெற்றிபெறும் என்பது தடுமாற்றம்தான். கிரிக்கெட்டில் எந்த நேரத்தில் எதுவும் நடக்கலாம் என்பதுதான் விதி.

## அணிகளின் நிலைகள்

| பிரிவு A | M | W | L | Pt | N/R |
|---|---|---|---|---|---|
| ஆஸ்திரேலியா | 1 | 1 | 0 | 2 | +1.820 |
| இலங்கை | 1 | 1 | 0 | 2 | +4.200 |
| கனடா | 1 | 0 | 1 | 0 | -4.200 |
| சிம்பாப்வே | 1 | 0 | 1 | 0 | -1.820 |
| கென்யா | 2 | 0 | 2 | 0 | -4.897 |
| நியூஸிலாந்து | 1 | 1 | 0 | 2 | +7.620 |
| பாகிஸ்தான் | 1 | 1 | 0 | 2 | +4.100 |

| பிரிவு B | M | W | L | Pt | N/R |
|---|---|---|---|---|---|
| இந்தியா | 1 | 1 | 0 | 2 | +1.740 |
| இங்கிலாந்து | 1 | 1 | 0 | 2 | +0.242 |
| தென்னாபிரிக்கா | 0 | 0 | 0 | 0 | 00 |
| மே.தீவுகள் | 0 | 0 | 0 | 0 | 00 |
| பங்களாதேஷ் | 1 | 0 | 1 | 0 | -1.740 |
| நெதர்லாந்து | 1 | 0 | 1 | 0 | -0.242 |
| அயர்லாந்து | 0 | 0 | 0 | 0 | 00 |

M போட்டி L தோல்வி N/R சராசரி
W வெற்றி Pt புள்ளிகள்


### தினமொரு பரிசுப் போட்டி

நியூஸிலாந்து – ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான நாளைய (25.02.2011) ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி எது?

........................................

பெயர் : ........................................

தே.அ.இல. : ........................................

முகவரி : ........................................

........................................

இந்தக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (25.02.2011) பிற்பகல் 2 மணிக்கு முன் தினமொரு பரிசு உதயன் பணிமனை, 361, கஸ்தூரி யார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலிலோ அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியிலோ சேர்க்கவும்.

கம்ப்யூட்டர் ருடே வழங்கும்

தினமும் வெல்லும் ஒருவருக்கு ஒரு வருடத்துக்கான கம்பியூட்டர் ருடே இலவச சந்தா

தினமொரு பரிசுப் போட்டி

UTHAYAN IT ISLAND

CICT GATEWAY CENTRE JAFFNA

வழங்கும்

4½ லட்சம் ரூபா

பெறுமதியான பரிசுக் கூப்பன்கள்

48 பேருக்கு தலா 9 ஆயிரம் ரூபா பெறுமதியானவை

### மாபெரும் இறுதிப் போட்டி

உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

........................................

போட்டியின் தொடர் ஆட்ட நாயகன் யார்?

........................................

பெயர் : ........................................

தே.அ.இல. : ........................................

முகவரி : ........................................

........................................

போட்டி முடிவுத் திகதி

15.03.2011

மாபெரும் காலிறுதிப் போட்டி இதற்கும் பரிசு உண்டு

1ஆம் பரிசு

தொகையை முடிந்தால் கற்பனை செய்துபாருங்கள்

இறுதிப் போட்டிக்கான சிறப்பு பரிசு

EUROSTAR

Live your Life

CONSUMER ELECTRONICS, HOME & KITCHEN APPLIANCE

வழங்கும் 32' TV LCD



2ஆம் பரிசு

மாபெரும் இறுதிப் போட்டி

காத்திருங்கள்

மற்றும் 10 ஆறுதல் பரிசுகள்

### மாபெரும் காலிறுதிப் போட்டி

காலிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெறும் அணிகள் எவை?

1. .................... 5. ....................
2. .................... 6. ....................
3. .................... 7. ....................
4. .................... 8. ....................

பெயர் : ........................................

தே.அ.இல. : ........................................

முகவரி : ........................................

........................................

போட்டி முடிவுத் திகதி

10.03.2011

### போட்டி விதிகள்

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. தே.அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் தே.அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம். உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்களோ அவர்களது குடும்பத்தவர்களோ போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி உதயனில் அறிவிக்கப்படும். சகல போட்டிகளுக்குமான பெயர்களை இடது மேல் மூலையில் குறிப்பிட்டு, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் சேர்க்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல் அனுபவம் கை கொடுக்கும்

## டுவைன் பிராவோ

உலகக் கோப்பை தொடரில் சாதிக்க, ஐ.பி.எல்., அனுபவம் கை கொடுக்கும். இவ்வாறு மேற்கிந்தியத்தீவுகள் அணியின் உப தலைவர் டுவைன் பிராவோ கூறியுள்ளார்.

பத்தாவது உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர், இந்தியத் துணைக் கண்டத்தில் இடம் பெற்று வருகின்றது. இதில் மேற்கிந்தியத்தீவுகள், தென்னாபிரிக்கா அணிகள் மோதும் 'பீ' பிரிவு லீக் ஆட்டம் டெல்லியில் இன்று இடம்பெறுகின்றது.

இது குறித்து மேற்கிந்தியத் தீவுகள் அணியின் டுவைன் பிராவோ கூறியவை வருமாறு:

உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரை மிகுந்த ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளேன். முதல் போட்டியில் தென்னாபிரிக்க அணியை எதிர்கொள்ள இருப்பது சவாலான விஷயம். எங்கள் அணியில் உள்ள 5 முதல் 6வரையான வீரர்கள், இந்திய மண் ணில் இடம்பெறும் ஐ.பி.எல். தொடரில் விளையாடிய அனு பவம் பெற்றவர்கள். இதனால் இந்திய மைதானங்கள் குறித்து நன்கு அறிந்திருப்பார்கள். இந்த அனுபவம், உலகக் கோப்பை தொடரில் சாதிக்க நிச்சயம் கைகொடுக்கும்.

தென்னாபிரிக்க அணியின் தலைவர் ஸ்மித், டுமினி உள்ளிட்டோர் ஐ.பி.எல். தொடரில் விளையாடியவர்கள். எனவே அவர்களுக்கும் இங்குள்ள ஆடுகளம் குறித்த அனுபவம் இருக்கும். இருப்பினும், கிடைத்த அனு பவத்தை போட்டியில் சிறப்பாக வெளிப்படுத்துபவர்களுக்கு வெற்றி வாய்ப்பு அதி கம். எனவே ஐ.பி.எல்., தொடர் மூலம் கிடைத்த அனுபவத்தைப் சரியாகப் பயன்படுத்தி வெற்றி பெற முயற்சிப்போம்.

காயம் காரணமாக விக்கெட் காப்பாளர் கார்ல்டன் பாக், அட்ரியன் பரத் வெளியேறியது பின்னடைவான விஷயம். இவர்களுக்குப் பதிலாக தேர்வு செய்யப்பட்டுள்ள மாற்று வீரர்கள் திறமை யானவர்கள் என்பதால், இது குறித்து அதிகம் கவலைப்படத் தேவையில்லை. காயம் என்பது இயற்கையான ஒன்று.

தென்னாபிரிக்க அணியை, கடந்த 1996 இல் நடந்த உலகக் கோப்பை அரையிறுதி உள்ளிட்ட மிகப் பெரிய தொடர்களில் வீழ்த்தி உள்ளோம். முந்தைய செயல்பாடுகள் குறித்து அதிகம் சிந்திக்காமல், ஒவ்வொரு போட்டியிலும் முழுத் திறமையை வெளிப்படுத்தினால் சுலபமான வெற்றியைப் பெறலாம் - என்றார். (15)

# வழிக்கு வந்தார் பொண்டிங்




சிம்பாப்வேக்கு எதிரான போட்டியில் ரன் அவுட்டான ஆத்திரத்தில், வீரர்கள் அறையில் இருந்த தொலைக்காட்சியை தனது துடுப்பினால் அடித்து உடைத்திருக்கிறார், ஆஸ்திரேலிய அணித் தலைவர் பொண்டிங். இதற்காக பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டுள்ளார்.

அகமதாபாத்தில் இடம்பெற்ற உலகக் கோப்பைக் கிரிக்கெட் லீக் ஆட்டத்தில், ஆஸ்திரேலிய அணி, சிம்பாப்வேயை வென்றது. இந்தப் போட்டியின் போது சிம்பாப்வே வீரர் மப்வூவின் சிறப்பான களத்தடுப்பில் பொண்டிங் ரன் அவுட்டானார். இந்த ஆத்திரத்தில் மைதானத்தை விட்டு வெளியேறிய இவர், வீரர்களின் உடை மாற்றும் அறைக்குச் சென்றுள்ளார். அங்கு இருந்த 'ரி.வி' யில் இவரது ரன் அவுட் திரும்பத் திரும்ப காட்டப்பட்டுள்ளது. இதனால், கோபத்தின் உச்சிக்கே சென்ற இவர், தனது துடுப்பினால், 'ரி.வி'யை உடைத்துள்ளார். இதன் பெறுமதி 35 ஆயிரம் ரூபா.

இந்தச் சம்பவத்தை முதலில் மறுத்த ஆஸ்திரேலிய ஊடகத்துறை முகாமையாளர் பாட்டர்சன், பின்னர் பொண்டிங் மன்னிப்புக் கேட்டதாக தெரிவித்தார். இது குறித்து அவர் கூறுகையில், 'கிரிக்கெட் சங்க நிர்வாகிகள் கேட்டுக்கொண்ட பின்பாக, தனது செயலுக்கு உடனடியாக பொண்டிங் மன்னிப்புக் கேட்டார். பின்னர் வேறு 'ரி.வி'யை மாற்றுமாறு கேட்டுக்கொண்டார்,' என்றார்.

பொண்டிங் செயலுக்கு இந்திய அணியின் முன்னாள் வீரர் அருண்லால் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், 'உலகக் கோப்பைத் தொடரில் விளையாடுகின்றோம் என்பதை பொண்டிங் நினைவில் கொள்ள வேண்டும். இவர் அடுத்து வரும் தலைமுறைக்கு உதாரணமாக இருக்க வேண்டும்,' என்றார்.

பொண்டிங் செயல் குறித்து குஜராத் கிரிக்கெட் சங்கச் செயலர் ராஜேஷ் படேல் கூறுகையில்,'பொண்டிங் எல்.சி.டி.ரீ.வியை உடைத்தது உண்மைதான். ஆட்டமிழந்த ஏமாற்றத்தில் இப்படி நடந்து கொண்டுள்ளார். இது குறித்து ஆஸ்திரேலிய அணி நிர்வாகத்திடம் தெரிவித்தோம். இந்தியன் கிரிக்கெட் சபையிட மும் முறைப்படி புகார் கூறியுள்ளோம். இது சர்வதேசக் கிரிக்கெட் கவுன்சிலுக்கும் முறைப்பாடு அனுப்பப்பட்டுள்ளது. அவர்கள் விசாரித்து நடவடிக்கை எடுப்பார்கள்' என்றார். (15)



எத்தனை அழகு:
இந்திய அணியை உற்சாகப்படுத்த முகத்தில் மை பூசி வந்திருந்த இளஞ்சிட்டுக்கள்

# செல்ல நாய்க்குட்டியின் பெயர் "சச்சின்"

சச்சின் டெண்டுல்கர் எனக்குப் மிகவும் பிடித்த கிரிக்கெட் வீரர். எனவே அவரது பெயரை எனது செல்ல நாய்க்கு சூட்டியுள்ளேன். இவ்வாறு தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளர் வின்சென் பார்டன்ஸ் தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவில் நாயை மரியாதைக்குரிய விலங்காக கருதுகின்றனர். எனவே ஒருவரை கௌரவிக்க விரும்பினால் அந்த பெயரை நாய்க்கு சூட்டுகின்றனர்.

அதே போல எனது நாய்க்கு சச்சின் பெயரைச் சூட்டி உள்ளேன். ஆனால் இந்தியாவில் நாயை மரியாதைக்குரிய விலங்காகக் கருதுவது இல்லை. எனவே அவர் சச்சின் பெயரை வைத் ததற்கு



இந்திய ரசிகர்கள் கண் டனம் தெரிவித்து உள்ளனர்.

அந்தப் பெயரை வாபஸ் பெற வேண்டும் என்றும் ஆவேசத்துடன் கேட்டுக் கொள்கின்றனர் .

(15)

## பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில் சேர்க்கலாம்

ஸ்ரீ முருகன் களஞ்சியம்
வட்டுக்கோட்டை வீதி,
மாவடி.

கந்தசுவாமி கடை
காரைநகர்.

கனன் போட்டோ
பருத்தித்துறை.

ஜெயக்கணேச ஸ்ரோர்ஸ்
தம்பசிட்டி.

ராஜலக்சுமி புத்தகசாலை
நெல்லியடி.

சதா பொன்ஸ்
மாலுசந்தி.

அருள்நாயகி புத்தகசாலை
கொடிகாமம்.

மணியம் ஸ்ரோர்ஸ்
சாவகச்சேரி.

கஜானன் மல்ரி சென்ரர்
அல்லாரை றோட், மீசாலை.

ரஜனி பீடா
உடுப்பிட்டிச் சந்தி.

கலைச்சோலை பன்சி
ஹவுஸ்
வல்வெட்டித்துறை.

துர்க்கா புத்தகசாலை
சுன்னாகம்.

ரூபன் பல்பொருள் வாணிபம்
அளவெட்டி.

இணுவில் பத்திரிகை முகவர்
இணுவில்.

சூர்யா பாமசி
அச்சுவேலி.

பிள்ளையார் புத்தகசாலை
கிளிநொச்சி.

அன்பரசன் புத்தகசாலை
ஒட்டுசுட்டான்.


புவனேஸ்வரி புத்தகசாலை
மல்லாவி.

நகுலேந்திரன் பல்பொருள்
வாணிபம்
முழங்காவில்.

மதுரா ரெயிலர் கடை
நாச்சிக்குடா சந்தி (சந்தை முன்பாக).

உதயனின்
கிரிக்கெட்
கொண்டாட்டம்
2011

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



உலகக் கிண்ண
வாசகர் கண

## உதயனின் உலகக் கிண்ண கொண்டாட்டம் 2011




# 1996 அர்ஜுன கையில் கிண்ணம்

1975இல் ஆரம்பித்த உலகக்கிண்ணம் தற்பொழுது 2011 இல் காலடி எடுத்து வைக்கின்றது. இந்தப் போட்டிகளில் 1975 இலும் 1979 இலும் மேற்கிந்தியத் தீவுகளில் கையில் இருந்த கிண்ணம் 1983 இல் இந்தியாவிடம் பணிந்து தொடர்ந்து 1987 ஆம் ஆண்டு ஆஸ் திரேலியாவும் 1992 இல் பாகிஸ்தானும் தனதாக்கிக் கொண்டன. 1999 இல், 2003இல் மற்றும் 2007ஆம் ஆண்டுகள் உலகக்கிண்ணம் ஆசியா வசமானது. 1996இல் இலங்கை அணி கிண்ணத்தைக் கைப்பற்றியதை இங்கு நோக்குவோம்.

அரையிறுதிப் போட்டிகளில் வெற்றி பெற்ற இலங்கை மற்றும் ஆஸ்திரேலிய அணிகள் 1996 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17ஆம் திகதி லாகூரில் ஆரம்பித்து இந்தப் போட்டி. சுண்டினார் நாணயத்தை ரணதுங்க. வென்றது இலங்கை அணி. ஆஸியைத் துடுப்பெடுத்தாடும்படி பணித்தார் அர்ஜுன ரணதுங்க. வழமையான ஆரம்பம் ஆஸி. மாக்ரெயிலருடன் மாக்வோவ் களமிறங்கினார். இலங்கையின் பந்துவீச்சு ஆரம்பமாகியது. அதிரடியுடன் ஆரம்பித்தார் ரெயிலர். அணிக்கு அரைச்சதம் இட்டு ஆறுதலளித்தார். மறுமுனையில் மாக்வோவின் விக்கெட்டைப் பதம் பார்த்தார் வாஸ். ரெயிலருடன் இணைந்தார் பொண்டிங். என்றாலும் சில்வா மிரட்டினார். ரெயிலர் 74ஓட்டங்களுடன் பொண்டிங் 45 ஓட்டங்களுடன் விக்கெட்டை இழந்தனர். ஸ்ரீவ்வோவ் ஷேன்வோர்ன் களத்துக்கு வந்தனர். வோர்ன் முரளியின் பந்துவீச்சில் களுவித்தாரணவால் 'ஸ்ரம்ப்' செய்து வெளியேற்றப்பட்டார். துடுப்பெடுத்தாட இறங்கினார் ஸ்ருவர்ட்லோ. அதிரடியாக ஓட்டங்களை எடுத்தார். இவருக்கு எமனாக ஜெயசூரிய விக்கெட்டைப் பறித்தெடுத்தார். மைக்கல் பெவன் ஆட்டத்தை ஆரம்பித்தார். அவரால் முடிந்தது 2 பவுண்டரிகளுடன் 36 ஓட்டங்களே மறுமுனையில் ரவில் 13 ஓட்டங்கள். ஆஸியின்ஆட்டம் முடிவுக்கு வந்தது. பந்துவீச்சில் இலங்கை அணியில் அரவிந்த டீ சில்வா மூன்று, ஜெயசூரியா, வாஸ், முரளிதரன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினார்கள்.

கிண்ணத்தைக் கைப்பற்றுவது இலங்கையின் இலக்கு. ஆனாலும் அதிரடி மன்னன் ஜெயசூரியா வந்த வேகத்தில் ரன் அவுட்டானார். குருசிங்க ஆறுதலாக அடித்தெடுத்தார். ஓட்டங்கள் இடையிடையே எல்லைக்கோட்டுக்குச் சென்றன. பந்துகள் இவரின் விக்கெட்டைப் பதம்பார்த்தன. ரீபல் அரைச்சதம் கடந்து பவிலியன் திருப்பினார். தடுமாறியது இலங்கை அணி. அரவிந்த டீ சில்வாவுடன் கைகோர்த்தார் ரணதுங்க. இருவரும் பொறுப்புணர்ந்து ஆடினார். சதமடித்து கலக்கினார் அரவிந்த. உறுதுணையாக தலைவர் ரணதுங்க விக்கெட்டுகளைக் காப்பாற்றினார். கிண்ணத்தைச் சுவீகரித்தது இலங்கை.

பந்துவீச்சில் பிளமிங், ரீபல் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட் கைப்பற்றினார்கள். ஆட்டத்தின் திசையைத் திருப்பி வெற்றி பெற்றுக் கொடுத்த ஆட்டநாயகன் அரவிந்த டீ சில்வா.

இதைப் பின்பற்றி இன்றைய இலங்கை அணியும் பல வெற்றிகளைக் குவித்து வருகின்றது. இந்த நிலையை 2011இல் இலங்கை அணியிடம் வீழ்வது உறுதியாகியுள்ளது. இலங்கை அணியில் எதிர் அணியைத் திணறடிக்கக் கூடிய வீரர்களின் கைவரிசை காணப்படுகின்றது. அதிரடி யாக ஆடி ஓட்டங்கள் குவிப்பதற்கு டில்ஷானும் சரவெடிக்கு மத்யூஸும் வேகப்பந்துக்கு மலிங்க, குலசேகர, பெரேரா கூட்டணியும் வெற்றிகளைப் பெற உதவும். எனவே குமார் சங்கக்கார தலைமையிலான இங்கை அணி 2011 இல் உலகக் கிண்ணத்தை கைப்பற்றும் என உறுதியாகக் கூறலாம். இம் முறை இலங்கை அணியில் சுழற் பந்து வீச்சில் முரளி, மெண்டிஸ், ஹேரத் ஆகியோர் கலக்குவார்கள். ஆட்டத்தின் போக்கை மாற்றும் வல்லமை இலங்கை அணி யிடம் உண்டு. உதாரணமாக ஆஸ்திரேலியாவில் சொந்த மண்ணில் இலங்கை அணி மண் கவ்வ வைத்தது. பந்துவீச்சாளரும் துடுப்பாட்ட வீரராக முடியும் என்பதற்கு மலிங்கவை ஒப்பிடமுடியும். ஆஸ்ரேலியாவுக்கு எதிராக சென்றவருடம் நடைபெற்ற போட்டியில் ஆஸ்ரேலியா 210-7 என்ற இலக்கை நிர்ணயித்தது. இந்த இலக்கை துரத்திய இலங்கை அணி107-8 என்ற இக்கட்டான நிலையில் இருந்த போதும் மத்யூஸ்-மலிங்க இணைப் பாட்டத்தின் மூலம் 211-8 என்று இலக்கை தாண்டி இலங்கைஅணிவெற்றி பெற்றது. இதில் மலிங்க 55 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.எனவே உலகக் கிண்ணப் போட்டியில் பந்து வீச்சாளர்களும் துடுப்பாட்டக்காரர்களும் இலங்கை அணிக்கு பெரிதும் உதவவேண்டும்.அப்போது இலங்கை அணி கிண்ணத்தைக் கைப்பற்றும் என்பதில் எவ்வித சந்தேகமும்இல்லை.

**இ.வசந்ராம்.**
*கச்சாய் வீதி*
*சாவகச்சேரி.*







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பெண்களே அதிகமான குடும்பங்களைப் பராமரிக்கின்றனர்

## அரச மதிப்பாய்வில் தகவல்

இலங்கையின் சனத்தொகை மற்றும் புள்ளிவிவரத் திணைக் களத்தினால் இம்மாதம் வெளியிடப்பட்ட குடும்ப வருமானம் மற்றும் செலவினத்திற்கான 2009/2010 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வை மேற்கோள் காட்டிய அறிக்கையின் பிரகாரம் ஆண்களை விட பெண்களே அதிகமாகக் குடும்பப் பராமரிப்பில் ஈடுபட்டுள்ளனர் என்பது புலனாகிறது.

2009 இல் குடும்பப் பெண்களின் சனத்தொகை 52.8 மில்லியனாகவும், ஆண்களின் சனத்தொகை 47.2 மில்லியனாகவும் இருந்தது. பின்னர் 2006-2009 வரையிலான காலப்பகுதியில் இவ்விகிதாசாரங்களில் பெரியளவில் மாற்றமெதுவும் இடம் பெறவில்லை. எவ்வாறாயினும் ஆண்களின் சனத்தொகையில் ஒரு சிறிய வீழ்ச்சியுள்ளதையே புள்ளிவிவரம் காட்டுகின்றது.

கிராமப் புறங்களிலேயே 80 வீதமானோர் வசிக்கின்றனர். அதிலும் சிறீலங்காவின் சனத்தொகைப் பரிமாணத்தில் 15 தொடக்கம் 59 வயதுக்கிடைப்பட்டவர்களின் எண்ணிக்கை 62.9 வீதமாக உள்ளது. மேலும் 60 களுக்கு மேற்பட்டோரின் தொகை தோட்டப்பகுதிகளில் நாட்டின் ஏனைய பகுதிகளை விடக் குறைவாகவே உள்ளது. அத்துடன் 15 வயதுக்குட்பட்ட பிள்ளைகளின் சனத் தொகையின் விகிதாசாரம் தோட்டப் பகுதிகளில் உயர்வாகவே உள்ளது. 6 ஆம் தரம் தொடக்கம் 10 ஆம் தரம் வரையில் கல்வி கற்கும் பருவத்தினை எய்தியவர்கள் உட்பட 5 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களின் விகிதா சாரம் நாடளாவிய ரீதியில் 43.5 வீதமாக உள்ளது. அன்றியும் க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் விகிதாசாரத்தை 15.6 வீதமாக கொண்ட நகர்ப்புறங்களையே பெரிதும் படித்தவர்கள் வசிப்பதற்குத் தெரிவு செய்கின்றனர். தோட்டப் பகுதிகளில் 4.2 வீதமானோரே க.பொ.த (உ/த) தரத்தினை அடைந்துள்ளனர். அதிலும் 8.8 வீதமானோர் என்றுமே பாடசாலைக்குச் சமுகமளித்ததில்லை. சனத்தொகையில் 57.6 வீதமானோர் திருமணம் புரிந்துள்ளார்கள் எனவும் 34 வீதமானோர் திருமணமே புரியவில்லையெனவும் இம் மதிப்பாய்வு தெரிவிக்கின்றது. ஒவ்வொரு 100 பேருக்கும் 7 பேருக்கு மேலானோர் விதவையாக்கப்பட்டுள்ளனர். அத்துடன் ஒரு வீதமானோர் விவாகரத்துப் பெற்றும் அல்லது பிரிந்தும் உள்ளனர் என 2009 இன் தேசிய மட்ட ரீதியான ஆய்வு தெரிவிக்கின்றது. பெண்கள் தலைமை வகிக்கும் குடும்பங்களில் 5 நபருக்கு ஒருவர் என்ற ரீதியில் 15 வீதமானோர் விதவைகளாவர்.

**பெண்களின் நிலைமை**

அத்துடன் பெண்களின் நிலைமை சிறீலங்காவின் 5 மில்லியன் குடும்பங்களில் 23 வீதமான குடும்பங்கள் (1.1மில்) பெண்களைத் தலைமை வகிக்கும் குடும்பங்களாகக் கொண்டுள்ளன. அன்றியும் குடும்பத் தலைமை வகிக்கும் பெண்கள் 40-59 வயதுக்கிடைப்பட்டவர்களாகவுள்ளார்கள். சிறீலங்காவின் பெண்கள் 50 வீதமானோர் விதவைகள், அத்துடன் 4.5 வீதமானோர் மீண்டும் திருமணம் செய்யவில்லை. கல்வியமைச்சின் ஆரம்பக் கல்விப்பதிவின் பிரகாரம் 83 வீதமான சிறுவர்கள் ஆரம்பக் கல்வியைப் பெறத் தகுதியுடைய வயதடைந்தவராக உள்ளனர். 5 வயது தொடக்கம் 14 வயது வரையில் ஆரம்பக் கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. எனினும் இவ்வயதெல்லைக் கிடையில் உள்ள 2.96 மில்லியன் சிறுவர்களில் 2.94 மில்லியன் மாணவர்கள் மாத்திரமே தற்பொழுது பாடசாலைகளுக்குச் சமுகமளிக்கின்றனர் என இம் மதிப்பாய்வு தெரிவிக்கின்றது (99.4 வீதம்) 0.4 வீதமானவர்கள் கடந்த காலங்களில் சமுகமளித்தனர் அத்துடன் 0.2 வீதமானோர் என்றுமே எந்தப் பாடசாலைக்கும் செல்லவில்லை.

# எமது பையிலுள்ள பணத்தை அரசு கையாடி வருகிறது — ஜே.வி.பி உறுப்பினர்

எமக்கு அறியாத வகையில் எமது பையிலுள்ள பணத்தை அரசு கையாடி வருகிறது. அபராதம் விதிக்கப்படுகின்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளன. பொருள்கள் கொள்வனவு செய்வதற்கு கடைகளுக்குச் சென்றால், நாம் செலுத்தும் பணத்தில் அரைவாசிப் பகுதி அரச வரியாகக் காணப்படுகின்றது. என்று ஜே.வி.பியின் காலிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஜித்குமார நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

வரிவிதிப்பு விசேட ஏற்பாடுகள் தொடர்பான 16 கட்டளைகளை அங்கீகரிப்பதற்கான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

ஆயிரம் ரூபாவுக்கு அன்று ஒரு லொறி நிரம்பும் அளவுக்கு பொருள்களைக் கொள்வனவு செய்தோம். ஆனால் அதே ஆயிரம் ரூபாவுக்கு ஒரு 'சொப்பிங் பாக்' அளவுக்குக் கூட பொருள்களை கொள்வனவு செய்ய முடியவில்லை.

குப்பைகளுக்குக் கூட இன்று அபராதம் விதிக்கப்படுகிறது. வீட்டு முற்றங்களில், பாதைகளில் குப்பை கொட்டினால் அபராதம் விதிக்கின்றார்கள். ஆனால் நகர சபைகளில் சேமிக்கப்படும் குப்பை கூளங்கள் மலையாகக் குவித்து விடப்பட்டுள்ளன.

சுற்றாடல் அதிகார சபையின் பணிகளை இன்று பொலிஸார் பொறுப்பேற்றுள்ளனர். கல்வித்துறை மற்றும் சுகாதாரத் துறைக்கு ஒதுக்கப்படும் நிதி குறைக்கப்படுகிறது.

நாட்டைச் சுற்றி கடல் சூழ்ந்துள்ளது. ஆனால் இந் நாட்டுக்குத் தேவையான கருவாடுகளை வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்கின்றோம் - என்றார். (ஒ-5)

# அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றின் விலைகள் குறைவு

அரிசி, கிழங்கு, வெங்காயம், கோழி இறைச்சி, முட்டை, நெத்தலி உட்பட பல அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் சந்தையில் வீழ்ச்சியடைந்துள்ளன.

இதற்கமைய சம்பா அரிசி கிலோவொன்று 68 ரூபாவாகவும், கோழியிறைச்சி 280ரூபாவுக்கும் 320 ரூபாவுக்கும் இடையிலும் முட்டை 12 ரூபா 50 சதத்துக்கும் நெத்தலி 326 ரூபாவுக்கும் உ.கிழங்கு 60 ரூபாவுக்கும் பெரியவெங்காயம் 60 ரூபாவுக்கும் விற்கப்படுகின்றன.

அரசாங்கம் நுகர்வோரின் நலனில் அக்கறை கொண்டு அவர்களைச் சுரண்டும் வர்த்தகர்களின் மீது மேற்கொள்ளும் அதிரடி சுற்றி வளைப்புக்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுமென கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம-5)

# புதிய மனித உரிமை ஆணைக்குழுவின் முதலாவது அமர்வு இன்று

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மனித உரிமை ஆணைக்குழுவின் முதலாவது அமர்வு இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. 18ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் அமையப் பெற்ற நாடாளுமன்ற சபையால் மனித உரிமை ஆணைக்குழுவின் உறுப்பினர்களினது பெயர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவிற்கு முன்மொழியப்பட்டுள்ளன.

ஓய்வுபெற்ற நீதியரசர் பிரியந்த பெரேரா தலைமையிலான இந்த ஆணைக்குழுவுக்கு தென்கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் வேந்தர் கலாநிதி ஜெசீமா இஸ்மாயில், முன்னாள்பொலிஸ்மா அதிபர் ரி. ஆனந்தராஜா, முன்னாள் அரச பகுப்பாய்வாளர் நாயகம் கலாநிதி ஆனந்த மென் டிஸ் மற்றும் பேர்னாட் சொய்ஸா ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

இவர்களுக்கான நியமனத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

**Short Period success**

இளைஞர், யுவதிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். சாவகச்சேரியில் உள்ள Innovage (Multinational) கம்பனிக்கும் அதன் புதிய கிளைகளுக்கும் முகாமைத்துவத்துக்கான ஆட்சேர்ப்புக்கள் இடம்பெறுகின்றன. தாங்களும் O/L, A/L சித்தி பெற்றிருப்பின் விண்ணப்பிக்கலாம். சர்வதேச ரீதியான பயிற்சியுடன் உயர்வான சம்பளமும் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: Udaya: 0717494735, Srikanth:0770771377

මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

22.02.2011

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2361

வெற்றி எழுத்து: L
வெற்றி எண்கள்: 3 2 3 2 7 6

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | L 3 2 3 2 7 6 | ரூபா.16,679,737/= | பரிசு - |
| 1 பரிசுகள் | 3 2 3 2 7 6 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | 2 3 2 7 6 | ரூபா. 100,000/= | பரிசுகள் 11 |
| 3 பரிசுகள் | 3 2 7 6 | ரூபா. 10,000/= | பரிசுகள் 127 |
| 4 பரிசுகள் | 2 7 6 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1364 |
| 5 பரிசுகள் | 7 6 | ரூபா. 100/= | பரிசுகள் 13309 |
| 6 பரிசுகள் | 6 | ரூபா. 20/= | பரிசுகள் 132516 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 3 2 3 2 7 | ரூபா. 10,000/= | பரிசுகள் 13 |
| 8 பரிசுகள் | 3 2 3 2 | ரூபா. 1,000/= | பரிசுகள் 137 |
| 9 பரிசுகள் | 3 2 3 | ரூபா. 100/= | பரிசுகள் 1339 |
| 10 பரிசுகள் | 3 2 | ரூபா. 50/= | பரிசுகள் 13268 |
| 11 பரிசுகள் | L | ரூபா. 20/= | பரிசுகள் 53007 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 13,839,660.00

அடுத்த சீட்டிழுப்பிற்கான சுப்பர் பரிசு Rs. 17,044,884.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631

# ஈராண்டு நினைவலைகள்

அமரர் பத்மராஜா மிலோர்த்தி



உதிப்பு 14.08.1988

அழிப்பு 24.02.2009

இருவிழி மூடி ஈராண்டும் ஆனதுவோ இரு நிமிடம் கூட மறந்ததில்லை - உன் நினைவை
இரு விழி நீர் ஓயவில்லை - நின் பிரிவால் இரு வருடம் கழிந்தாலும் வார்த்தைகளோ ஓயவில்லை
உன் துணையைத் தேற்ற ஆளில்லை - அம்மா உனையிழந்து உன் குடும்பம் நடைப் பிணமாய் அலைகிறது
உன் வரவை எதிர்பார்த்து நின் மகனும் ஏங்குகிறான் உன் இழப்பை எதிரி கூட ஏற்கவில்லை அம்மா;
சித்திரம் போல் சிரித்து நின்ற உன்னழகைச் சிலை வடிவில் பார்த்திட நாம் என்ன பாவம் செய்தோமம்மா
உன் ஆற்றல் அனைத்தையுமே உன் மகனில் காண்கிறோம்
எமைக் காக்கும் தெய்வமாக விண்ணுலகில் வாழ்ந்திடுவாய்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நின் பிரிவால் கலங்கி நிற்கும் உன் உறவுகள்
கணவர் ப. பத்மராஜா, மகன் ப. கோபிநாத்
அப்பா, அம்மா, தம்பி - சஜித், தங்கை - சூசானி,
மாமா, மாமி, மைத்துனர், உறவினர்

இருபாலை வீதி, கோண்டாவில்.
ஆனைவிழுந்தான்,
[illegible]ம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# தட்டிக்கழித்தலின் நீட்சி

தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காக சகல தமிழ்க் கட்சிகளுடனும் பேசுவோம். ஆயினும் துப்பாக்கி முனையில் தமிழீழ விடுதலைப் புலிகள் கேட்டதை இந்தக் கட்சிகளும் கேட்டால் அவற்றுக்கு கிடைக்கவே கிடைக்காது.

இவ்வாறு பத்திரிகை ஆசிரியர்களிடம் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

புலிகளின் தமிழீழப் போராட்டத்துக்கு முடிவு கட்டி, தமிழ் மக்களை துன்பச் சூழலில் இருந்து மீட்டுள்ளோம். அவர்கள் சமாதானக் காற்றைச் சுவாசிக்கிறார்கள், சுதந்திரமாக இருக்கிறார்கள், அவர்களின் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. மேலும் தீர்க்க வேண்டிய பிரச்சினைகள் இருப்பின் அவற்றையும் தீர்ப்பதற்காகத் தமிழ் கட்சிகளுடன் பேச இருக்கிறோம் - என்றும் கூறியுள்ளார் ஜனாதிபதி.

தமிழ் மக்களின் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன என்று ஜனாதிபதி கூறினாலும் அவை ஒரு சிலவே என்பதும் நாளாந்த வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட பல முக்கிய பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை, அவற்றில் சில சிறு விடயங்களிலேயே முன்னேற்றம் உண்டு என்பதனையும் தமிழ் மக்கள் - எமது வாசகர்கள் - அறிவார்கள்.

அது மட்டுமன்றி, தமிழ் மக்களின் முதன்மைப் பிரச்சினையான அரசியல் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் ஜனாதிபதி - அரசாங்கம் - ஓர் அங்குலம் தானும் முன்னே காலடி எடுத்து வைக்கவில்லை. விடுதலைப்புலிகள், தமிழ்ப் பிரதேசங்கள் பலவற்றில் 'ஆட்சி' நடத்திய வேளையில் நின்ற அதே புள்ளியிலேயே அரசு இன்னமும் நிற்கிறது.

ஜனாதிபதி உட்பட அரச முக்கியஸ்தர்கள் இந்தியா உட்பட வெளிநாடுகளுக்கு விஜயம் செய்யும் வேளைகளில் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு 'நியாயமான' தீர்வு ஒன்றை வெகுவிரைவில் கண்டுவிடப் போவதாக மேனிமினுக்கிப் பேச்சுக்களையும் கருத்துக்களையும் தெரிவிப்பது கீறல் விழுந்த இசைத் தட்டுப் போலாயிற்று.

ஆனால் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வு முயற்சி என்பது இன்னமும் அடிப்பெட்டியிலேயே கிடக்கிறது. தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு என்பதும், அதன் மூலம் நியாயமான தீர்வு என்பதும் வெறும் காலம் கடத்தும் தந்திரமாகவே தொடர்கிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பதவிக் காலத்தில் உருவாக்கப்பட்ட அனைத்துக் கட்சி மாநாட்டின் சில்லறைச் சிபார்சுகள் குப்பைக் கூடைக்குள் எறியப்பட்டனவா? அவற்றின் மேல் பூனை உறங்குகிறதா? என்று கேட்க வேண்டிய நிலை.

இந்த இலட்சணத்தில் சகல தமிழ்க் கட்சிகளுடனும் பேசுவோம் என்பதும் அவை நியாயமான கோரிக்கைகளை முன்வைக்கும் பட்சத்தில் அவற்றை நிச்சயமாக நிறைவேற்றுவோம் என்பதும் பழமையான காலங்கடத்தும் தந்திரம் என்பது தமிழ் மக்களுக்குத் தெரியாத ஒன்றல்ல. ஜனாதிபதியும் அவரது அரசாங்கத்தினரும் தமிழருக்கு அரசியல் தீர்வு ஒன்றை விரைந்து வழங்க வேண்டும் என்பதில் இதய சுத்தியுடன் செயற்பட முனைந்துள்ளனர் என்று கொண்டாலும் -

எத்தகைய தீர்வை உருவாக்குவது என்பது பெரும் கேள்விக் குறியே. சமஷ்டி முறையிலான ஆட்சி முறைக்கு ஐ.தே.கட்சியின் தலைவர் இணங்கிவிட்டார் என்ற பிரதான பிரசாரத்தை முடுக்கி விட்டே ஜனாதிபதி மகிந்தாவின் அரசு 2006 இல் பதவிக்கு வந்தது.

ராஜீவ் - ஜே.ஆர் ஒப்பந்தத்தின்கீழ் வகை செய்யப்பட்ட அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தைக்கூட உரிய அளவுக்கு நடைமுறைப்படுத்த விரும்பாத இப்போதைய அரசு -

அதில் வாக்குறுதி அளிக்கப்பட்ட மாகாண சபைகளுக்கான பிரதான அதிகாரங்களை அரசமைப்புச் சட்டத்துக்கான பதினெட்டாவது திருத்தச் சட்டத்தின் ஊடாக விழுங்கி விட்ட மஹிந்த அரசு -

தமிழ் மக்களுக்குத் தரப்போகும் அரசியல் தீர்வு குறித்த 'மூலக்கரு'தானும் அரச தரப்பில் இருந்து இன்னும் வெளிப்படவில்லை. தமிழ் மக்களுக்குப் புதிதாக எந்த அரசியல் தீர்வும் தேவையில்லை என்று தெரிவிக்கும் ஹெல உருமய போன்ற கட்சிகளைக்கட்டி அணைத்துக் கொண்டிருக்கும் மஹிந்த அரசு, தமிழர்கள் தமக்குரிய ஜனநாயக உரிமைகளை அனுபவிக்க, ஆட்சி உரிமைகளை அனுபவிக்க வகை செய்யும் என்று எதிர்பார்க்க முடியவில்லை.

காலத்துக்கு காலம் வெறும் பம்மாத்துக்காக, உலக நாடுகளுக்காக, ஒப்பியாசாரத்துக்காக தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் ஆர்வம் உண்டு என்று வெளிப்படுத்துவதற்காக இந்த விடயத்தை நீட்சிப் படுத்தும் உள்நோக்கத்துடன் வெளியிடப்படும் கருத்துக்களில் ஒன்றே ஜனாதிபதி மஹிந்தவின் இந்தப் பிந்திய அறிவிப்பும்.

சமஷ்டி ஆட்சி முறை வேண்டும் என்ற தந்தை செல்வாவின் அடிப்படைக் கோட்பாட்டை (பண்டா - செல்வா ஒப்பந்தத்தை முறியடித்து) சிங்கள அரசுத் தலைவர்கள் நிராகரித்ததில் இருந்தே, தமிழர்களின் அரசியல் போராட்டமும் அதன் பின்னரான ஆயுதப் போராட்டமும் ஆரம்பித்தன என்பதைச் சிங்களத் தலைவர்கள் உள்வாங்கிக் கொண்டு செயற்படாமல் தட்டிக்கழிக்கும்வரை, ''மூக்குள்ள வரை சளி'' என்ற நிலையே தொடரும் என்பதனை உணரும்வரை, இந்த இழுத்தடிப்புகள் தொடரவே செய்யும். இதனை அவர்கள் உணர்வது எப்போதோ?

# பாஷையூர் கடற்கரையில் விரைவில் புதிய இறங்குதுறை

யாழ்ப்பாணம், பெப். 24

பாஷையூர் கடற்கரையில் இறங்கு துறையை அமைப்பதற்கான பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்குத் தேவையான கருங்கற்கள் எடுத்து வரப்பட்டு அங்கு குவிக்கப்பட்டுள்ளன. கனரக வாகனங்கள் மூலம் இந்த கருங்கற்கள் தினமும் அங்கு கொண்டுவரப்படுகின்றன.

தற்போது இறங்குதுறைக் கட்டுமானப் பணிகளுக்கு முன்னர் கடலோரப்பகுதியை ஆழமாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாஷையூர் கடற்கரையில் இதுவரை காலமும் இறங்குதுறை வசதி இல்லாமையால் மீனவர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

மீனவர்கள் தமது மீன்பிடிப் படகுகளை கரைக்குக் கொண்டு வந்து நங்கூரமிடுவதிலும், கடற்றொழில் உபகரணங்களைப் படகுகளில் ஏற்றுவதிலும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-26)

# பாடசாலை மாணவர்களுக்கு காலை உணவுடன் ரின்மீன்

வடமராட்சி, பெப். 24

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கும் திட்டத்தின் கீழ், காலை உணவுடன் ரின் மீன் வழங்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட செயலக புனர்வாழ்வு புனரமைப்புப் பிரிவினால் முன்னர் சமைத்த உணவுடன் மீன் வழங்கிய பாடசாலைகளுக்கு, பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக மீன் ரின்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஒரு மாணவனுக்கு 8.5 கிராம் வீதம் காலை உணவுடன் மீன் வழங்குமாறு பணிக்கப்பட்டுள்ளது. (த-236)

## அனுமதியின்றி மரம் ஏற்றிய ஐவருக்கு நீதிமன்றம் அபராதம்

தென்மராட்சி, பெப்.24

அனுமதியின்றி மரங்கள் ஏற்றி வந்த ஐவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த 22ஆம் திகதி இரண்டு லட்சத்து 10ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

வழக்குகளை விசாரித்த நீதிவான் மா.கணேசராசா பனை மரங்களை ஏற்றி வந்த மூவருக்கு தலா 20ஆயிரம் ரூபா வீதம் 60ஆயிரம் ரூபாவும், பாலை மரம் ஏற்றி வந்த இருவருக்கு தலா 75 ஆயிரம் ரூபா வீதம் ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. (த-207)

## வடமராட்சி கல்வி வலயத்துக்கு நிதி ஒதுக்கீடு

வடமராட்சி,பெப்.24

வடமராட்சி வலயத்தில் கல்வி நடவடிக்கையை விஸ்தரிக்கும் பொருட்டு வடமாகாணக் கல்வித் திணைக்களம் ஒரு லட்சத்து 25ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த நிதியிலிருந்து ஆசிரியர்களுக்கான உட்படுத்தல்கள், விழிப்புணர்வு செயலமர்வு, விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டி, சிறுவர் முகாம், மருத்துவ முகாம் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார். (த-236)

# நாட்டின் தலைமைப் பதவிக்கு ஆயத்தமாகும் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, பெப். 24

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பின் நாட்டின் தலைமைத்துவப் பதவியைப் பொறுப்பேற்றுக் கொள்ளும் வகையில் நாமல் ராஜபக்ஷவைப் புடம் போடும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

அதன் முதற்கட்டமாக இம்முறை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலின் போது ஜனாதிபதி பங்கேற்கும் பிரசாரக் கூட்டங்கள் மட்டுப்படுத்தப்படவுள்ளன. குறிப்பிட்ட சில கூட்டங்களில் மாத்திரமே அவர் பங்கேற்கவுள்ளார்.

ஆயினும் தனக்குப் பதிலாக நாமல் ராஜபக்ஷவை நாடு முழுவதும் நடைபெறும் பிரசாரக் கூட்டங்களுக்கு அழைத்துச் செல்லுமாறு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்தவுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

அதன் மூலம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் வெற்றியில் நாமலின் பங்களிப்பு பெரிதாக எடுத்துக்காட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதன் பின் தேர்தலையடுத்து நடைபெறவுள்ள பிரதமர் மற்றும் அமைச்சரவை மாற்றத்தின் போது மிகப் பெரும் பொறுப்பொன்று நாமல் ராஜபக்ஷ வசம் ஒப்படைக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் மூலம் தெரிய வருகின்றது. (த)

# தெய்வீகம்

ஒரு தம்ளரில் தண்ணீர் இருக்கின்றது. சர்க்கரை தம்ளர் அடியில் தேங்கி இருக்கிறது. மேற்புறத்தில் உள்ள தண்ணீரைக் குடித்தால், அதற்குச் சுவையே இல்லை.

கடவுள் ''பித்தா உலக இன்பங்களும் மகிழ்ச்சியும் சுவையற்றவை என்று தெரிந்து கொள்'' என்று கூறுகிறார். இவையெல்லாம் மனதின் மூலம் கிடைக்கும் அனுபவங்கள். புத்தி என்ற கரண்டியை எடுத்து தம்ளருக்குள்ளே செலுத்தி, தண்ணீரை நன்கு கலக்கு. சர்க்கரை தண்ணீரில் முழுதும் கரைகிறது. சர்க்கரை தண்ணீர் முழுவதும் மேலும் கீழும் சுற்றிலும் பரவியிருக்கிறது. இருப்பது ஒரே உண்மைதான். அதுவே இதயத்தின் அடித்தளத்தில் உள்ள தெய்வீகம் என்ற சர்க்கரை. உலக ஆசைகள் என்ற தண்ணீரால் எமது இதயத்தை நிரப்பியிருக்கிறோம். எல்லாவற்றையும் நன்கு கலந்துகொள். தெய்வீகம் வேறுபாடில்லாது எல்லாவற்றுடனும் கலந்து விடுகிறது. தண்ணீர் இனிப்பாக மாறுகிறது. உலகத்துக்கும் ஆன்மீகத்துக்கும் வேறுபாடில்லை.



(நன்றி: சாயி அருளமுதம்)

சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்துக்கான கடன் வழங்கலை இரட்டிப்பாக்குகிறது இலங்கை வங்கி

அச்சுவேலி, பெப்.24

யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் இலங்கை வங்கியின் செயற்பாடுகள் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளன.

இலங்கை வங்கியினால் கடந்த வருடம் 14 ஆயிரம் மில்லியன் ரூபா யாழ்ப்பாணத்தில் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இந்த வருடம் இந்தத்தொகை மேலும் ஒரு மடங்கு அதிகரிப்புச்செய்யப்பட்டு மக்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு இலங்கை வங்கியின் தலைவர் டாக்டர் காமினி விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அச்சுவேலி இலங்கை வங்கி கடன் வழங்கல் மற்றும் சுய முயற்சியாளர்களுக்கான கொடுப்பனவு வழங்கல் தொடர்பான நிகழ்வுகள் ஆவரங்கால் சிவ சக்தி மணிமண்டபத்தில் அச்சு வேலி இலங்கை வங்கி முகாமையாளர் த.புவனேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் தலைவர் டாக்டர் காமினி விக்கிரமசிங்க கலந்துகொண்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

யாழ்ப்பாண மக்கள் தொழில் முயற்சியால் மேம்பட்டவர்கள். அவர்களின் தொழில் முயற்சிகள் மரபுரீதியான முறையில் இருந்து காலவோட்டத்துக்கு ஏற்ப நவீனத்துவத்துக்கு மாற்றப்பட வேண்டும். அவ்வாறு மாற்றுவதன் மூலம் மக்களின் முயற்சிக்கும் நாட்டின் வளத்துக்குமான பயனைப்பெற்றுக் கொள்ள முடியும். யாழ்.மாவட்ட மக்களின் அனைத்துப் பொருளாதார முயற்சிகளுக்கும் இலங்கை வங்கி கைகொடுத்து உதவும்.

தென்னிந்தியாவில் விவசாய பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கான நீர்பாசன முறையில் கையாளப்படும் நவீனமுறைகள் பயிர்ச் செய்கை மூலம் பெறப்படும் வருமான வீதத்தை அதிகரிக்கச் செய்துள்ளன. அத்தகைய முறைகளை யாழ்ப்பாண விவசாயிகளும் கையாண்டு தமது விவசாய முயற்சிக்கான பயனை மேல் நிலைப்படுத்த வேண்டும். தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் 35 ஆயிரம் மில்லியன் ரூபாவை வாடிக்கையாளர்கள் இலங்கை வங்கியில் வைப்புச் செய்துள்ளனர்.

14 ஆயிரம் மில்லியன் கடன் உதவியாக வழங்கப்பட்டுள்ளது. இந்தவருடம் யாழ்.மாவட்டத்துக்கான கடன் எல்லை 28 ஆயிரம் மில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடனுதவிகளை யாழ். மாவட்ட மக்கள் இலங்கை வங்கிக்கிளைகள் ஊடாகப் பெற்று தமது வாழ்வாதார முயற்சிகளை மேற்கொள்வதோடு வைப்புக்களையும் இலங்கை வங்கியில் செய்துகொள்ள முன்வர வேண்டும்- எனத் தெரிவித்தார். (த-11)

## விசேட தேவையுள்ள மாணவர்களை இணைத்துக் கொள்க

வடமராட்சி, பெப்.24

வடமராட்சிக் கல்வி வலயப் பிரிவில் உள்ள பாடசாலைகளில் சேர்க்கப்படாதுள்ள விசேட தேவையுடைய மாணவர்களை அவர்களுக்கான எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் விசேட தேவையுடைய மாணவர்களுக்கென ஒதுக்கப்பட்ட பாடசாலைகளில் சேர்த்துக்கொள்ளுமாறு வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வே.செல்வராசா அறிவித்துள்ளார்.

விசேட தேவையுடைய மாணவர்களுக்கென வடமராட்சிப் பிரதேசத்தில் புலோலி மெ.மி.த.க பாடசாலை, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம், ஆழியவளை பாடசாலைகள் ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (த-236)

## தொழில் நுட்பக் கல்லூரியின் புதிய கட்டடத் திறப்பு விழா

சண்டிலிப்பாய், பெப். 24

கொக்குவிலில் உள்ள யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியின் புதிய கட்டடத் திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11.மணிக்கு வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்படவுள்ளது.

கொரியக் குடியரசினால் வழங்கப்பட்ட 230 லட்சம் ரூபா நிதியில் நவீனமுறையில் அமைக்கப்பட்டுள்ள இரு மாடிக் கட்டடத்தை, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ஷ திறந்துவைத்து மாணவரின் உபயோகத்துக்காகக் கையளிப்பார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மஹிந்த சிந்தனையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இக் கட்டடத்தின் திறப்புவிழாவில் இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கைக்கான கொரியக் குடியரசின் தூதுவர் சொய்கிசுல், இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்திப் பிரதியமைச்சர் துமிந்த திசாநாயக்க ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்தத் திறப்புவிழாவை முன்னிட்டுப் பாதுகாப்புப் படையினர் உட்பட பொது மக்களும் இணைந்து இரத்த தானம் செய்யவுள்ளனர். (த-115)

## ஒளிமயமான எதிர்காலம்....



ஊக்குவிப்போம்: சிறுப்பிட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்ற தரம் I மாணவர்களுக்கான கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.ஸ்ரீரங்கா உள்ளிட்ட விருந்தினர்கள், தரம் -I மாணவர்கள் ஆகியோர் மாலை அணிவித்து வரவேற்கப்படுகின்றனர். (த-11)

## மானிப்பாய் - கோண்டாவில் வீதியை அகலிப்பதற்கு மக்கள் பூரண ஆதரவு

சண்டிலிப்பாய், பெப். 24

வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் மானிப்பாயிலிருந்து சுதுமலை, இணுவில் ஊடாகக் கோண்டாவில் செல்லும் வீதியை அகலமாக்கித் திருத்தி அமைப்பதற்கு அந்தப்பகுதி மக்கள் பூரண ஆதரவு வழங்கியதைத் தொடர்ந்து வீதியின் அபிவிருத்தி வேலைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

உலக வங்கியின் நிதியுதவியுடன் 4700 மீற்றர் நீளமான இந்த வீதியை மையத்திலிருந்து இரு பக்கங்களும் 5 மீற்றர் அகலத்துக்கு விஸ்தரிப்பது சம்பந்தமாக அந்தப்பகுதி மக்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது, இதற்கு அவர்கள் பூரண ஆதரவு வழங்கியுள்ளார்கள்.

வலி. தென்மேற்குப் பிரதேச செயலர் தலைமையில் சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பிரதேசசபை உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள் உட்பட இந்தப்பகுதி மக்களும் கலந்து கொண்டனர். (த-115)

## உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு நூற்றாண்டு விழா மண்டபம்

அச்சுவேலி, பெப்.24

உரும்பிராய் இந்துக் கல்லூரி நூற்றாண்டு விழா நினைவு மண்டபம் லண்டன்வாழ் பழைய மாணவன் கந்தசாமி தர்மகுலசிங்கத்தினால் இரண்டு கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

நூற்றாண்டு விழா நினைவு மண்டபம் தனிப்பட்ட ஒருவரின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. 120 அடி நீளம், 47 அடி அகலம் கொண்டதான இந்த இரண்டு மாடிக்கட்டடத்தின் கீழ்த் தளத்தில் கற்றல் செயற்பாடுகளுக்கான கூடங்களும் மேல் தளத்தில் நிகழ்வுகளை நடத்துவதற்கான மண்டபமும் நிர்மாணிக்கப்படுகின்றன. ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் மூன்று தினங்களுக்கு நூற்றாண்டு விழா நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. நூற்றாண்டு விழாவுக்கான ஏற்பாடுகளை நூற்றாண்டு விழாக் குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.

நூற்றாண்டுவிழா மாடிக் கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் துரிதகதியில் நடைபெற்று வருவதாகவும் தனிப்பட்ட முறையில் ஒரு பழைய மாணவன் தனது சொந்தச் செலவில் இந்த மண்டபத்தை நிர்மாணித்து வருவது பாராட்டத்தக்க முயற்சி எனவும் கல்லூரி அதிபர் அ.ஈஸ்வரநாதன் தெரிவித்தார். (த-11)

# ஆசிரியர் பற்றாக்குறையுடன் அச்சுவேலி மத்திய கல்லூரி

அச்சுவேலி, பெப்.24

அச்சுவேலி மத்திய கல்லூரியில் பாடத்துறை ரீதியாக ஆசிரியர் ஆளணிப்பற்றாக்குறை நீண்டகாலமாக நிலவி வருகின்ற போதிலும் கல்வி வலய நிர்வாகம் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்குவதற்குப் பொருத்தமான நடவடிக்கையை இதுவரையும் மேற்கொள்ளாமல் இருந்துவருவது தொடர்பாகப் பெற்றோர்கள், மாணவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அச்சுவேலி மத்திய கல்லூரியில் பாடத்துறைரீதியாக மாணவர் எண்ணிக்கை, வகுப்புகளின் எண்ணிக்கை, விசேட பாடத்துறை ஆசிரியர்கள் என்ற வகையில் ஆசிரியர் ஆளணி சீர்செய்யப்படாமல் இருந்து வருவதால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் பெரும் இடைவெளி ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

கோப்பாய்க் கல்விக்கோட்டத்தில் முன்னணிப் பாடசாலையாகவும் அந்தப் பகுதிக்கான பிரதான பாடசாலையாகவும் பிரதான வீதியோரத்திலும் உள்ள இந்தக் கல்லூரியின் ஆசிரியர் ஆளணியைச் சீர்படுத்துவதில் வலயக் கல்வி நிர்வாகம் ஏற்புடைய நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை எனப் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

க.பொ.த உயர்தர வகுப்பில் கலைப்பிரிவில் பயிலும் அனைத்து மாணவர்களும் தமிழ்ப் பாடத்தைக் கற்று வருகின்ற போதிலும் நீண்டகாலமாக தமிழ் ஆசிரியர் பதவி வெற்றிடமாக இருப்பதால் ஆகஸ்ட் மாதம் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பொருத்தமான கற்றல் செயற்பாட்டுக்கு உள்ளாகாமல் வீணே காலம் கழிக்க வேண்டி இருப்பதாகக் கவலை தெரிவிக்கின்றர்.

பாடசாலை மேற்பார்வை தொடர்பாக வலைய மட்ட கண்காணிப்புக் குழு, க.பொ.த உயர்தர வகுப்பு வழிப்படுத்தல் மேற்பார்வைக் குழு என்பன ஒவ்வொரு தவணையும் பாடசாலைக்கு வருகை தந்த போதிலும் ஆசிரியர் ஆளணியை சீர் செய்வதற்குப் பொருத்தமான ஏற்பாடுகளை மேற்கொள்ளவில்லை எனக்கூறப்படுகின்றது. இந்த விடயம் நலன் விரும்பிகளால் வடக்குமாகாணக் கல்வி அமைச்சின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. (த-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காய்ச்சலால் பீடிக்கப்படும் நோயாளர் அரச வைத்தியசாலைகளை நாடுங்கள்

## அநியாய இறப்புகளைத் தவிருங்கள்

குடாநாட்டில் தற்போது வெவ்வேறு வகையான வைரஸ் காய்ச்சல்கள் மக்களை பீடிப்பதால் காய்ச்சலினால் பாதிக்கப்படுபவர்கள் உடனடியாக அரச வைத்தியசாலைகளில் சிசிக்சை பெறுமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ள னர்.

அவ்வாறு தனியார் வைத்தியசாலைகள், மருந்தகங்கள் போன்றவையும் உயிரிழப்பு ஏற்படும் நேரம்வரை வைத்திருக்காமல் தாங்கள் மேற் கொள்ளும் வைத்திய சிகிச்சைக்கு நோயாளர்களுக்கு ஏற்படும் பாதிப்பு குறையாவிடின் முன்கூட்டியே அரச வைத்திய சாலைக்குச் செல்லுமாறு, அறிவுறுத்துமாறு அவர்கள் கோரி யுள்ளனர்.

காய்ச்சலால் பீடிக்கப்பட்டு தனியார் மருந்தகத்தில் சிகிச்சை பெறும் நோயாளி ஒருவர் இறுதி நேரத்தில் சுவாச நரம்புத் தளர்ச்சி ஏற்பட்ட நிலையில் கடந்த 21 ஆம் திகதி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் மரணமானார்.

சாவகச்சேரி பெருங்குளம் சந்தியைச்சேர்ந்த வாரித்தம்பி ஆறுமுகம் (வயது 46) என்பவரே மரணமானவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர். இந்த மரணம் தொடர்பாக வைத்தியசாலையுடன்தொடர்பு கொண்டபோது மேற்படி விவரங்கள் தெரிவிக்கப்பட்டன. (த-207)

# மல்லாகம் வயல்வெளியில் ஆணின் சடலம் மீட்பு

வலி. வடக்கு, பெப். 24

மல்லாகம் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் வயல் வெளியில், சுமார் முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் பொதுமக்களால் மீட்கப்பட்டது.

மல்லாகம் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள வயல் வெளியில் இவருடைய சடலம் காணப்பட்டது. இவருடைய சைக்கிள் வயல் வெளியில் வேறு ஓர் இடத்தில் காணப்பட்டது.

தெல்லிப்பழை பொலிஸாருக்குக் கிராம அலுவலர் கொடுத்த தகவலின் அடிப்படையில் தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் மல்லாகம் நீதிபதிக்கு அறிவித்ததைத் தொடர்ந்து குறிப்பிட்ட இடத் துக்குச் சென்ற நீதிபதி சடலத்தை பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கும்படி கட்டளை இட்டதன் பெயரில் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் அளவெட்டியைச் சேர்ந்த காந்தன் எனத் தெரிய வருகிறது. (த-15-86)

# யாழ்-கொழும்பு தபால் சேவையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ்-கொழும்பு இடையிலான தபால் சேவைகள் தற்போது துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

கொழும்பில் இருந்து வவுனியாவுக்கு தினமும் ரயில் மூலம் வந்து சேரும் தபால்களை உடனடியாகவே வாகனம் மூலம் யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கானஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேபோன்று யாழ்ப்பாணத்தில் இருந்தும் வாகனம் மூலம் வவுனியாவுக்கு எடுத்துச் செல்லப்படும் தபால்களை ரயில் மூலம் தெற்கே அனுப்பிவைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வவுனியாவில் இருந்து வாகனங்களில் எடுத்துவரப்படும் தபால்கள் பரந்தன் தபாலகத்தில் ஒப்படைக்கப்படுகின்றன. அவற்றை யாழ்.பிரதம தபாலகத்தில் இருந்து செல்லும் வாகனங்கள் இங்கு எடுத்து வருகின்றன.

விரைவில் இதனை வவுனியா வரை நேரடியாக எடுத்துச் செல்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தபால்கள் யாழ்ப்பாணத்திலிருந்து நேரடியாக வவுனியாவுக்கு எடுத்துச்செல்லப்படுமிடத்து தபால்சேவை மேலும் துரிதமடையும் எனவும் அந்த அதிகாரி மேலும் கூறினார். (த-26)

## வளரும் பயிர்...



வழிகாட்டுவோம்: சுன்னாகம் அறிஞர் ஐயன்னா சனசமூக நிலைய முன்பள்ளியில் ஓராண்டு கல்வியைப் பூர்த்தி செய்த சிறுவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வின்போது.

## மாணவனின் சடலம் உரும்பிராயில் மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 24

வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் பாடசாலை மாணவனின் சடலம் உரும்பிராயில் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

ரவிச்சந்திரன் லக்ஷன் (வயது - 16) என்ற மாணவனே தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ஒ-15-311)

# வலி. கிழக்குப் பகுதியில் 14 வீதிகள் விரைவில் திருத்தம்

அச்சுவேலி, பெப்.24

வலி.கிழக்குப் பிரதேச சபையின் எல்லைப்பரப்பில் நெல்சிப் திட்டத்தின்கீழ் 14 வீதிகள் இந்த வருடம் திருத்தி அமைக்கப்படவுள்ளன.

கட்டம் கட்டமாக இந்த வீதிகளை திருத்தி அமைக்கப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக கிளுவானை ஒழுங்கை, தனிப்பனை ஒழுங்கை, வளக்கம்பரை ஒழுங்கை, பயிர்தோலை ஒழுங்கை என்பன புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

கிளுவானை ஒழுங்கை 89 லட்சம் ரூபா செலவிலும், தனிப்பனை ஒழுங்கை 73.5 லட்சம் ரூபா செலவிலும், வளக்கம்பரை ஒழுங்கை ஒருகோடி ரூபா செலவிலும், பயிர்தோலை ஒழுங்கை 75 லட்சம் ரூபா செலவிலும் திருத்தி அமைக்கப்பட்டு தார் ஊற்றப்படவுள்ளன.

வீதிகளைத் திருத்தி அமைக்கும்போது பொருத்தமான அளவில் அகலமாக்கித் திருத்த வேலைகளை செய்வதற்கான ஏற்பாடுகளை, வலி.கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் மேற்கொண்டுள்ளார்.

வலி.கிழக்கு பிரதேச சபை பிரிவில் கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பு மூலம் வீதிகளைத் திருத்தி அமைப்பதற்கு பொது அமைப்புக்களின் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் தமது விருப்பங்களை தெரிவித்திருந்தனர்.

இந்தக் கருத்துக் கணிப்புக்கள் பிரதேசசபை உப அலுவலக பிரிவு வாரியாக, கிராம அலுவலர் பிரிவு வாரியாக கோரப்பட்டு வாக்கெடுப்பு நடத்தப்பட்டு பொதுமக்கள் விருப்பம் அறிவிக்கப்பட்டது. அந்த வகையிலேயே 14 வீதிகள் இனங்காணப்பட்டு இந்த வருடம் திருத்தி அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (த-11)

# யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரிக்கிறது

யாழ்ப்பாணம், பெப்.24

வீதி விபத்துக்கள் மற்றும் பல்வேறு நோய்களுக்குள்ளாகி சிகிச்சைக்கென யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் இறப்புக்களின் எண்ணிக்கையும் 2008 ஆம் ஆண்டிலிருந்து அதிகரித்து வருவதாக யாழ். போதனா வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டோரில் 2008 ஆம் ஆண்டு 82 ஆயிரத்து 195பேரும், 2009 ஆம் ஆண்டு 92 ஆயிரத்து 546 பேரும், 2010 ஆம் ஆண்டு ஒரு லட்சத்து பதினோராயிரத்து 79 பேரும் உள்ளனர். அவ்வாறே இவர்களில் இறந்தவர்களின் எண்ணிக்கையும் 2008 இல் ஆயிரத்து 16 ஆகவும்,2009 இல் ஆயிரத்து 115 ஆகவும், 2010 இல் ஆயிரத்து 489 பேருமாக உள்ளது.

இவர்களில் வீதி விபத்துக்களினால் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 2008 இல் 340 பேராகவும், 2009 இல் 454 பேராகவும், 2010 இல் 713 பேராகவும் அதிகரித்துள்ளது. இதில் 2008 இல் 19 பேரும், 2009 இல் 22 பேரும், 2010இல் 21பேரும் இறந்துள்ளனர்.

பாம்புக் கடியினால் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2008 இல் 235 பேராகவும், 2009 இல் 273 பேராகவும், 2010 இல் 385 [illegible]வும் உள்ளது. இவர்களில் [illegible] வொருவருடமும் நான்குபேர் வீதம் இறந்துள்ளனர்.

இதே காலப்பகுதியில் பிரசவத்துக்கென அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. 2008 இல் 5ஆயிரத்து 20பேரும், 2009 இல் 5 ஆயிரத்து 358 பேரும், 2010 இல் 6 ஆயிரத்து 963பேரும் பிரசவத்துக்கென அனுமதிக்கப்பட்டனர்.

இதே காலப்பகுதியில் இறந்து பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இதன்படி 2008 இல் 59 குழந்தைகளும், 2009 இல் 65 குழந்தைகளும், 2010 இல் 99 குழந்தைகளும் இறந்து பிறந்துள்ளன [illegible]ள்ளது. இந்தக் காலப்பகுதிகளில் பிரசவத் தாய்மார்களின் இறப்பு எண்ணிக்கை ஐந்துக்குள் உள்ளது.

மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையிலிருந்து கொழும்புக்கு கொண்டுசெல்லப்பட்டோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இதன்படி 2008 இல் 506 பேரும், 2009 இல் 763 பேரும், 2010 இல் 977 பேரும் கொழும்புக்குச் சிகிச்சைக்கெனக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இவைதவிர ஏனைய தொற்று நோய் சம்பந்தமாக 2010 இல் 6ஆயிரத்து 845 பேர் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் 57 பேர் இறந்துள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதுகுறித்து யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜாவிடம் கேட்ட போது-

அதிகரித்துவரும் சனத்தொகைப் பெருக்கம் ஒரு காரணமாகும். அத்துடன் வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலுள்ள வைத்தியசாலைகளில் சில சிகிச்சை முறைகளை, வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. இதனால் அந்த மாவட்டங்களிலிருந்தும் பலர் சிகிச்சைகள், பரிசோதனைகளுக்கென யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வரப்படுகின்றனர் - என்றார். (த-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலக வசதியில்லாத நிலையில் அக்கராயன் ஸ்கந்தபுரம் மக்கள்

கிளிநொச்சி,பெப்.24

அக்கராயன் ஸ்கந்தபுரம் பகுதி மக்கள் தமது வாசிப்புப் பழக்கத்தைக் கூட்டி அறிவுத் தேடலை மேற்கொள்வதற்கு ஒரு நூலகம் இல்லாமையால் பெரும் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

ஸ்கந்தபுரத்தில் இடப்பெயர்வுக்கு முன்னர் நூலகம் ஒன்றினைக் கரைச்சிப் பிரதேச சபை இயக்கி வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது..

தற்பொழுது அந்த நூலகம் அழிவடைந்துள்ள நிலையில் உள்ளதால், வெளி இடங்களுக்குச் சென்று தமது நூலகத் தேவையை நிறைவேற்ற வேண்டியுள்ளதாகத் தெரிவித்தனர்.

முக்கியமாக மாணவர்களின் தேவை கருதி கண்டிப்பாக இப்பகுதிக்கு நூலகம் ஒன்று அவசியமாக உள்ளதாகவும், பாடசாலை, ரியூசன் என்று அலையும் மாணவர்களுக்குத் தமது பகுதியிலே நூலகம் ஒன்று இருக்குமாயின் வெளி இடங்களுக்குச் சென்று அறிவுத் தேடலை மேற்கொள்ளத் தேவையில்லை எனவும் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

ஆகவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இதில் கவனம் செலுத்தி பல விடயங்கள் சார்ந்த நூல்களைக் கொண்டதான ஒரு நூல் நிலையத்தினை உருவாக்கித் தருமாறு அப்பகுதி மக்கள் மேலும் கேட்டுக்கொள்கின்றனர்.

## மகிழ்ச்சி....



விருந்தினர்கள் : ஒட்டுசுட்டான் இந்து தமிழ்க்கலவன் வித்தியாலயத்தில் முறைசாராக் கல்விப் பிரிவின் தையல் பயிற்சிக் கண்காட்சி வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெற்றது. இடமிருந்து வலமாக பாடசாலை அதிபர் திருமதி வே.நித்தியகலா, சமளங்குளம் இராணுவத்தளபதி, முறைசாராக் கல்வி மாகாணக்கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர் மேகநாதன், உ.அ.அதிபர் திருமதி சு.மதியழகன் தையல் பயிற்சி ஆசிரியர் சி.சித்திரா, கோட்டக்கல்வி அதிகாரி த.பங்கயற் செல்வன் ஆகியோர் காணப்படுகின்றனர். (500)

# கல்வியியற் கல்லூரி பஸ் இயங்க முடியாத நிலையில்

வவுனியா,பெப்.24

வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரிக்கு உரித்தான பேருந்து ஒன்று இயங்கமுடியாத நிலையில் உள்ளது.

இப்பேருந்தின் நான்கு ரயர்களும் பற்றரிகளும் பழுதடைந்த நிலையில் காணப்படுவதால் இயங்க முடியாத நிலையில் கவனிப்பாரற்றுக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பேருந்தின் பராமரிப்புச் செலவுக்கு நிதி ஒதுக்கப்படாததால் கைவிடப்பட்ட நிலையில் கல்லூரியின் வளாகத்தின் முகப்பில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கல்லூரிப் பயிலுநர் ஆசிரியர்கள் பேருந்தினை வெளிக்களப் பயிற்சிக்குச் செல்வதற்குப் பயன்படுத்திவந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆகவே மீண்டும் இந்தப் பேருந்தினை இயங்கவைக்க சம்பந்தப்பட்ட தரப்புகள் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றன. (313)

# வங்கி இல்லாததால் பூநகரி மக்கள் பாதிப்பு

கிளிநொச்சி,பெப்.24

பூநகரிப் பகுதியில் அரச வங்கியோ, தனியார் வங்கியோ இல்லாமையால் தமது பணத்தினை வைப்பிலிடவும் மீளப்பெறவும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்தப் பிரதேச மக்கள் வங்கித் தேவைகளுக்காக 30 கி.மீ. தூரம் சென்று தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதாகவும் எனவே தமது தேவையைக் கருத்திற் கொண்டு தமது பகுதிக்கு ஒரு வங்கியினை யாவது நிறுவித்தருமாறு கேட்டுக் கொள்கின்றனர்.

இப்பிரதேசத்தில் 6 ஆயிரத்து 200 குடும்பங்களுக்குமேல் வசித்து வருவது குறிப்பிடத்தக்கது. (420)

# தபால் மூலம் வாக்களிக்க 3 ஆயிரத்து 852 பேர் தகுதி

கிளிநொச்சி,பெப்.24

வன்னி மாவட்டத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க 3 ஆயிரத்து 852 பேர் தகுதி பெற்றுள்ளனர் என வவுனியா உதவித் தேர்தல் ஆணையாளர் ஏ.எஸ்.கருணாநிதி தெரிவித்தார்.

இவர்களுக்குரிய வாக்குச் சீட்டுக்கள் நாளை வெள்ளிக்கிழமை 25 ஆம் திகதி அனுப்பி வைக்கப்படும் எனவும் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் சுமார் இரண்டாயிரம் பேர் தேர்தல் கடமையில் ஈடுபடுவார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

தேர்தல் கடமையில் ஈடுபடுபவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் தற்போது நடைபெற்று வருகின்றன என்று மேலும் தெரிவித்துள்ளார். (313)

## 1st in Com., G.A.Q

**யாழ்ப்பாணம், பேராதனைப் பல்கலைக்கழகம் (வெளிவாரி)**

A/L இல் கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோர் ஆவர்.

விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
பதிவுகளை மேற்கொள்ளவும்.

*குறிப்பு:* யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் G.A.Q 2010ஆம் ஆண்டிற்கான பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான B.A. Part I விரிவுரைகள் ஆரம்பம்: 26.02.2011காலை 8 மணி,

விவரங்களுக்கு: எஸ். அருள்நங்கை (நிர்வாகி)
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு: 04.10.1934
இறப்பு: 25.01.2011




**திருமதி கிட்டிணன் சின்னத்தங்கம்**

விழியில் சோகம்
விழிக்க முடியாமல் பொங்கியெழுகிறதே
பிரிக்க முடியா பிரியாத பிரியங்களுடன்
பிரிந்து விட்டோமே
உன் முகம் இனி எங்கு காண்போம் அன்னையே!

கருணாநிதி சனசமூக நிலையத்தடி,
வல்வெட்டி.
குடும்பத்தினர்

## 10 ஆம் ஆண்டு நினைவுகள்



தோற்றம்
22★05★1923

மறைவு
14★02★2001

அமரர்
**தம்பிப்பிள்ளை செல்வராசா**
திதி: ஸப்தமி

பத்து ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும்
எம் நெஞ்சங்களில் நீங்காதிருக்கும்
உங்கள் ஆத்மா என்றும்
இறைவன் பாதத்தில் இருக்கப் பிரார்த்திக்கிறோம்

நந்தாவில்லேன்,
கொக்குவில்.
(670)
குடும்பத்தினர்.

# வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி

கிளிநொச்சி,பெப்.24

கிளிநொச்சி மாசார் அ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பி.ப.1.30 மணிக்குப் பாடசாலையின் அதிபர் திருமதி தயாநிதி கணேசலிங்கம் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கிளிநொச்சிக் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேலும், சிறப்பு விருந்தினர்களாகக் கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன், பளைக் கோட்டக் கல்வி அதிகாரி சு.ஆனந்தசிவம், பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபைச் செயலாளர் எஸ்.சிவப்பிரகாசம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (405)

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.01.2010 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதியில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல. | கிளை | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் விடப்படும் இடம் |
|---|---|---|---|
| 01 | யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளையும் மானிப்பாய் சேவை நிலையமும், நாவலர் வீதி சேவை நிலையமும் | 13.03.2011 முற்பகல் 8.30 | மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளை - 030 |
| 02 | காங்கேசன்துறைக்கிளையும் மல்லாகம் சேவை நிலையமும் | | |
| 03 | யாழ். பிரதான வீதிக்கிளையும் உரும்பிராய் சேவை நிலையமும் | | |
| 04 | நெல்லியடி | | |
| 05 | அச்சுவேலி | | |
| 06 | சங்கானைக்கிளையும் பண்டத்தரிப்பு சேவை நிலையமும் | | |
| 07 | சுன்னாகக்கிளையும் கோப்பாய் சேவை நிலையமும் | | |
| 08 | சாவகச்சேரிக்கிளையும், கொடிகாமம் சேவை நிலையமும் | | |
| 09 | வல்வெட்டித்துறை | | |
| 10 | யாழ். பல்கலைக்கழகக்கிளையும் திருநெல்வேலி சேவை நிலையமும், கல்வியங்காடு சேவை நிலையமும் | | |
| 11 | யாழ். கன்னாதிட்டிக்கிளையும் இணுவில் சேவை நிலையமும் | | |
| 12 | பருத்தித்துறைக்கிளையும் புலோலி சேவை நிலையமும் | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் வங்கிக்கு உரிமை உள்ளது.

பிராந்திய முகாமையாளர்
மக்கள் வங்கி பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
2011.02.24
(சி/576193)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு கரைதுறைப்பற்று தேர்தலை பிற்போடுவதற்கு நடவடிக்கை

## தேர்தல் ஆணையாளர் ஆராய்கிறார்

ஒட்டுசுட்டான்,பெப்.24

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இரண்டு உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தலைப் பிற்போடுவது தொடர்பாகத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்க பரிசீலனை செய்துவருகிறார்.

புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைகளுக்கான தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற்ற பெரும்பாலான வாக்காளர்கள் இன்னமும் சொந்த இடங்களில் மீளக்குடியேற்றப்படாமையால் எதிர்வரும் மார்ச் 17ஆம் திகதி தேர்தலை நடத்துவதில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரிடம் சிறிலங்கா தேர்தல் ஆணையாளர் கோரியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரும், மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரியுமான பத்திநாதன் தேர்தல் ஆணையாளருக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார். அதில் கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்புப் பகுதிகளைச் சேர்ந்த 18 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்காளர்கள் இன்னமும் மீளக் குடியமர்த்தப்படவில்லை எனவும் இதனால் திட்டமிட்டபடி தேர்தலை நடத்துவது தொடர்பாகத் தன்னால் பரிந்துரைக்க முடியாதுள்ள தாகவும் தெரிவித்துள்ளார்.

ஆனாலும் இதுகுறித்துத் தேர்தல் ஆணையாளரின் முடிவு இன்னமும் அறிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (313)

# புதிய உறுப்பினர் தெரிவு

முல்லைத்தீவு,பெப்.24

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டமும் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டமும் அண்மையில் நடைபெற்றன.

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அதிபர் க.கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

அதாவது பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளராக து.ஸ்ரீதரனும் பொருளாளராக ஆசிரியை திருமதி பி.யோகானந்தனும் பழைய மாணவர் சங்கத் தலைவராகக் கிராம அலுவலர் ஆர்.பகீரதனும் செயலாளராக, எஸ். மேனுராஜ்ஜும், பொருளாளராக வே.சுகுமாரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தக் கூட்டத்தில் பழைய மாணவர்கள், பொதுமக்கள், வெளிநாட்டவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (500)

# வேலையாள்கள் பற்றாக்குறை நெற்பயிர்ச் செய்கையாளர் பாதிப்பு

முல்லைத்தீவு,பெப்.24

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மையில் பெய்த மழை வெள்ளத்தால் நெற்பயிர்கள் அழிந்ததுபோக எஞ்சிய பயிர்களை அறுவடை செய்வதற்கு வேலை ஆள்கள் முன்வராத தாலும் போதிய அறுவடை இயந்திரம் இல்லாமையாலும் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.

நெல் அறுவடை செய்ய ஒரு நபருக்கு ஆயிரம் ரூபாவும், அறுவடை இயந்திரத்துக்கு ஏக்கர் ஒன்றுக்கு 8 ஆயிரம் ரூபாவும் கொடுக்கப்படுவதால் பெரும் நட்டம் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

அறுவடை செய்ய வேலை ஆள்கள் முன்வராததாலும் போதியளவு இயந்திரம் இல்லாமையாலும் விவசாயிகள் தமது தொழிலினைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.(500)

**கவலையில்...**



எப்பொழுது விடிவு : முல்லைத்தீவு கெருடமடு வசந்தபுரத்தில் மீளக்குடியேறிய குடும்பமொன்று எதுவித வசதியுமின்றி தகரக் கொட்டிலில் வாழ்க்கையைத் தொடர்கிறது. (500)

# பேருந்து நிலையத்துக்கு தற்காலிக கொட்டகைகள்

கிளிநொச்சி,பெப்.24

கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையத்தில் பயணிகளின் நலன்களைக் கருத்திற் கொண்டு தனியார் போக்குவரத்துக் கழகத்தினரால் தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மீளக் குடியமர்வின் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்குவதற்கான கொட்டகைகள் எதுவும் இல்லாத நிலையில் கடந்த ஒருவருடமாகப் பயணிகள் தனியார் வணிக நிலையங்களிலும் மரநிழல்களின் என்பவற்றின் கீழேயும் தங்கி நின்று பயணங்களை மேற்கொண்டனர். (6)

# சிறுபோக விதை நெல்லுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது

## விவசாயிகள் கவலை

ஒட்டுசுட்டான்,பெப்.24

முல்லை மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கைக்கான விதை நெல்லுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

அண்மையில் பெய்த மழை வெள்ளம் காரணமாக நெற்பயிர்கள் அழிந்துள்ளமையால் விதை நெல்லுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறுபோக விதை நெல்லுக்கான தட்டுப்பாட்டை நீக்கி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இலவசமாக விதை நெல்லை வழங்குமாறும் சிறுபோக நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதோடு மானிய விலையில் உரத்தினை வழங்குமாறும் விவசாயத் திணைக்களத்திடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மழை வெள்ளத்தில் நெற்பயிர்கள் அழிவடைந்ததால் பெரும் நட்டத்தினை அடைந்திருக்கும் இப்பகுதி விவசாயிகள் இலவசமாக விதை நெல்லினை வழங்குவதால் மீண்டும் தாம் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடமுடியும் என நம்பிக்கை தெரிவிக்கின்றனர். (500)

# அபிவிருத்திச் சங்க ஏற்பாட்டில் பெண்களுக்கான சிறுகைத்தொழில்

முல்லைத்தீவு,பெப்.24

ஒட்டுசுட்டான் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கம் பெண்களுக்கான சிறுகைத்தொழிலை ஆரம்பிக்கவுள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு வீட்டிலேயே முடங்கிப் போயிருக்கும் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலேயே இந்தச் சிறுகைத்தொழில் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெண்களுக்கான சிறுகைத்தொழில்களான பனை ஓலையில் இருந்து பெட்டி, கடகம், பாய், தொப்பி, கூடை, சுளகு போன்ற பனை உற்பத்திப் பொருள்களின் தயாரிப்பு வேலையைக் கொடுத்து பெண்களின் வாழ்க்கை மட்டத்தில் வளர்ச்சியை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (500)

# தொடரும் மிதிவெடி அகற்றும் பணிகள்

வவுனியா,பெப்.24

வவுனியா மாவட்டத்திலுள்ள பெரும்பாலான பகுதிகளில் இந்த வருடத்துக்குள் மிதிவெடிகள் அகற்றப்பட்டுவிடும் என ஊடகவியலாளர் சந்திப்பில் சுவிஸ் நாட்டுக் கண்ணிவெடி அகற்றும் எஸ். எஸ்.பி. நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் நிகல் ரொபின்சன் தெரிவித்தார்.

யப்பான் நாட்டு நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் இக் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் முதல் நடவடிக்கையாக வவுனியா செட்டிக்குளம் பகுதியில் உள்ள பெரியதம்பனை, குருசுகோயில், வாழைத்தோட்டம், புளியடி முறிப்பு, கன்னாட்டி வீதி, கூழாங்குளம் போன்ற பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இப்பகுதியில் இதுவரை 2 ஆயிரத்து 311 மிதிவெடிகள், 18 கண்ணிவெடி, 216 வெடிக்காத வெடிபொருள்கள், 3 ஆயிரத்து 609 ஏனைய வெடிபொருள்கள் என்பன மீட்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளார். (9)

# செய்முறைப் பரீட்சைக்கு உடன் தோற்றக் கோரிக்கை

வவுனியா,பெப்.24

கிளிநொச்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் இருந்து 2010 ஆம் ஆண்டு டிசெம்பரில் நடைபெற்ற க.பொ.த.சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளுக்கான அழகியல் பாடங்களான சங்கீதம், நடனம், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சைக்கு உடனடியாகத் தோற்றுமாறு கிளிநொச்சி கல்வி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் க. முருகவேல் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகளைத் தமது பாடசாலை அதிபர்களிடம் பெற்று விரைவாக இப்பரீட்சைக்குத் தோற்றுமாறும் 28 ஆம் திகதியுடன் இப்பரீட்சைகள் முடிவுறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 18 ஆம் திகதி தொடக்கம் கிளிநொச்சி மத்திய கல்லூரி, புனித திரேசா பெண்கள் கல்லூரி, பூநகரி ம.வி, கிளிநொச்சி ம.வி, அக்கராயன் ம.வி, தருமபுரம் ம.வி, இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை ஆகிய 7 நிலையங்களில் சங்கீதபாடச் செய்முறைப் பரீட்சையும் கிளிநொச்சி ம.வி, தருமபுரம் ம.வி, அக்கராயன் ம.வி, ஆகிய 3 நிலையங்களில் நடன பாடத்துக்கான செய்முறைப் பரீட்சையும், புனித திரேசா பெண்கள் கல்லூரி, அக்கராயன் ம.வி ஆகிய 2 நிலையங்களில் நாடகமும் அரங்கியலும் பாடத்துக்கான செய்முறைப்பரீட்சையும் நடைபெற்று வருகின்றன. (405)

# பூநகரி பாடசாலை மாணவர்கள் பாதிப்பு

பூநகரி,பெப்.24

பூநகரிப் பகுதியில் சில பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் வெளிமாவட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் பாடசாலைக்கு உரிய நேரத்துக்கு வருகை தராததால் மாணவர்களின் கல்வி பாதிப்பு அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை வகுப்புக்கள் நிறைவு பெற்றதும் மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியேற முதல் ஆசிரியர்கள் தமது வீடுகளுக்குச் செல்லத் தொடங்குகின்றனர் எனவும் தெரிவிக்கின்றனர்.

ஆசிரியர்கள் உரிய நேரங்களுக்குப் பாடசாலைக்கு வருகை தராமலும் பாடசாலையை விட்டு முதல் வெளியேறுவதாலும் மாணவர்களும் இவ்வாறான செயற்பாடுகளில் இறங்கி விடுவதாக மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆகவே சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகள் இது தொடர்பாகக் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர். (426)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டத் தொழிலாளர் வாழ்க்கைக்கு வேட்டு வைப்பதற்கே கூட்டு ஒப்பந்தம்

## மஸ்கெலியாவில் மனோகணேசன்

நுவரெலியா,பெப்.24

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை நிர்ணயிக்கும் கூட்டு ஒப்பந்தம் உண்மையிலேயே உழைக்கும் தொழிலாளர்களின் வாழ்க்கைக்கு வேட்டு வைக்கும் அம்சங்களைக் கொண்ட ஒப்பந்தமாகும் - என ஜனநாயக மக் கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மஸ்கெலிய புதுக்காடு, வல தெல, க்ளன்டில் ஆகிய பிரதேசங்களில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

எதிர்வரும் மார்ச் 17 ஆம் திகதி தேர்தல் வருகின்றது. மார்ச் 30 ஆம் திகதி தற்பொழுது நடைமுறையில் உள்ள கூட்டு ஒப்பந்தம் காலாவதி ஆகின்றது. உண்மையிலேயே நான்கு வருடங்களுக்கு ஒருமுறை வரும் உள்ளூராட்சித் தேர்தலை விட, இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை கையெழுத்திடப்படும் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பிலான கூட்டு ஒப்பந்தமே நமக்கு முக்கியமானதாகும்.

தேர்தல் முடிந்து, 13 நாள்களில் இன்று நடைமுறையில் இருக்கும் சம்பள ஒப்பந்தம் காலாவதியாகின்றது என்பதை மனதில் கொண்டு தொழிலாளர்கள் எதிர்வரும் தேர்தலில் வாக்களிக்க வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் கட்சி,சங்க பேதங்களை மறந்து சம்பளப் பிரச்சினையை முன்னெடுக்க வேண்டும்.

இதனாலேயேதான் நானும், நண்பர் சதாசிவமும் மலையக தமிழ்க் கூட்டமைப்பை அமைத்திருக்கின்றோம். எமது கூட்டமைப்பின் பிரசாரக் கருவாகத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினையை முன்வைத்தி ருக்கின்றோம்.

தொழிலாளர்கள் கட்டாயமாக 75 சதவீதம் அதாவது சுமார் 18, 19 நாள்கள் வேலைக்கு சமுகமளிக்க வேண்டும் என்ற நிபந்தனை இந்த உடன்படிக்கையில் இருக்கின்றது. அதே போல் 18 கிலோ கொழுந்து கட்டாயமாக எடுக்கவேண்டும் என்ற நிபந்தனை இருக்கின்றது. இன்று தோட்டங்கள் பராமரிக்கப்படாத மற்றும் காலநிலை காரணங்களால் இந்தளவு கொழுந்து பறிப்பதற்குத் தொழிலாளர்களால் முடியாமல் போகின்றது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு 405 ரூபாய் சம்பளம் என்று சொல்லப்பட்டாலும், உண்மையிலேயே அவர்களுக்குக் கிடைப்பது 285 ரூபாய் மட்டுமே. வேலைக்கு வருகை தரும் நாள்களின் அடிப்படையிலான 90 ரூபா, 18 கிலோ கொழுந்து எடுக்க வேண்டிய நிபந்தனையின் அடிப்படையிலான 30 ரூபாவும் பெரும்பாலான தொழிலாளர்க ளுக்குக் கிடைப்பதில்லை.

சில தோட்டங்களில் 15 நாள்கள் வேலைக்கு வராவிட்டால் மாதாந்தம் வழங்கப்படும் தேயிலை கூட வழங்கப்படுவதில்லை. இது போன்று தொழிலாளர்ளுக்குப் பலவகையிலும் பாதகமான அம்சங்களை உள்ளடக்கியதுதான் பொருந்தோட்ட சம்பள உடன்படிக்கையாகும். இத்தகைய மோசடிக் கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளவர் களுக்குத் தொழி லாளர்கள் வாக்களிக்கலாமா?- இவ்வாறு மனோ தெரிவித்துள்ளார். (ளி)

# குளத்தைப் பார்வையிட்டவர் தவறி வீழ்ந்து உயிரிழப்பு

மொனராகலை, இங்கினியாகலக் குளத்தைப் பார்வையிடச் சென்ற நபர் ஒருவர் குளத்தில் தவறி விழந்து உயிரிழந்துள்ளார். கொழும்பைச் சேர்ந்த சீ.ரி. சரத் (வயது 40) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவர் கந்த திங்கட்கிழமை காலை குளத்தைப் பார்வையிடச் சென்றுள்ளார்.

குளத்திற்கருகிலிருந்த கல்லொன்றின் மீது அமர்ந்திருந்து பார்வையிட்ட அவர் எதிர்பாராத விதமாக குளத்தினுள் தவறி விழுந்துள்ளார். நண்பர்களும், இராணுவத்தினரும் இணைந்து இவரைக் காப்பாற்ற முறபட்ட போதும் அவர் நீரில் மூழ்கியுள்ளார்.

இவரது சடலம் பல மணி நேரங்களின் பின்னரே மீட்கப்பட்டு மொனராகலை வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பிட்டுள்ளது. (ளி)

# ஹற்றன்- டிக்கோயா ப.நோ.கூ.சங்கத்தின் வர்த்தக நிலையத்தை ஆக்கிரமித்த பெண்

கண்டி,பெப்.24

ஹற்றன் - டிக்கோயா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான வர்த்தக நிலையம் ஒன்று பலாத்காரமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என அந்தச் சங்கத்தின் பொது முகாமையாளர் ஹற்றன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மேற்படி விவகாரம் தொடர்பில் பொது முகாமையாளர் பிரியந்த என்.வல்பொல தெரிவித்தவை வருமாறு:

குறிப்பிட்ட வர்த்தக நிலையத்தை 2008 ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதியன்று பெண்ணொருவர் மூன்றாண்டுகள் குத்தகை அடிப்படையில் பெற்றார். அதன்படி குத்தகை ஒப்பந்தம் 31.01.2011 ஆண்டில் காலாவதியாகிவிட்டது. ஒப்பந்தம் காலாவதியான பின் வர்த்தக நிலையத்தை சங்கத்திடம் ஒப்படைக்குமாறு குறிப்பிட்ட பெண்ணுக்குப் பலமுறை உத்தியோக பூர்வமாக அறிவித்தல்கள் அனுப்பப்பட்டன. எனினும் அந்தப் பெண் அறிவித்தல்களை அலட்சியம் செய்துவிட்டு இற்றை வரை வர்த்தக நிலையத்தைப் பலாத்காரமாக நடத்துகிறார். இது தொடர்பில் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம் - இவ்வாறு முகாமையாளர் தெரிவித்துள்ளார். (204-5)

# யுவதியை ஏமாற்றி நகையைத் திருடிய குடும்பஸ்தர் கைது

கட்டுகஸ்தோட்டப் பிரதேசத்தில் உள்ள யுவதியைத் திருமணம் முடித்து இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளை மோசடி செய்த நபர் ஒருவர் கட்டுகஸ்தோட்டப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கேகாலைப் பிரதேச வாசியான இந்த நபர் கட்டுகஸ்தோட்டயில் உள்ள யுவதியைத் திருமணம் செய்து கொள்வதாகத் தெரிவித்து அவளிடம் இருந்த மோதிரம், வளையல், சங்கிலி போன்ற 2,10,150 ரூபா பெறுமதியான நகைகளைத் திருடிக்கொண்டு தலைமறைவாகியுள்ளார்.

தலை மறைவான அந்த நபரைத் தேடியலைந்த போது அவர் ஏற்கனவே திருமணமானவரென யுவதிக்கும் அவளது குடும்பத்தினருக்கும் தெரியவந்ததையடுத்து அவர்கள் கட்டுகஸ்தோட்டப் பொலிஸில் முறையிட்டனர். இதனையடுத்துப் சந்தேக நபரைப் பொலிஸார் கேகாலையில் வைத்துக் கைது செய்துள்ளனர். (204-5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் அரசியல் பலமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விளங்கும்

## நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவிப்பு

அம்பாறை, பெப்.24

''தமிழ் மக்களின் அரசியல் பலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் என்பது நம் மக்களால் நிரூபணமாக்கப்பட்டுள்ளதால்தான் அரசு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன்பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது''.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமையின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

காரைதீவுப் பிரதேச சபைத் தேர்தலில் தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற பிரசாரப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

காரைதீவுப் பொது விளையாட்டரங்கில் நடைபெற்ற இக்கூடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தொடர்ந்து உரையாற்றுகையில்:

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் தொடர்பான பேச்சுவார்த்தைக்கு அரசு இழுத்தடிப்புக்களைச் செய்துவந்த போதிலும் தமிழ் மக்களின் அரசியல் பலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் என்பதை பொதுத் தேர்தலிலும் உறுதிப்படுத்தியதை அடுத்தே இன்றைய பேச்சுவார்த்தை நடைபெறுகின்றது.

இந்த முக்கியமான கால கட்டத்தில் எம்முன் வந்துள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலிலும் நம் மக்கள் ஒன்றிணைந்து மீண்டும் பலத்தை நிரூபிப்பதன்மூலம் அரசுடனான பேச்சுவார்த்தை பெரிதும் வலுவுள்ளதாக அமையும்.

சலுகைகள் என்பதுவேறு, உரிமைகள் என்பது வேறு, இதனடிப்படையில் சமூகத்தை விற்றுப்பிழைத்த கட்சியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்றுவரை சோரம் போகவுமில்லை, இனிமேலும் சோரம் போகப் போவதுமில்லை.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் ஒரேயொரு அரசியற் பலமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றும் திகழும். இதற்கு மேலும் வலுவூட்டும் வகையில் தமிழ்மக்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலையும் முக்கியமானதாகக் கருதி வீட்டுச் சின்னத்துக்கு ஒருமித்து வாக்களிக்க முன்வரவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் புரிந்த, மாற்றுக் கட்சியினர் இன்று எம்முடன் இணைந்து வருகின்றனர். இத்தகையவர்கள் கொள்கை ரீதியாகவே இணையவேண்டும். முகத்தைக் காட்டும் கட்சிகளாகவோ தேர்தலைக் குழப்ப வருபவர்களாகவோ இணைய வரக்கூடாது என்பதில் நாம் உறுதியாகவுள்ளோம் - இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (204-30)

# அம்பாறையில் வெள்ளத்தால் ரூ.6.3 மில்லியன் பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் பாதிப்பு

அம்பாறை,பெப்.24

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் மீனவர்களின் 6.3 மில்லியன் ரூபா பெறுமதியான மீன்பிடிக் கலங்கள் மற்றும் உபகரணங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் கே. செல்வராசா தெரிவித்துள்ளார்.

இந்த வெள்ள அனர்த்தத்தினால் பாணமை தொடக்கம் நீலாவணை வரையிலான கரையோரப் பிரதேசத்தில் உள்ள மீனவர்களின் உபகரணங்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் இந்தப் பாதிப்புக்கள் தொடர்பான ஆவணங்கள் உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் நாளை மறுதினம் சனிக்கழமை செயலகத்தில் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ள வெள்ள அனர்த்தம் தொடர்பானகூட்டத்தில் பாதிப்புத் தொடர்பான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நட்டஈடுகளை வழங்க அரசு முன்வரவேண்டும் எனப் பாதிக்கப்பட்ட மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (204)

# கன்ரர் வாகனம் மோதி ஒருவர் காயம்

மட்டக்களப்பு - கொழும்பு வீதியில் உள்ள சந்திவெளியில் கடந்த திங்கட்கிழமை காலை இராணுவக் கன்ரர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதால் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த நபர் படுகாயமடைந்த நிலையில் சந்திவெளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார். பாடசாலை வீதி, சந்திவெளியைச் சேர்ந்த கிருஸ்ணபிள்ளை சேயோன் (வயது 26) என்பவரே இவ்வாறு விபத்துக்குள்ளாகி உள்ளார். (204)

# விவசாயிகளுக்கு உபகரணங்கள் கையளிப்பு

திருகோணமலை,பெப்.24

திருகோணமலை மாவட்டத்தில் விவசாயிகளின் தொழில்சார் திறனை அபிவிருத்தி செய்யும் வகையில் விவசாயத் திணைக்களத்தால் தொழில் நுட்பக் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அன்புவழிபுரத்தில் உள்ள விவசாயப் பயிற்சி நிலையத்தில் வைத்து இந்த உபகரணங்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை வழங்கி வைக்கப்பட்டன.

இந்தநிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு முதல் கட்டமாக உபகரணங்கள் வழங்கப்பட்டன. விதைகருவிகள், அரிசியில் கல் நீக்கும் இயந்திரம், தெளிகருவிகள், நீர் இறைக்கும் இயந்திரம் என்பனவும் கையளிக்கப்பட்டன.

இந்தநிகழ்வில் ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பின் அதிகாரி சமரக்கோன், கிழக்குமாகாண விவசாயக் கால்நடை, மற்றும் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் கே. பத்மநாதன், கிழக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் ஹுசைன், ஐ.நாவுக்கான கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பின் உயர் அதிகாரி நாமல் சமரக்கோன், மாவட்ட அதிகாரி ஜி.ஞானகணேசன், கமநல கேந்திரநிலைய உதவி மாவட்ட ஆணையாளர் எஸ்.புனிதகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (204)

## பயிற்சி...



அம்பாறை மாவட்ட பிராந்தியஊடகவியலாளர்களுக்கான ஊடகப் பயிற்சி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இலங்கைத் திறந்த பல்கலைக்கழக அம்பாறைக் கற்கை நிலையத்தில் இடம் பெற்றது. இந்தப் பயிற்சியில் ஊடகவியலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். (204)

# வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட வீதிகள் புனரமைப்பு

மட்டக்களப்பு,பெப்.24

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வீதிகள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக அமைச்சின் மீள் எழுச்சித்திட்டத்தின் பிரதித்திட்டப் பணிப்பாளர் அருணாச்சலம் விஜய கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ள வெல்லாவெளிக் குளத்தின் சிரமதானப்பணி நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதனை ஆரம்பித்து வைத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், மட்டக்களப்பு மாவட்டத்துக் குட்பட்ட வட்டிக்களம், வெல்லாங்குளம், ஆணைக்குளம், பன்குளம் ஆகிய சிறிய குளங்களின் புனரமைப்பு வேலைகள் அமைச்சரினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாகவும் மாவட்டத்திலுள்ள 51 குளங்களின் புனரமைப்புப் பணிகளுக்காக 146 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (204)

# யுத்தம் முடிவுக்கு வந்ததால் வடக்கு, கிழக்கில் புதிய யுகம்

## அக்கரைப் பற்றில் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம்

மட்டக்களப்பு,பெப்.24

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற முப்பது வருடகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்ததை அடுத்து அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்குப் புதிய யுகம் உருவாகியுள்ளது என்று நீதியமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள நீதிமன்ற நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்குப் பிரதம நீதியரசர் அசோக்கா டி சில்வா மற்றும் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் நேற்றுமுன்தினம் அந்த மாகாணத்தின் கடற்கரைப் பகுதிகளிலுள்ள நீதிமன்றங்களுக்குச் சென்றனர்.

இந்தநிகழ்வின்போது உரையாற்றிய நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் மேலும் கூறியவை வருமாறு:

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இன்றுவரையும் நீதித்துறைக் கட்டமைப்பு சுயாதீனமாகச் செயற்படுகின்றது. அதனூடாக மக்களுக்கு நீதி, சமாதானம் ஆகியன முறையாக வழங்கப்படுகின்றன. கடந்த சில வருடங்களுக்கு முன்னர் பயங்கரவாதத்தினால் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்தனர். அன்று பயங்கரவாதிகளும் புறம்பான நீதித்துறைக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கி செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்றனர். அவ்வாறான நிலைமை இன்று இல்லை. மக்கள் இன்று மனமகிழ்ச்சியுடன் வாழ்கின்றனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒரு சட்டத்தரணி என்பதனால், நீதித்துறை செயற்பாடுகளால் மக்களை மட்டுமன்றி, சட்டத்தரணிகளைப் பாதிக்கும் காரணிகளையும் அவர் நன்கறிவார் இப்படி நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவுக்குக் கொண்டு வந்துள்ளதை அடுத்து, கிழக்கு மாகாணத்தில் நீதித்துறைச் செயற்பாடுகள் குறித்து சந்தோஷப்படுவதாகப் பிரதம நீதியரசர் அசோக்கா டி சில்வா இதன்போது தெரிவித்தார்.

நீதியமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க, சம்மாந்துறை சுற்றுலா மாஜிஸ்தி ரேட் நீதிமன்றத்தை மாஜிஸ்திரேட் நீதிமன்றமாக மாற்றுவதற்கும், அந்த நீதிமன்றிற்கு இரண்டு மாதங்களுக்குள் நிரந்தர மாஜிஸ்திரேட் நீதிவான் ஒருவரை நியமிப்பதற்கும் பிரதம நீதியரசர் உறுதியளித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி புதிய மாஜிஸ்திரேட் நீதிமன்றம் இதன்போது திறந்து வைக்கப்பட்டது. அத்துடன், வாழைச்சேனை, ஏறாவூர் ஆகிய நீதிமன்றங்களுக்கு இவர்கள் பயணம் மேற்கொண்டுள்ளனர். வாகரைப் பிரதேசத்தில் புதிய நீதிமன்றம் ஒன்றை அமைப்பதற்கும் இதன்போது அடிக்கல் நடப்பட்டது.

இந்த நிகழ்வுகளில், நீதியமைச்சின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சுஹத கம்லத், நீதிச் சேவை ஆணைக்குழுச் சபையின் செயலாளர் பிரியந்த டி சில்வா உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்த வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு விசேட வாக்குச் சாவடிகள் அமைக்கப்படமாட்டா

## தேர்தல் ஆணையர்

கொழும்பு, பெப். 24

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் இடம்பெயர்ந்த வாக்காளர்கள் வாக்களிப்பதற்காகக் கொத்தணி வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட மாட்டா என்று தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க நேற்று முன்தினம் தெரிவித்தார்.

உள்ளூராட்சிசபைத் தேர்தல்களில் போட்டியிடுகின்ற கட்சிகளின் செயலாளர்களைத் தேர்தல்கள் ஆணையாளர் நேற்று முன்தினம் மாலை மூன்று மணிக்கு தேர்தல்கள் செயலகத்தில் வைத்து சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கில் இடம்பெயர்ந்துள்ள வாக்காளர்கள் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களின் போது வாக்களிப்பதற்குக் கொத்தணி வாக்குச் சாவடிகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட தமிழ்க் கட்சிகள் சில தேர்தல்கள் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தன.

இந்தநிலையில் கொத்தணி வாக்குச் சாவடிகள் அமைக்கப்படமாட்டா என்று தேர்தல்கள் ஆணையாளர் நேற்றுமுன்தினம் உறுதிப்படத் தெரிவித்துள்ளார். முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை மீள்குடியமர்த்தப்படாமல், இடம்பெயர்ந்து வாழும் மக்கள் முல்லைத்தீவு மாவட்டத்திற்குச் சென்று வாக்களிப்பதற்குத் தேவையான வசதிகளை அரசு செய்து கொடுக்கும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த இதன்போது உறுதியளித்தார்.

இதற்கு முன்னர் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் இடம்பெயர்ந்து வாழும் மக்கள் வாக்களிப்பதற்குக் கொத்தணி வாக்குச் சாவடிகள் அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (சி)

# சட்டவிரோத மதுபான வியாபாரி நஞ்சருந்தி தற்கொலை முயற்சி

## கஹதுடுவ பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக

கொழும்பு, பெப்.24

தனது சட்டவிரோத மதுபான வியாபாரத்திற்கு இடையூறு விளைவிக்க வேண்டாமெனத் தெரிவித்து பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் வைத்து நஞ்சருந்திய ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என கஹதுடுவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொல்கசோவிட்ட சியம்பலாகொட பகுதியைச் சேர்ந்த 48 வயதான ஒருவரே இவ்வாறு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கஹதுடுவ பொலிஸாரினால் அடிக்கடி தனது மதுபான விற்பனைக்கு இடையூறு ஏற்படுகின்றது என்றும், இதனால் தான் வாழ்வாதாரத்தை இழந்துள்ளார் என்றும் கூறியுள்ளார்.

எனவே, இனிமேல் தனது வியாபாரத்திற்கு இடையூறு ஏற்படுத்த வேண்டாமெனத் தெரிவித்தே இவர் நஞ்சை அருந்தினார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# உள்ளூராட்சித் தேர்தல் மூலம் ஆட்சியை மாற்ற முடியாது

## அமைச்சர் ரிஷாத் நம்பிக்கை

கொழும்பு, பெப்.24

உள்ளூராட்சிசபைத் தேர்தலின் மூலம் அரசையோ அல்லது மாகாணசபைகளின் ஆட்சி அதிகாரங்களையோ மாற்றிவிட முடியாது - என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், கைத் தொழில் வணிகத்துறை அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் உரையாற்றிய அவர் மேலும், கூறியவை வருமாறு,

இந்தத் தேர்தலானது எமது கிராமத்தில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான தேர்தலாகும். ஆட்சியில் ஆளும் கட்சி இருக்கும் போது தான்; எமது பிரதேசத்தை அபிவிருத்தியின்பால் இட்டுச்செல்ல முடியும். இந்தச் சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்த தவறுவோமெனில், மீண்டும் இவ்வாறான வசந்தகாலம் எம்மை நோக்கிவராது.

ஆளும்கட்சியின் முக்கிய பங்காளி என்ற வகையிலேயே வடக்கின் வசந்தம், கமநெகும, மகநெகும மற்றும் மீள்எழுச்சித் திட்டங்களை இந்தக் கிராமங்களுக்குக் கொண்டுவர முடிந்தது. இப்படியான சூழலில் மக்களது அபிவிருத்திகள் குறித்து கரிசனை கொள்ளாதவர்கள் தேர்தல் காலத்துக்கு மட்டும் வந்து வாக்குகளைப் பிரித்து தமது கட்சியை வளர்க்கின்றனர்.

நமது மன்னார் மாவட்டம் இழந்தவற்றைத் தற்போது மீண்டும் பெற்றுவரும் நிலையில் ஆளும்கட்சி பிரதேச சபைகளைக் கைப்பற்ற வேண்டும். மாவட்டத்தின் விவசாயம், கால்நடை, கடற்றொழில் போன்ற துறைகளை மீளக்கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. அதற்கான அடித்தளத்தை நாம் இட்டுள்ளோம். அதனை முன்னெடுக்க எமது வேட்பாளர்கள் ஆட்சியில் அமரவேண்டும் - இவ்வாறு அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார். (சி)

## புலமைப் பரிசில்கள்...




இலங்கைப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆங்கில மொழிக்கற்கைக்காக ஒரு லட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான புலமைப்பரிசில் வழங்குவதற்கான ஒப்பந்தம் கையெழுத்திடும் நிகழ்வு நேற்றுமுன்தினம்செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றது.

இந்தநிகழ்வில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க , இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் பட்றீசியா புட்டெனிஸ் ஆகியோர் பரிமாறிக் கொள்கின்றனர். (204)

# சட்டவிரோதக் கட்டடங்களை சுவீகரிக்குமாறு உத்தரவு

கண்டி போதனா வைத்தியசாலைக்குச் சொந்தமான காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சட்டவிரோதக் கட்டடங்கள் அனைத்தையும் சுவீகரிக்குமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.59 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட கண்டி வைத்தியசாலைக் காணியில் சுமார் 40 ஏக்கர் காணியை தனி நபர்களும், நிறுவனங்களும் பலாத்காரமாக ஆக்கிரமித்து தொடர்மாடி வீடுகளை அமைப்பதற்கு முயற்சிக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதியில் ஏற்கனவே, கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் அனைத்தையும் சுவீகரிக்குமாறு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். (204-5)

# வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை கட்டுப்படுத்தக் கோரி ஆர்ப்பாட்டம்

கொழும்பு, பெ.24

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதை அரசு கட்டுப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி விலைவாசி உயர்வுக்கு எதிரான ஊழியர் ஒன்றியம் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு முன்பாக நேற்றுமுன்தினம் பகல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

பொருள்களின் விலை உயர்வடைந்து செல்கின்றது, எங்களிடம் பணம் இல்லை, அரசு மக்களுக்கு பொய்யான வாக்குறுதிகளை அளிக்கின்றது என்று கோஷம் எழுப்பியவாறு இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அத்தியாவசியப்பொருள்களின் விலைகள் உயர்வடைந்து செல்கின்றன. இந்தநிலையில், மக்கள் வாழ்க்கைச் செலவை எதிர்கொள்வதற்குத் திண்டாடுகின்றார்கள். அரசு இது குறித்து அக்கறை செலுத்தாவிட்டால், இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் என்று இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட விலை வாசி உயர்வுக்கு எதிரான ஊழியர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் ரி.எச். சோமரத்ன தெரிவித்துள்ளார்.

# நில நடுக்கத்தில் இலங்கையரின் பாதிப்புக் குறித்து தகவல் இல்லை

கொழும்பு, பெப்.24

நியூசிலாந்தில் ஏற்பட்ட நில நடுக்கம் காரணமாக அந்த நாட்டில் வசிக்கும் இலங்கையர்களுக்கு ஏதும் பாதிப்பு ஏற்பட்டதா என்பது தொடர்பாக இதுவரை தகவல்கள் கிடைக்கவில்லை. இருந்தும் நியூசிலாந்து அரசுடன் தொடர்ந்து தொடர்புகளை ஏற்படுத்தி வருகிறோம் என்று வெளிவிவகார அமைச்சு நேற்றுமுன்தினம் தெரிவித்தது.

நியூசிலாந்தின் தென் தீவிலுள்ள பெரிய நகரமான கிறைஸ்ட்சர்சில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நில நடுக்கத்தால் சுமார் 65 பேர் பலியானார்கள்.

இந்த நில நடுக்கம் பகல் வேளையில் ஏற்பட்டதால் நகரத்திலுள்ள சாலைகளில் மக்கள் அதிகமாக இருந்ததால் 65 பேரின் உயிர்களை காவு கொண்டது.

இந்த நிலநடுக்கம் காரணமாக இடிந்து விழுந்த கட்டடங்களின் கீழ் இருநூற்றுக்கும் அதிகமானவர்கள் சிக்கியிருக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது. கிறைஸ்ட்சர்ச் நகர தேவாலயத்தின் கோபுரம் இடிந்து நகரிலுள்ள மத்திய சதுக்கத்தில் விழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நில நடுக்கம் ஏற்பட்ட கிறைஸ்ட்சர்ச் நகரத்தைப் பார்வையிட்டுள்ள அந்நாட்டின் பிரதமர் ஜார் கீ இந்தநகரம் பேரழிவு ஏற்பட்ட ஓர் இடமாக காட்சியளிக்கிறது என்று தெரிவித்துள்ளார். பாதிப்புக்குள்ளான கிறைஸ்ட்சர்ச் நகரமே முழுமையான வேதனையில் உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு இதே நகரில் இதை விடக் கடுமையான நில நடுக்கம் நள்ளிரவு ஏற்பட்ட போது உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியா சாலையின் கால் கோள் விழா அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் மக்கள் வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் தரம் ஒன்று மாணவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் வங்கிக் கணக்கை ஆரம்பித்து வைத்து அதற்கான புத்தகங்களை பெற்றோரிடம் கையளிக்கிறார்.

# வலி.வடக்கு ஓய்வூதியர் நலன்புரி கூ.சங்க சேவையை பாராட்டுகிறார் உதவி ஆணையர்

வலி. வடக்கு,பெப்.24

யாழ். மாவட்டத்தில் இயங்கும் கூட்டுறவு அமைப்புக்களில் சிறந்த முறையில் இயங்கும் சங்கமாக வலி. வடக்கு ஓய்வூதியர் நலன்புரி கூட்டுறவுச் சங்கம் இயங்குகின்றமை பாராட்டுக்குரியது.

மேற்கண்டவாறு யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் க.அருந்தவநாதன் குறிப்பிட்டார்.

வலி. வடக்கு ஓய்வூதியர் நலன்புரி கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சு.ஏழுர்நாயகம் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்:

குறிப்பாக அங்கத்தவர்களின் நிதி நல்லமுறையில் பயன்படுத்தப்படுவதுடன் அங்கத்தவர்களுக்கான சேவையும் கூட சீராகவும் திறமையாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சங்கத்தின் அங்கத்தவர்களாகிய நீங்கள் அரச உத்தியோகத்தர்களாக இருந்து மக்களுக்குச் சேவையாற்றி ஓய்வு பெற்றுள்ளீர்கள். உங்களுடைய எதிர்காலம் அமைதியானதாகவும் இன்பம் நிறைந்ததாகவும் அமையவேண்டும்.

கூட்டுறவுத் திணைக்களத்தின் பணிகளாக கணக்காய்வு செய்வதும் ஆலோசனைகள் வழங்குவதும் காணப்படுகின்றது. சங்கத்தின் எல்லை நீடிப்பு என்பது வரையறுக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக ஏனைய தரப்பினர்களுடனும் கலந்துரையாடியே மேற்கொள்ள வேண்டும். ஏற்கனவே வலி வடக்கு என வரையறுக்கப்பட்ட நிலையில் வலி வடக்கு பிரதேச செயலக எல்லைக்குள் மட்டுமே செயல்படமுடியும். அதற்குமேல் செயல்படமுடியாது.

கூட்டுறவு சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு செயல்பட வேண்டியது அத்தியாவசியமாகும். அந்தவகையில் பொதுக் கூட்டத்துக்கு வழங்கப்படும் பிரேரணைகள் அனைத்தும் உரிய காலத்திற்கு முன்னர் வழங்கப்படவேண்டியது அவசியமாகும்.

சங்கத்தில் இருந்து கடன்களைப் பெறுவது சுலபம். சந்தோசமானது. ஆனால் திருப்பிச் செலுத்துவது கஷ்டமானதும் துன்பமானதும் ஆகும்.

இந்த வகையில் கடன்கள் வழங்கும் போது மிகவும் கவனமாக தீர்மானங்கள் நிறைவேற்றி வழங்கப்படவேண்டும். ஊழியர்களின் சேமம் என்பது உடனடியாக வழங்கப்பட வேண்டும்.

இத்தகைய கொடுப்பனவுகளை வழங்க எமக்கு உடன் பணம் வேண்டும். கடன் வழங்குவதன் மூலம் ஓர் அங்கத்தவர் மரணம் அடையும் சந்தர்ப்பத்தில் நிதி நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படலாம். கடுமையானதாக அமையலாம்.

எதிர்காலத்தில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிடம் உதவிகளைப் பெற்று இத்தகைய அங்கத்தவர்களிடையே கடன் திட்டங்களை மேற்கொள்ள முடியும் எனவும் குறிப்பிட்டார். (ம-86)

# கல்வியூடாக சமூகத்துக்கு ஒளியாக விளங்கலாம்

யாழ்ப்பாணம்,பெப்.24

வறுமைக்கு ஊடாக சிறந்த கல்வியை பெற்று கல்விமானாக வெளியேறும் மாணவன் சமூகத்திற்கு ஒளி விளக்காக திகழ்வான்.

அது மட்டுமன்றி அவன் பொறுப்பேற்கும் வேலைகளும் செவ்வனே இடம்பெறும்.

தேசிய சேமிப்பு வங்கியின் காரைநகர் முகாமையாளர் அ.கெங்காதரன் இவ்வாறு தெரிவித்தார்.

நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலை அதிபர் திருமதி. அம்பிகை சிவஞானம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கெங்காதரன் தொடர்ந்து தெரிவிக்கையில்;

நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை கல்வி, விளையாட்டு, கலை, கலாசாரம் மற்றும் பிற நிகழ்வுகளில் வலய மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் கால் பதித்து வெற்றியைக் காட்டிவருகின்றது.

இதற்கு அடிப்படை காரணம் இங்கு நிலவும் சிறந்த தலைமைத்துவமே. பாடசாலை அதிபரின் தகைமைக்கு வேறுபாடசாலைகளில் அதிபர் தரம் பொறுப்பேற்கலாம்.

ஆனால் நவாலி மண்ணில் பிறந்தவர் என்பதால் அந்த மண்ணிலேயே சிறப்பு பணியாற்றி எமது பாடசாலை மாணவர்களின் அபிவிருத்திக்கு அயராது பணியாற்றி வருகின்றார். நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை விரைவில் தரம் உயரும் அதற்கான நடவடிக்கைகளை வலயக்கல்வி பணிப்பாளர் எடுத்து வருவதாக அறிகிறேன்.- என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இ.கௌரிகாந்தன் தெரிவிக்கையில்;

சட்டமேதை ஜீ.ஜீ.பொன்னம்பலம் வாழ்ந்து, மறைந்த பிரதேசம் நவாலி. அத்துடன் நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை சைவசமய பாரம்பரியங்களைக் கொண்டு செயலாற்றும் நிறுவனம்.

எனவே, பெரியவர்களால் ஆசீர்வதிக்கப்பட்ட பாடசாலையில் கல்வி கற்பதற்கு ஒவ்வொரு மாணவனும் சிறந்த சாணக்கியத்தைப் பெற்றவர்.- என்றார்.

தொடர்ந்து கட்டுடைப் பாடசாலை அதிபர் து.சிவஞானம் தெரிவிக்கையில்;

நவாலி அட்டகிரி சைவவித்தியாசாலையில் கல்வி கற்று தேறியவர்கள் இன்று அமெரிக்கா, லண்டன், கனடா மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளில் பெரும் பதவிகளில் உள்ளனர். இலங்கையிலும்பல்தேசியவைத்தியசாலையிலும், வங்கியிலும், பாடசாலைகளிலும் மற்றும் கல்விமான்களாக வலம் வருகின்றனர்.

அந்தளவிற்கு தேசிய பாடசாலை தரத்திற்கு ஏற்ற விதத்தில் இங்கு கல்வியும் விளையாட்டும் இடம்பெறுகின்றன- என்றார். (ம-302)

## யாழ். மத்தியஸ்தர் சபை உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம் மத்தியஸ்தர் சபைக்கு புதிதா தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன.

நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்து மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவினால் தெரிவுசெய்யப்பட்ட 23 உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்கள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பிரதேச செயலர் திருமதி. சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வழங்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட நீதிபதிகளும், கிராம அலுவலர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர் எனத் தவிசாளர் வி.ஸ்ரீசத்திவேல் தெரிவித்துள்ளார்.

தெரிவாகியுள்ளோர் விவரம் வருமாறு:

விநாயகமூர்த்தி ஸ்ரீசக்திவேல் - தவிசாளர், வேலாயுதம் ஞானகாந்தன் - உதவித் தவிசாளர், உறுப்பினர்கள் - கௌரி முரளிதரன், நீக்கிலஸ் பிரபாகரன், கந்தசாமி இளங்கோவன், செல்லத்துரை சுப்பிரமணியம், சகிலா சரவணை, சுப்பிரமணியம் கணேசலிங்கம், சுப்பிரமணியம் கோபாலசிங்கம், விநாயகன் மாணிக்கம், பாவிலுப்பிள்ளைவின்சென்ற், செபமாலை யோசெப் மரியநாயகம், ஆனந்தக்குமார் யூலியன், சின்னையா இராமலிங்கம் லோகநாதன், சுப்பிரமணியம் நடராசலிங்கம், சாம்பசிவம் கிரிதரன், ஆறுமுகம் ஆனந்தராஜா, யோபு வில்பிரட் ஜீவராஜா, பொன்னையா பஞ்சலிங்கம், ஞானப்பிரகாசம் லூயிஸ் அன்ரனி, இரத்தினசிங்கம் திலகரட்ணம், வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம், நாகமணி பிரபாகரன். (ம)

## நிர்வாகிகள் தெரிவு

வலி.வடக்கு, பெப்.24

வலி.வடக்கு ஓய்வூதிய நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய ஆண்டுக்கான நிர்வாகிகள்தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் - நா.தவநாதன், உபதலைவர் - தி.இராமச்சந்திரன், செயலாளர் - சு.ஏழுர்நாயகம், உப செயலாளர் - க.அருளானந்தசிவம், பொருளாளர் - க.இராதாகிருஷ்ணன். ஆறுபேர் கொண்ட நிர்வாகக் குழு உறுப்பினர்களாக க.நடராசா, எஸ்.சரவணமுத்து, க.அருணையா, ந.இரத்தினம், செ.சூரியகுமார், செல்வி.பெனடிற் ஆகியோர் தெரிவாகினர். (ம-86)

# எங்கே செல்கிறது எமது யாழ்ப்பாணக் கலாசாரம்?

யாழ்ப்பாணம்,பெப்.24

இன்றைய காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் சமயம், ஒழுக்க கலாசாரப் பண்பாட்டு விழுமியங்கள், தமிழ் பண்பாடுகள் இவையெல்லாம் எங்கே சென்று கொண்டிருக்கின்றன.

சைவபாரம்பரியங்களையும், தென்மைகளையும் பாதுகாப்பது இளம் சமுதாயத் தின் கடமையாகும். இவ்வாறு தெரிவித்தார் யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தின் அதிபர்.

புண்ணிய நாச்சியம்மையாரின் தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. அந்த விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்:

யாழ்ப்பாணம் என்பது தமிழுக்கும் ஒழுக்கத்திற்கும் பண்பாட்டிற்கும் பெயர் போனது. வெளிநாட்டவரிடம் கேட்டாலும் யாழ்ப்பாணத்திற்கு என தனியான சிறப்பு உண்டு. அதை யாரும் மறக்கவோ மறைக்கவோ முடியாது. ஆனால் இன்றைய காலத்தில் அவையெல்லாம் மெல்ல மெல்ல அருகி வருகிறது. இவ்வாறே விட்டால் அது கடலிலே மூழ்கிவிடும்.

பாடசாலை மாணவர்களிடமோ இளைஞர், யுவதிகளிடமோ சமயம் மீது பற்று அறுந்துவிட்டது. கலாசாரங்கள் சீர் குலைந்துவிட்டது. இவ்வாறே விட்டால் என்ன ஆகும். என்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள்.

கலசாரம், சமயம் என்வற்றை ஏதோ ஒரு மூலையில் போட்டு விட்டுமேல்நாட்டு பழங்கங்களை பழகிக்கொண்டிருக்கிறோம். இவ்வாறே சென்று கொண் டிருந்தால் விரைவில் எமது கலாசாரம் அழிந்துவிடும்.

இதற்கு மாணவர்கள் மட்டுமல்ல ஆசிரியர்கள், அதிபர்கள் கூட ஒரு வகையில் காரணமாக அமைகின்றனர். கல்வியில் மட்டுமே அக்கறை காட்ட வேண்டும் என சொல்லிக்கொடுக்கி றோமே தவிர, சமயத்தையோ கலாசார பண்பாட்டினையோ கற்றுக் கொடுப்பதில்லை. சமயப் போட்டிகளில் பங்கு கொள்வதற்கு நேரம் போதாது. மாணவர்களிடையே மனத் திறனை ஊக்குவிக்க வேண்டும். பேச்சு வன்மையை ஊக்கப்படுத்தவேண்டும். வாசிப்புத் திறனை வளர்க்க வேண்டும். இது ஆசிரியர்கள், பெற்றோர்களுடைய கடமையாகும் - என்றார். (ம-~~313~~) (311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:**
நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கலாம். வழக்கத்திற்கு மாறான கடும் வேலைப்பளுவை சந்திக்கலாம். உங்களின் வார்த்தைகளுக்கு அயலார் மத்தியில் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். கைவிட்டுப் போனதாக நினைத்த காரியம் ஒன்று, எளிதில் கை கூடலாம். செலவில் சிக்கனம் அவசியம்.

**இடபம்:**
குழந்தைகள் பொறுப்போடு செயற்படுவது கண்டு, பெருமை கொள்வீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். உறவினர்கள் சிலரை நம்பி ஒப்படைத்த வேலை முடியாமல், அவற்றை நீங்களே செய்யலாம். சில விடயங்களை நினைத்துக் கவலைப்படுவீர்கள். வித்தியாசமான நபர்களை சந்திப்பீர்கள்.

**மிதுனம்:**
புதிய பொறுப்புகள் உங்களைத் தேடி வரலாம். கடன் மிகுதிகளை கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். அரசியல் தொடர்புடையவர்கள், கடும் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். உங்களின் செயற்பாடுகளைப் பார்த்து, மற்றவர்கள் வியப்படையலாம். எதிர்பார்ப்பு ஒன்றில் ஏமாற்றத்தைச் சந்திக்கலாம்.

**கடகம்:**
குடும்பச்சுமை குறைந்து நிம்மதி குடிகொள்ளும் நாள். புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காணலாம். மாற்று மத நண்பர்கள் வழியில் மனதிற்கு இனிய உதவி கிடைக்கலாம். தொழில் ரீதியாகவோ அல்லது வேறு வகையிலோ சிலர் உங்களுக்கு நல்ல ஆலோசனை சொல்லலாம். கடனாகக் கொடுத்த பணம் திரும்ப வரும்.

**சிங்கம்:**
இனம்புரியாத பயம் மனதில் குடிகொள்ளும். உங்களுக்கு எதிராக இனிப்பாகப் பேசிய சிலர், மறைமுகமாக விமர்சிப்பது கண்டு கோபம் அடைவீர்கள். பணவரவுகளை எதிர்பார்த்து சில செலவுகளைச் செய்வீர்கள். சில வேலைகளை தவறாகச் செய்து விட்டு ஒன்றுக்கு இரு முறை செய்ய நேரிடலாம். பரிகாசப் பேச்சைத் தவிர்க்கவும்.

**கன்னி:**
செல்வாக்கும், சொல்வாக்கும் அதிகரிக்கும் நாள். பல நாள் கனவு ஒன்று நனவாகலாம். தந்தை வழியில் அனுகூலமான உதவி கிடைக்கலாம். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் தேடி வரலாம். சில விடயங்களில் தன்னிச்சையாக செயற்பட்டு சாதனை படைப்பீர்கள். சிக்கலான சில வேலைகளையும் சுலபமாக முடிப்பீர்கள்.

**துலாம்:**
வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். சேமித்த பணத்தில் திடீரென கைவைக்கலாம். அவசரமாக முடிக்க வேண்டிய வேலை ஒன்றால் அவதிப்படலாம். கவனக்குறைவான செயற்பாடுகளால் சில இழப்புகளை, தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம். உணர்ச்சிவசப்பட்டு எந்த முடிவும் எடுக்காதீர்கள்.

**விருச்சிகம்:**
தொழில் ரீதியாக வரவேண்டிய பணவரவுகள் வரலாம். உறவினர் ஒருவருடன் முக்கிய விடயம் பற்றி ஆலோசிப்பீர்கள். காலையில் நிறுத்தி வைத்த வேலை ஒன்றை மாலையில் செய்து முடிப்பீர்கள். சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காக ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். பயணங்கள் பலன் தருவதாக அமையும்

**தனுசு:**
கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். நோய் உபாதைகள் நீங்கி தெம்பு, உற்சாகம் பெறுவீர்கள். சில விடயங்களில் முக்கிய முடிவு எடுப்பீர்கள். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. உங்களின் ஊக்கம், உற்சாகத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். அனுகூலமான நாள்.

**மகரம்:**
சில காரியங்களுக்காக அலைந்தாலும், அதை சந்தோஷமாக ஏற்றுக் கொள்வீர்கள். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். முடிந்து விட்டதாக நினைத்த பிரச்சினை ஒன்று மீண்டும் தலை தூக்கலாம். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். பேராசைப்படலாம்.

**கும்பம்:**
அவமானங்களைத் தவிர்க்க அடுத்தவர்கள் விவகாரங்களில் தலையிடாமல் இருக்க வேண்டும். துணையாக இருந்த சிலரே உங்களுக்கு தொல்லையாக மாறலாம். தொழில் போட்டிகளால் மன அமைதி பாதிக்கப்படும். திடீர் பயணங்களால் செலவு அதிகரிக்கும். சில வேலைகளுக்காக ஒன்றுக்கு பல முறை அலையலாம்.

**மீனம்:**
இனிக்கும் செய்திகள் வீடு தேடி வரும் நாள். உங்களின் முயற்சிகளுக்கு வாழ்க்கைத் துணைவரின் ஒத்துழைப்பு கிடைக்கும். பெண்கள் பிறந்த வீட்டின் மூலம் ஆதாயம் பெறலாம். ஆடம்பரப் பொருள்கள் வாங்குவதில் நாட்டம் செல்லும். மனதில் நல்ல சிந்தனைகள் குடிகொள்ளும். புத்துணர்ச்சியுடன் செயற்படுவீர்கள்.

# அமெரிக்கா திட்டமிட்டது மக்கள் தம் வழிய



அடங்க மறுத்த மக்கள் புரட்சியில் ஈடுபட்டதை அடுத்து ஹொஸ்னி முபாரக் அந்த தலைநகரை விட்டு வெளியேறினார். இராணுவம் ஆட்சிப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டு ''செப்ரெம்பரில் பாரபட்சமற்ற வெளிப்படையான தேர்தல் நடக்கும்'' - என்று அறிவித்தது. ''தற்போதைய குழப்ப நிலை முடிவுக்கு வந்ததும் அவசரகாலச் சட்டம் உடனடியாக நீக்கப்படும். அதுவரை சீர்திருத்தங்கள் ஏற்படுத்தப்படும் மக்கள் வீடுகளுக்கு திரும்பி நாட்டில் வழமையை ஏற்படுத்த வேண்டும்'' எனவும் அறிக்கை வெளியிட்டது. மக்கள் இராணுவத்துக்கு பூங்கொத்துக்களை வழங்கியும் வாழ்த்துக்களை கூறியும் தமது விடுதலையைக் கொண்டாடினர்.

### யாரால் புரட்சி நடத்தப்பட்டது?

ஏப்ரல் 6 இயக்கம் என்கிற இயக்கம்தான் இந்தப் புரட்சிக்கு வித்திட்டது. 2008 ஆம் ஆண்டில் எகிப்தியத் தொழில் நகரமொன்றில் உரிமை கேட்டுப் போராடிய தொழிலாளர்களுக்கு ஆதரவளிக்கும் விதத்தில், ''பேஸ்புக்''கில் இளைஞர்கள் ஆரம்பித்துததான் இந்த இயக்கம். இவர்கள்தான் அதிபருக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்தவர்கள். 30 வயதுக்கும் குறைந்தவர்கள்தான் அதிகளவில் எழுச்சியுள்ளவர்களாக இருந்தனர். இவர்களுக்கு தலைமை எதுவும் கிடையாது. இந்தப் போராட்டத்தின் பெரிய ஆயுதமே இணைய தளம், பேஸ்புக், டுவிற்றர் ஆகிய தொடர்பாடல் நுட்பங்கள்தான். இதனை சரிவரப் புரட்சிக்குப் பயன்படுத்தியது இவ்விளைஞர் அமைப்பு. இதனாலேயே முபாரக் இவற்றைத் தடை செய்தார். எந்தக் கட்சியும் சாராத ஏப்ரல் 6 இயக்கத்தோடு ஏனைய அரசியல் கட்சிகளும் தம்மை இணைத்துக் கொண்டன.

**முஸ்லிம் சகோதரத்துவ கட்சி** அதில் முக்கியமானது. 1928இல் உருவாக்கப்பட்டது இக் கட்சி. இன்றுவரை எகிப்தில் ஒரு தடைசெய்யப்பட்ட ஓர் அரசியல் இயக்கமாகவே இருக்கிறது. ஆனால் இது உலகின் மிகப்பழமையான பெரிய செல்வாக்குள்ள இஸ்லாமிய இயக்கம். அரபு நாடுகளில் இதன் செல்வாக்கு அதிகமானது. ஜனநாயகத்தை நம்புவதால் அல்கெய்தா போன்ற இயக்கங்களிடமும் அமெரிக்காவை எதிர்ப்பதால் மேற்கு நாடுகளிடமும்கூட இதற்கு நட்பில்லை. புரட்சியில் கணிசமானளவு இந்தக் கட்சியும் பங்காற்றியது. இதன் தலைவர்கள் பலர் சிறையில் இருக்கின்றனர்.

புரட்சியில் பங்காற்றிய தனிநபர்களுள் எல்பராடியும் முக்கியமானவர். 1942இல் பிறந்தார். இவர் ஒரு சட்டவல்லுநர் 1997-2009 வரை ஐ.நாவின் சர்வதேச அணுசக்தி நிலையத்தின் இயக்குநராக செயற்பட்டார். 2005ஆம் ஆண்டு நோபல் பரிசு இவருக்கு கிடைத்து. உலக நாடுகள் அணுசக்தியை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்த வேண்டும் என்பதனை வலியுறுத்தியமைக்காக 2008இல் இந்தியா இவருக்கு இந்திராகாந்தி விருதை வழங்கிக் கௌரவித்தது. 2010 பெப்ரவரி 24இல் எகிப்தில் ஜனநாயக ரீதியிலான மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்பதற்காக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த ''மாற்றத்துக்கான தேசியக் கூட்டமைப்பு'' என்ற இயக்கத்தை தொடக்கினார். மக்களது எழுச்சியை தொடர்ந்து கடந்த ஜனவரி 27ஆம் திகதி நாடு திரும்பிப் போராட்டங்களில் பங்கெடுத்தார். இராணுவத்திடம் அதிகாரங்கள் கையளிக்கப்பட வேண்டும் என்பதை அடிக்கடி வலியுறுத்தி வந்தார்.

### புரட்சி கற்றுக் கொடுக்கப்பட்டது

அதிபர் பராக் ஒபாமா கடந்த ஜூன் மாதம் கெய்ரோ பல்கலைக்கழகத்தில் உரையாற்றும் போது ''உலகின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் மக்கள் சுதந்திரமாகத் தங்கள் கருத்தை வெளிப்படுத்தும் உரிமையையும் தாங்கள் யாரால், எப்படி ஆட்சி செய்யப்பட வேண்டுமென்ற உரிமையையும் விரும்புகிறார்கள்'' எனத் தெரிவித்திருந்தார். ஒரு வருடத்துக்குள் அவரின் எண்ணம் பலித்தது. இதனை வைத்துக் கொண்டே எகிப்தில் புரட்சியின் தயாரிப்பு யார் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

எகிப்திய மக்கள் கடந்த 30 வருட ஆட்சியில் அடைந்திருக்கும் மனநிலையை சரிவரப் புரிந்து கொண்ட அமெரிக்கா, பேஸ்புக், டுவிற்றர், blogger போன்ற சமூக வலைத் தளங்களில் தென்படும் துணிகர இளைஞர்களைத் தேடிப்பிடித்தது. தங்கள் செலவில் அமெரிக்காவுக்கு அழைத்து இணையத்தள தொழில்நுட்பங்களை பயிற்றுவித்தது. ஹிலாரி கிளிண்டனே இந்தப் பணிகளில் ஈடுபட்டவர். எகிப்தில் என்ன மாதிரியான புரட்சி நிகழவேண்டுமென்பதே இளைஞர்களுக்குக் கற்பிக்கப்பட்டது. அதாவது ''ஜனநாய ஆட்சியில் மாற்றம் நிகழாமல் ஆட்சி மாற்றம் மட்டுமே எகிப்துக்கு தேவை'' என்பதே புரட்சியின் கருவாக இருக்க வேண்டும். இந்த எண்ணத்தை இளைஞர்கள் மூளை முழுவதும் உறிஞ்சிக் கொண்டனர். எகிப்திய முக்கிய நகரங்களுக்கு அவர்கள் அனுப்பப்பட்டனர். பேஸ்புக்கில் புரட்சியை அந்த இளைஞர்கள் தொடக்கி வைத்தனர்.

30 வருடகால முபாரக்கின் சிநேகிதத்தைத் துண்டிக்க வேண்டிய தேவை அமெரிக்காவுக்கு இல்லை. ஆனால் அதிபரின் மிக மோசமான அடக்கு முறையும் முஸ்லிம் சகோதரத்துவ கட்சியின் எழுச்சியும் எகிப்தில் ''வேறுமாதிரியான'' அரசை உருவாக்கி விட்டால்? டுனிஸிய மாதிரியாக இல்லாமல் ஆட்சி மாற்றமாக மட்டுமாகவே இது இருக்க வேண்டுமென திரும்பத் திரும்ப அமெரிக்கா வலியுறுத்தியது. ஒபாமாவும் புரட்சி தொடங்கியதிலிருந்து விடுத்துக் கொண்டிருந்த அறிக்கைகளில் எகிப்தில் ஆட்சிச் சீர்திருத்தம் கொண்டுவர வேண்டும் என மட்டுமே வலியுறுத்தினார்.

### புரட்சி தன் வழியைத் தானே தேடியது

அதற்கேற்பவே புரட்சியாளர்களும் ''மாற்றீட்டு நாடாளுமன்றம் என்கிற மக்கள் நாடாளுமன்றத்தை முன்னிலைப்படுத்தியே போராட்டத்தை முன்னெடுத்தார்கள். அரசு மாற்றத்தை விரும்பாமல் ஆட்சி மாற்றத்தை மட்டுமே வலியுறுத்தி வந்த அமெரிக்காவின் கணக்கு ஒரு கட்டத்தின் பின்னர் மக்கள் எழுச்சியினால் பிழைத்துப் போனது. மக்கள் சுயமாகப் பின்னூட்டல் இன்றி போராடத் தொடங்கி விட்டனர். கூட்டுணர்வு மேலிடவே மானுட விடுதலையைத் தவிர வேறு எதையுமே சிந்திக்காதவராய் மக்கள் தொழிற்படத் தொடங்கினர். அமெரிக்கா அளித்த தொழில்நுட்பப் பயிற்சி வீணாகியது.

அதிபர் முபாரக்கின் தூதுவர் உடனடியாக அமெரிக்கா சென்றார். இதன் மூலம் 30 வருடமாக எகிப்தை நிர்வகிப்பது யாரென்பது புரிந்தது.




புரட்சிக்கு வயதில்லை



பயிற்சிக்கு... ஹிலாரியின்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# …ியில் வென்றனர்

மத்திய கிழக்கைக் கட்டுப்படுத்தும் ஒரு தளமாக எகிப்தை அமெரிக்கா பாவித்திருந்தது. இஸ்ரேலுக்கு அடுத்தபடியாக அதிகளவு ஆயுதங்களை அமெரிக்கா விற்பனை செய்வது எகிப்துக்குத்தான். சுயஸ்கால்வாய் வர்த்தகம் இஸ்ரேலுக்குத் தலையிடியாக இருக்கும் காசாப் பகுதி போன்றன எகிப்தை அரணாகக் கொண்டே இருக்கின்றன. இதனாலேயே எகிப்தை இழப்பது என்பது ஒபாமாவின் பேரிழப்பாகவே அமையும் என கூறப்படுகிறது.

அதுபோல் புரட்சிக்கு பின்னர் எகிப்து இன்னொரு ஈரானாக மாறினால் எப்படி சமாளிப்பது? என்பதும் அமெரிக்காவின் கவலை. ஏனென்றால் 1979 ஆம் ஆண்டு ஈரானில் நடந்த இஸ்லாமிய புரட்சி பாடமாயுள்ளது. அதாவது புரட்சிக்கு முன்பிருந்த ஈரானிய அரசு அமெரிக்காவுடன் நட்புப் பாராட்டியது. ஆனால் புரட்சிக்கு பின் இன்றுவரை இருக்கும் ஈரானிய அரசு அமெரிக்காவுக்கு எதிரான நிலைப்பாட்டுடனேயே செயற்படுகிறது. அன்று அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜிம்மி காட்டருக்கு நிகழ்ந்த நிலைமை ஒபாமாவுக்கு ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் கவனமாய் இருக்கின்றனர். இதனாலேயே அமெரிக்கா சீர்திருத்தத்தை மட்டுமே விரும்புகிறது.

ஜெரா

அமெரிக்காவைவிட இஸ்ரேல் இப்பிரச்சினையில் அதிகம் கவலைப்படுகிறது. இதற்கு இஸ்ரேலினது, தனது பொருளாதாரம் பாதிக்கப்படும் என்ற பயமே காரணம். கடந்த முப்பது ஆண்டுகளாக இஸ்ரேலும் எகிப்தும் நட்புரிமை நாடுகளாக உள்ளன. இதனை முஸ்லிம் சகோதரத்துவ ஆட்சியினர் ஒருபோதும் விரும்பவில்லை. புரட்சிக்குப் பின் ஆட்சி அவர்களது கைக்குப் போனால் நிலைமை மாறிவிடும்.

எகிப்துடனான நட்புக் காலங்களில் இஸ்ரேலின் பொருளாதாரம் மிகப் பெரிய வளர்ச்சியைக் கண்டுள்ளது. தனது எல்லைக் கோட்டை எகிப்துடன் பகிர்ந்திருக்கும் இஸ்ரேல் இராணுவச் செலவைக் குறைத்திருக்கின்றது. எகிப்துடனான போர்க் காலங்களில் 23% வருமானத்தை இராணுவத்துக்குச் செலவழித்த இஸ்ரேல், எகிப்துடன் எல்லைக் கோட்டைப் பகிர்ந்து அமைதியை ஏற்படுத்திய பின்னர் 9% வருமானத்தை மட்டுமே பாதுகாப்பு செலவினத்துக்கு ஒதுக்கியுள்ளது. இப்போது ஆயுத பலம் என்ற வகையில் எகிப்து இஸ்ரேலை எட்டிப் பிடிக்கும் அளவுக்கு வளர்ந்துள்ளது. எல்லாம் அமெரிக்கா விற்றவை. எனவே எகிப்தைப் பகைப்பின் இஸ்ரேல் பல சவால்களை இரு பக்கங்களில் இருந்தும் சமாளிக்க வேண்டிவரும். இதுபோன்ற அபாயங்களைத் தடுப்பதற்காகவே இஸ்ரேலும், அமெரிக்கா விரும்பு ஆட்சிமாற்றத்தையே விரும்புவதாக பிரதமர் நெதன்யாஹூ தெரிவித்துள்ளார்.

### அமெரிக்கா-இஸ்ரேல் கூட்டின் தேவை

எனவே கேந்திர நிலையமான எகிப்தை கைவிட இஸ்ரேல்-அமெரிக்க கூட்டணி விரும்பவில்லை. முபாரக்கின் பின்னர் தமக்கான கைப் பிள்ளை ஒருவரை அமர்த்திக் கொள்ள முயற்சிக்கின்றனர். வெற்றியும் பெற்றுவிட்டதைப் போலவே தெரிகிறது. பல சர்வதேச ஊடகங்கள் முன்னிலைப் படுத்தி விளம்பரப்படுத்தும், எகிப்தின் முக்கிய எதிர்கட்சித் தலைவரும், நோபல் பரிசு பெற்ற சர்வதேச அணுசக்தி முகவரமைப்பின் முன்னாள் தலைவருமான எல்பராடி இதற்கேற்ற ஒருவராவார் என கணித்திருக்கின்றனர்.

டுனிஸியப் புரட்சி ஓய்வதற்கு முன்னரே 'கார்டியன்' இதழுக்கு ''எகிப்தும் ஒரு டுனிஸிய வகையிலான வெடிப்பை எதிர்நோக்கியிருக்கிறது. எனக் கூறியவர் எல்பராடிதான். மேலும் ''டுனிஸிய முன்மாதிரிபோல் இல்லாமல், ஒழுங்கான முறையில் மாற்றம் வரும் என்று, தான் நம்புகிறார் என்றும், இருக்கும் முறையில் இருந்தே மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான தேவையான வழிகள் கடைப்பிடிக்க வேண்டும் என்று தான் விரும்புகிறார் என்றும்'' குறிப்பிட்டார். இதிலிருந்து இவர் யாருடையவர் என்பதையும் கணக்கிட்டுக் கொள்ளலாம்.

புரட்சி களைகட்டத் தொடங்கிய தருணத்தில் அமெரிக்காவிலிருந்து குதித்த எல்பராடி ஏதோ தான்தான் அதனை வழி நடத்துவது போல் ஊடகங்களுக்கு பேட்டி கொடுத்தார். இராணுவம் ஆட்சியை பிடிக்க வேண்டுமென வலியுறுத்துவதில் வென்றும் விட்டார்.

இந்தப் புரட்சியில் வென்றது அமெரிக்காவா? எகிப்திய மக்களா? என்ற கேள்வி இவ்விடயத்தில் எழுவது நியாயம். மக்கள் விரும்புவது யாருடைய தலையீடுகளும் அற்ற ஒரு சுதந்திர அரசைத்தான். அதற்காகவே தமது 300 சகோதரர்களை இந்தக் களத்தில் பலிகொடுத்திருக்கின்றனர். இன்னும் ஆறு மாதங்களில் நடக்கப்போகும் தேர்தலில் எல்பராடியை ஜனாதிபதியாக்கி விட்டால் அமெரிக்காவுக்கு வெற்றிதான். அதை தவிர்த்து முஸ்லிம் சகோதரத்துவ கட்சியினர் சார்பில் யாராவது ஆட்சிக்கு வருவார்களானால் மக்களுக்கு வெற்றி. இதனைத் தீர்மானிப்பதில் எகிப்தை முன்னிலைப் படுத்தும் ஊடகங்களுக்குத்தான் முக்கிய பங்குண்டு. ஊடகங்கள் தற்போதைய நிலமையில் யாருக்குக் கைக்கூலி? அமெரிக்காவுக்குத் தானே?



பயிற்சிக்கு தயார்படுத்திவர்களுக்கு கிலாரியின் கடைசி நேர ஆலோசனை



இராணுவத்துக்கு பூச்செண்டு கொடுத்து…

# பிடிவாதம் வெற்றியின் அடிநாதம்



குழந்தைகளை எல்லோருக்கும் பிடிக்கும், குழந்தைகளுக்கோ பிடிவாதம் பிடிக்கும். பிடிவாதம் பிடிக்கும் குழந்தைகளையும் எல்லோருக்கும் பிடிக்கும். ஏன்? வெற்றி என்பது ஒரு கீதம். இந்தப் பிடிவாதம் வெற்றியின் அடிநாதம். பிடிவாதம் ஒரு தவறான குணம் அல்ல. எதற்காகப் பிடிவாதம் என்பதுதான் முக்கியம்.

இந்தியாவில் பிரபலமான துருவன் கதையொன்று உண்டு. அப்பாவின் மடியில் உட்காரப் போனான் குழந்தை துருவன். பிடித்துத் தள்ளிவிட்டால் சித்தி. அழுது கொண்டு அம்மாவிடம் போனான். அம்மா''கடவுளிடம் போய் முறையிடு''என்று கூறினாள். பிடி பிடியென்று கடவுளையே பிடிக்கிற பிடிவாதம் அந்தப் பிள்ளைக்கு ஏற்பட்டது. கண்களை மூடிக்கொண்டு தவம்செய்தான் சிறுவன்.

தவத்திரலிருந்த அந்தக் குழந்தையின் கன்னத்தைத் தன் சங்கினால் தட்டியெழுப்பினார் திருமால் அப்பாவின் மடியில் இடம் கேட்டு கிடைக்காது மனம் வருந்திய குழந்தை தனது பிடி வாதத்தால் குழந்தை ஆண்டவன் மடியில் உட்கார்ந்து கொண்டான் என்பதே இக்கதையின் கருத்து.

அதே மாதிரித்தான் பிரகலாதன் சரித்திரமும். ஆசிரியர் கண்டித் தும், தண்டித்தும், அம்மா விஷம் கொடுத்தும் மலையில் இருந்து வீசியும் உருட்டியும், மிரட்டியும் பிரகலாதன் தன் கருத்தில் இருந்து கொஞ்சமும் மாறவில்லை. இந்தப் பிரகலாதப் பிடிவாதம் உங்க ளுக்கு உண்டா? அப்படியாயின் பிரகாசமான எதிர்காலம் உண்டு.

மழைக்காகப் பிரார்த்தனை இடம்பெற்றது. எல்லோரும் வெறுங் கையை வீசிக்கொண்டு வந்தனர். பிஞ்சுப்பிள்ளை மட்டும் கையில் குடையுடன் வந்தது. பிரார்த்தனை முடிந்ததும் மழைவரும் என்ற அந்தப் பிஞ்சுக் குழந்தையின் மனதில் முளைவிட்ட நம்பிக்கை கடவுளையே யோசிக்க வைத்தது. அவநம்பிக்கையுள்ள ஆயிரம் பேரைத் தண்டிப்பதை விட நம்பிக்கையுடைய குழந்தைக்காக மழை பெய்விப்பது தன்கடமை என்று கடவுள் புரிந்து கொண்டார் என்று இப்படியும் ஒரு கதை உண்டு.

குழந்தைப்பருவம் என்பது அசட்டுத்தனத்தின் அரங்கேற்ற மண்டபம் அல்ல. அசைக்க முடியாத அத்திவாரத்தின் ஆரம்பப் பருவம். அவ்வாறு நீங்கள் இருந்தால் உங்களுக்கு வெற்றி நிச்சயம்.

ஓர் எட்டு வயதுக் குழந்தை இருந்தாள். அவளுக்கு ஒரு தம்பி இருந்தான். தம்பிக்கு வருத்தம் என்பது மட்டுமே புரிந்து கொள்ளும் வயது. ஆனால் என்னநோய்? எப்படிக் குணப்படுத்துவது என்ப தெல்லாம் புரியமுடியாத பருவம்.

திடீரென்று அவள் குடியிருந்த வீட்டைவிட்டு அம்மாவும் அப்பாவும் மிகச்சிறிய வீட்டுக்கு மாறினார்கள்.தம்பியின் மருத்துவச் செலவு, மருந்துச் செலவு, உணவுச்செலவு இவற்றை சமாளிக்க முடியாமல் பெற்றோர்கள் வீடுமாற வேண்டிவந்தது. அந்தச் சின்னப் பிள்ளையைக் காப்பாற்ற ஆயிரம் ஆயிரமாய் கரைந்து கொண்டிருந் தது. இந்தக் கஷ்டம் அந்த எட்டுவயதுக் குழந்தைக்குத் தெரிய வேண்டாம் என்று பெற்றோர்கள் நினைத்தார்கள்.

ஒரு நாள் பெற்றோர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்த போது ''ஏதாவது அதிசயம், அல்லது அற்புதம் தான் இந்தச் சின்னப் பிள்ளையைக் காப்பாற்றவேண்டும்''என்று அழுதனர். அடுத்த விநாடி அந்தச் சிறுமி தான் நெடுநாள் சேமித்து வைத்த உண்டியலை உடைத்து கிடைத்த சில்லறைக் காசுகளை அவசரமாக அள்ளிக் கொண்டு வீட்டுப் பின்வாசல் வழியாக ஓடினாள். அடுத்த தெருவில் இருந்த மருந்துக் கடைக்குப் போய்ச் சில்லறைகளை மேசையில் கொட்டி, ''அற்புதம் கொடுங்கள்''; ''அல்லது அதிசயம் கொடுங்கள்'' என்றாள்.

மருந்துக் கடைக்காரர் புரியாமல் விழித்தார். கடையில் ஏதோ வாங்க வந்திருந்த ஒருவர் ஆச்சரியமாக அந்தச் சிறுமியைக் கவனித் தார். முகம் வாடிப்போனவளைத் தேற்றி விவரம் கேட்டறிந்தார். உலகப்புகழ்பெற்ற நரம்பு அறுவைச் சிகிச்சை நிபுணர் டொக்டர் கார்ட்லன் ஆர்ம்ஸ்ட்ராங்தான் அவர்.

அந்தச் சிறுமியைத் தனது காரிலே ஏற்றிக்கொண்டு சிறுமியின் வீட்டுக்கு வந்தார். சிறுமியின் தம்பிக்கு செய்யவேண்டிய அறுவைச் சிகிச்சை என்ன என்பதை உணர்ந்து கொண்டார்.

அந்தச் சிறுமியிடம் இருந்த சில்லறையைப் பெற்றுக் கொண்டு அந்த அறுவைச் சிகிச்சையைத் தமது மருத்துவமனையில் இலவசமாக நடத்தினார். பிள்ளைப் பருவத்தின் பிடிவாதத்தால் ஓர் அதிசயம் நடந்தேவிட்டது. அற்புதம் நிகழ்ந்தேவிட்டது.

''பெர்சீவிய ரெஸ்'' என்ற ஆங்கில வார்த்தைக்கு எலும்பும் சதையுமான மொழிபெயர்ப்பாக நீங்கள் இருங்கள்; வெற்றி உங்கள் வீட்டுக் கதவைத் தட்டிக் கொண்டு உள்ளேவரும் ஒரு வேளை கதவு பூட்டப்பட்டிருந்தால் தள்ளிக் கொண்டு வந்து வெற்றி உங்களைத் தழுவின் கொள்ளும்.

துருவனைப் போல், பிரகலாதனைப் போல் பிடிக்கவேண்டிய விடயத்தில் பிடிவாதமாக இருங்கள், வெற்றி நிச்சயம்!

கோ.சுவாமிநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

**காதலர் தினம் கொண்டாடப்படுவது எமது கலாசாரத்துக்கு**

ஏற்றது ☐ ஏற்றதன்று ☐

பெயர்: ..........................................................
முகவரி: ..........................................................
..........................................................
அடையாள அட்டை இல. ..........................................................

உங்கள் தீர்ப்புக்களை 24.02.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

# இளவல்கள் வட்டம்

# இன்றைய இளைய சமுதாயம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

வளர்ச்சியடைந்த விஞ்ஞானத் தொழில்நுட்பத்தினால் இணையத் தளங்களில் பாலியல் தொடர்பான பல்வேறு தகவல்களில் இளைய சமுதாயத்தினர் நாட்டம்கொள்கிறார்கள். அதன் காரணமாகப் பல்வேறு துர்நடத்தைகளிலும் ஈடுபடுகிறார்கள். இதனால் தாமும் அழிந்து சமுதாயத்தையும் அழிக்கின்றார்கள்.

இன்று பாடசாலை மாணவிகள் பலர் அசம்பாவிதங்களில் சிக்கியுள்ளார்கள் என்ற தகவல் அறியப்பட்டுள்ளது. இதில் பலர் எய்ட்ஸ் தொடர்பான பரிசோதனையை மேற்கொள்கின்றார்கள்.

பாரம்பரியமாகப் பேணிப் பாதுகாக்க வேண்டிய கலாசாரம் எங்கே போகின்றது என்பதை இளைய சமுதாயத்தினர் எண்ணிப் பார்க்க வேண்டும்.

புனிதமாகப் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டிய சமயத்தலங்கள் கூட கொலை, களவு, துர்நடத்தை போன்றவற்றில் இன்றைய இளைய சமுதாயத்தினர் ஈடுபடுகிறார்கள்.

பெற்றோர்கள் தம் பிள்ளைகளை நல்ல முறையில் வழிகாட்டி சமய சமுதாய விழுமியங்களிலிருந்து தாங்களும் பிறழாது அவர்களுக்கு எடுத்துரைத்து வளர்க்க வேண்டும். பாராட்ட வேண்டிய பிள்ளைகளைப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் பாராட்ட வேண்டும். அதுபோல கண்டிக்க வேண்டிய பொழுது கண்டித்தும் வைக்கவேண்டும். அவ்வாறு செய்தால் அவர்களுக்கும் நற் பெயர் கிடைக்கும். அவர்களைப் பாதுகாத்து அறிவுரை கூறிய பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பாராட்டப்பட வேண்டியவர்கள். பெற்றோர்களிடம் பிள்ளைகள் இருக்கிற நேரங்களை விடப் பாடசாலையில் ஆசிரியர்களுடன் பிள்ளைகள் அதிக நேரத்தைச் செலவிடுகிறார்கள். ஒரு வகுப்பறையில் ஆசிரியரும் மாணவர்களும் ஒரு குடும்ப அங்கத்தவர்களாகவே காணப்படுகிறார்கள்.

ஆகவே ஆசிரியர்களும் பெற்றோர்களும் இளைய சமுதாயத்தினரைக் கண்காணித்துப் புத்திமதி கூறி அன்பான முறையில் வழிகாட்ட வேண்டும்.

**சி.டிக்கா, தரம்-11,**
**யாழ்.சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.**

## அர்த்தமுள்ள ஆர்ப்பரிப்பா...?

கந்தகப் புகையகன்ற
காற்று வீசமுன்னே
முந்தைய நிலை மறந்து
முக்குளிக்கும் மானிடரே!
வந்தது அமைதியென்று
கொந்தளித்தீர் ஆயின்
அமைதியது நிலைத்திடுமா?
வெந்த புண் ஆறிடாமல்
சொந்தங்கள் பரிதவிக்க...
சந்தோசம் வேண்டுமென்று
சகதியில் வீழலாமோ?
குந்தியிருந்து கூழ் குடிக்க
நாதியற்ற எம் மக்கள்
இன்னும் உளர் காணீரோ...!

சிந்தை கலங்கி நீங்கள்
நிந்திக்கும் செயல்கள்
எந்த மோட்சத்தைத் தந்திடப் போகிறது?
நொந்து போன
சொந்தங்களின்
மந்தை வாழ்வு
தொடர்கையிலே
கந்தறுத்துப் பண்பாட்டைச்
சந்தையிலே விற்றிடாதீர்!
கந்தைக்கும் வழியின்றி
எந்தையர் வாடுகையில்
காதலர் தினமென்ற
களியாட்டம்
தேவைதானா...?

**சி.வினோவர்மன்,**
**புளியங்கூடல்.**

# முயற்சி வேண்டும்

பூ என்பது உதிர்வதற்காக மட்டும்தான் பூக்கும். ஆனால் மனிதனோ ஒரு முறை விழுந்தால் மறுமுறை விழுவது கஷ்டம். நம் வாழ்க்கையில் ஆயிரம் தோல்விகள் கண்முன் வரலாம். வெற்றி என்பது வரவேண்டும் என்றால் தொடர்ந்தும் முயற்சிக்க வேண்டும். முயற்சி என்பது இல்லாவிட்டால் வெற்றி என்பது கிடையாது. முயற்சி காரணமாகப் பலபேர் இன்று பல பதவி, புகழுடன் வாழ்கின்றனர். எனவே முயற்சி ஒன்றே எமக்குக் குறிக்கோளாக இருக்கவேண்டும்.

**இரத்தினம் நர்மதன் (தர்சன்),**
**அன்னமாசிலையடி.**




## காதலர் தினம் கொண்டாடப்படுவது

**ஏற்றது**

எம்முடைய தமிழ்ப்பண்பாடு கட்டிக்காக்க வேண்டியதொன்றாகும். அதற்காக மாறிக்கொண்டு வரும் உலகத்தில் அவ்வுலகத்துக்கு ஏற்றவகையில் செயற்படுவதற்கு மேற்கத்தேய கலை, கலாசாரங்களை ஏற்றுக் கொள்ளாது அவற்றைத் தவிர்ப்போமானால் நமது கலை, கலாசாரங்கள் பின்தள்ளப்பட்டுவிடும்.

முற்காலத்தில் நம் தமிழ் வளர்த்த கவிஞர்களை ஒருமுறை நினைவுகூர்ந்து பார்ப்போமானால் கம்பன் தனது கம்பராமயாணத்தில் இராமனும் சீதையும் ஒருவரையொருவர் கண்டு காதல் கொண்டதாகக் கூறியுள்ளார். 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மகாகவி பாரதியார் தனது பாடல்களிலே காதலையும் முன்னிலைப்படுத்திப் பாடியதைக் காணலாம். வள்ளி முருகனுக்குக் கிளியைத் தூதாக விடுகின்ற ஒரு பாட்டில்

*"அல்லிக் குளத்தருகே- ஒருநாள்*
*அந்திப் பொழுதினிலே- அங்கோர்*
*முல்லைச் செடியதன்பாற்- செய்தவினை*
*முற்றுமறந்திடக் கற்றதென்னே..."*

என்ற வரிகளினூடாக அறியலாம்.

இவ்வாறு முற்காலத்திலேயே காதலுக்கு வைத்திருந்த மதிப்பை ஏன் நாமும் பேணக்கூடாது. காதலர்கள் வருடத்தில் ஒருநாள் தமது கவலைகள் அனைத்தையும் மறந்து ஒருவரையொருவர் வாழ்த்தித் தமது காதலை வெளிப்படுத்துகின்ற அந்தக் காதலர்தினத்தை எமது கலாசாரத்துக்குள் உள்ளடக்கிச் சிறந்த கட்டுக்கோப்புடன் கொண்டாடுவோம். இதுவும் எமது கலாசார விழுமியமாகும். அதை நாம் ஏற்றுக் கொள்வோம்.

**ம.கார்த்திபன்,**
**மிருசுவில்.**

**ஏற்றதன்று**

காதல் என்பது ஒரு புனிதமான செயல். இது மனிதவாழ்க்கையில் கட்டிளம் பருவத்தில் ஏற்படும் ஓர் இயற்கையான செயற்பாடாகும். காதலானது இளம் வயதிலுள்ள இருபாலாரின் உள்ளங்களில் ஒருவரையொருவர் புரிந்து மனிதநேயத்தின் அடிப்படையில் இயல்பாக நிகழும் செயலாகும். அதுவே சான்றோர்களால் தெய்வீகமானது எனக் கொள்ளப்பட்டது. அதனைக் காட்சிப்படுத்துவதும் மலினப்படுத்துவதும் கூடாது. எனவே காதலர்தினம் கொண்டாடுவது தமிழ்க் கலாசாரத்திற்கு ஏற்றதன்று.

மேலைத்தேய நாடுகளில் கடந்த பல தசாப்தங்களாகக் காதலர் தினத்தை மிகவும் விமர்சையாகக் கொண்டாடுகிறார்கள். காரணம் அவை நாகரீகமோகம் தலைவிரித்தாடும் தேசம். ஆங்கிலேய நாட்டில் பல வகையான சுதந்திரங்கள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. வயதுவந்த பாடசாலை மாணவர்கள் சுதந்திரமாகப் பழகுவதற்கு அந்த நாட்டுக் கலாசார விழுமியங்கள் துணைபுரிகின்றன. எனவே அந்த நாட்டில் காதலர்தினத்தைக் கொண்டாடுவதற்கு அரசு பல சலுகைகளை வழங்குகிறது. ஆனால் அந்த நாடுகளில் பணிபுரிந்துவிட்டுவரும் வயதுக்கு வந்த இளைஞர் அங்குள்ள நாகரீகத்தினால் ஈர்க்கப்பட்டு, பகட்டான பழக்கவழக்கங்களை எமது நாட்டிற்குள் பரப்புகின்றனர். உடையிலிருந்து உடல், உருவ அமைப்பு வரை எல்லாமே மாற்றம் பெற்றுள்ளன. இவை யாவும் எமது கலாசாரத்தைச் சீரழிக்கவந்த விஷக்கிருமிகள் என்றே கருத வேண்டியுள்ளது. எனவே எமது நாடு, மக்கள், சமூகம் கலாசாரத்தைப் பேணிவளர்க்க வேண்டுமானால் காதலர்தினத்தைக் கொண்டாடுவதைத் தவிர்க்கவேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளேன்.

**க.ஞானமுத்து,**
**கைதடி, மேற்கு.**

## விவாதமேடை

இளைய சமூகத்தின் விவாதத்திறனுக்குக் களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே

**காதலர் தினம் கொண்டாடப்படுவது எமது கலாசாரத்துக்கு ஏற்றது. ஏற்றதன்று**

என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன்வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றிபெறும் என நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

**இளைஞர், யுவதிகளே!**

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

**'இளவல்கள் வட்டம்',**
*'உதயன்',*
*361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பெயர் :- ..........................................................
முகவரி :- ..........................................................
..........................................................
.......................... ..........................
திகதி கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

(சென்றவாரத் தொடர்ச்சி)

159 வருட கல்விச் சேவையால் வலி.கிழக்குக் கல்விக்கு வளம் சேர்த்து உயர்ந்து நிற்கின்ற பாடசாலையாக கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி விளங்குகின்றது

150 ஆவது ஆண்டு கல்விச் சேவையை நினைவு கூரும் வகையில் 2002 ஆம் ஆண்டு அஞ்சல் முத்திரை வெளியிட்டுக் கௌரவிக்கப்பட்ட கல்லூரிப் பரீட்சை முடிவுகள் மற்றும் அடைவு மட்டத்தில் நகரப் பாடசாலைகளுக்குக் குறைவுபடாத நிலையில் உள்ள போதிலும் கல்லூரிக்குரிய வளவசதிகள் உரியமுறையில் வழங்கப்படாமல் இருப்பது 2010 ஆம் ஆண்டுப் பரிசளிப்பு விழா அறிக்கையில் அதிபரினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பரிசளிப்புவிழா அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்கள் வருமாறு:


''முகாமைத்துவ உதவியாளர் - இல்லை, தேவையான ஆளணி - 02 பேர், ஆய்வுகூட உதவியாளர் இல்லை, தேவையான ஆளணி - 02 பேர், காவலாளி ஒருவர் உள்ளார், தேவையான ஆளணி - 02, சுகாதாரத் தொழிலாளி - இல்லை, தேவையான ஆளணி - 02 பேர், நூலக உதவியாளர் - இல்லை, தேவையான ஆளணி - 02 பேர், தோட்டத் தொழிலாளி ஒருவர் உள்ளார், தேவையான ஆளணி - 02 பேர், சித்திரம், சங்கீதம், நடனம், புவியியல், விவசாயம், கிறிஸ்தவம், வரலாறு, நாடகமும் அரங்கியிலும் பாடங்களுக்குத் தனித்தனியான அறைகள் அமைக்கப்படவேண்டும். இவை உட்படப் 14 தேவைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன''.

இவற்றை யாழ்ப்பாணம், நல்லூர்க் கல்விக் கோட்டங்களில் உள்ள முன்னணிப் பாடசாலைகளுடன் ஒப்பிட்டு நோக்கும் போது கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் உள்ள முன்னணிப் பாடசாலையாகவும் நகர எல்லையில் அமைத்துள்ள பாடசாலையாகவும் உள்ள கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கே இத்தனை வள வசதியீனங்கள் இருக்கும் போது கோப்பாய் கோட்டத்திலுள்ள கிராமப்புறப் பாடசாலைகளுக்கான வள வசதிகளில் எத்தகைய குறைபாடு காணப்படும் என்பது தெட்டத்தெளிவாகப் புலனாகின்றது.

கோப்பாய்க் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் புலமைப்பரிசில் பெறுவதற்குத் தகுதிபெற்ற மாணவர்களில் 40 வீதமானவர்கள் நகரப் பாடசாலை நோக்கிச் சென்றுவிடுகின்றனர். கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்குப் பொருத்தமான வள வசதிகள் வழங்கப்படாத இந்த நிலையில் பரீட்சைப் பெறுபேறுகளில் நகரப் பாடசாலைகளுடன் ஒப்பிட்டுக் கல்வி நிர்வாகிகள் கருத்துக் கூறுவது ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் மனத்தாக்கத்துக்கு உள்ளாக்கிவருகின்றது என்பதில் உண்மையில்லாமல் இல்லை.

மாகாணக் கல்வி நிர்வாகமும் வலயக் கல்வி நிர்வாகமும் தமது கடைக்கண் பார்வையைக் கிராமப்புறப் பாடசாலைகளின் மீதும் செலுத்தவேண்டும்.

கோப்பாய்க் கோட்டப் பாடசாலை மாணவர்களின் பரீட்சைப் பெறுபேற்றின் ஆகக் கூடிய வீதத்தை வெளிப்படுத்தும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இருந்து 2009 ஆம் ஆண்டு 20 மாணவர்கள் பல்கலைக் கழக அனுமதியைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.




சற்குணராசா தனுஸன் (விவசாய விஞ்ஞானம்), சிவசுப்பிரமணியம் சுகிர்தவேள் (சித்த மருத்துவம்), சுப்பிரமணியம் ரகுசாந் (சித்தமருத்துவம்), சரண்ணிஜா சண்முகராசா (உயிரியல் விஞ்ஞானம்), இரட்ணேஸ்வரன் நிரோகரன் (கலை - பேராதனைப் பல்கலைக்கழகம்), தர்சிகா மனோகரன் (கலை - பேராதனைப் பல்கலைக்கழகம்), மயுரிகா பாஸ்கர் (கலை - யாழ். பல்கலைக்கழகம்), உஷாந்தினி சண்முகநாதன் (கலை - யாழ். பல்கலைக்கழகம்), செல்வராஜா தர்மராசா (கலை - யாழ். பல்கலைக்கழகம்), ஜனனி தங்கராசா (கலை - மட்டக்களப்பு விபுலானந்தக் கல்லூரி), சங்கீதா இராசதுரை (கலை - மட்.விபுலானந்தக் கல்லூரி), நம்பிகா வைகுந்தவாசன் (கலை - மட். விபுலானந்தக் கல்லூரி), கிருபாஹரி மனோகரம் (நுண்கலை - யாழ். பல்கலைக்கழகம்), தேவகுமாரி சண்முகராசா (நுண்கலை - யாழ். பல்கலைக் கழகம்), பாமினி நடராசா (நுண்கலை - யாழ். பல்கலைக்கழகம்), கோகிலம் செல்லத்துரை (நுண்கலை - யாழ். பல்கலைக் கழகம்), தவராஜா அஜித்குமார் (நுண்கலை - யாழ். பல்கலைக் கழகம்), பாஸ்கரன் பிரதீபன் (நுண்கலை - யாழ். பல்கலைக் கழகம்), சோபிகா ஸ்ரீஸ்கந்தராசா (நுண்கலை - யாழ். பல்கலைக் கழகம்), சாளினி ஜெகதீஸ்வரன் (நுண்கலை - யாழ். பல்கலைக்கழகம்),

ஆண்டுதோறும் கணிசமான மாணவர்கள் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கும் தெரிவு செய்யப்படுகின்றனர். 2010 ஆம் ஆண்டு தரம்- 13 கலைப் பிரிவு மாணவன் செல்வன் வோ.டேமியன்ராஜ் உலக ஈர நில ஓவியப்போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் வடக்கு மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

தமிழ்த்தினப் போட்டிகள், ஆங்கிலதினப் போட்டிகள், மெய்வன்மைப் போட்டிகள், சாரணர் நிகழ்வுகள், கணினி மென்பொருளாக்கம், சித்திரப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு போட்டிகளிலும் வெற்றிகளைப் பெற்று முன்னணியில் திகழும் கல்லூரி தேவையான வளவசதிகளைப் பெற்று மேல்நிலையடைந்து தேசியப் பாடசாலையாகத் தரமுயர வேண்டும்.

(முற்றும்)

# வலிகாமம் கிழக்கின் வாழ்வாதாரத்தில் கூட்டுறவு அமைப்புக்களின் பங்களிப்பு

தொகுப்பு:ஞான ஆதவன்



(சென்றவாரத் தொடர்ச்சி)

**1971** ஆம் ஆண்டு அரசினால் மேற்கொள்ளப்பட்ட கூட்டுறவு மறுசீரமைப்பின் பிரகாரம் வலி. கிழக்கில் கிராம மட்டத்தில் செயற்பட்டுவந்த 58 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் வலி. கிழக்கு வடபகுதி , வலி. கிழக்குத் தென்பகுதி என இரண்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக மறுசீரமைப்புச் செய்யப்பட்டன.

**அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

வலி . கிழக்கு வடபகுதியில் கிராம மட்டத்தில் செயற்பட்டுவந்த 40 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் உள்ளீர்ப்புச் செய்து 1971 . 03 . 10 ஆம் திகதி வ/1546 ஆம் பதிவு இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டது. வலி. கிழக்கு வடபகுதி (அச்சுவேலி) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலயம் அச்சுவேலி இராசவீதியில் செயற்பட்டுவந்தது. 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வை அடுத்து சங்கத்தின் தலைமை அலுவலகக் கட்டடத்தில் பாதுகாப்புத் தரப்பினரின் முகாம் செயற்படுவதால் யாழ்ப்பாணம் - பருத்தித்துறைப் பிரதான வீதியில் புத்தூரில் சங்கத்தின் தலைமைப் பணிமனை செயற்பட்டு வருகின்றது.

யாழ். மாவட்டத்தில் முதன்மை இடத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 36 கிளை நிலையங்களும் கிராமிய வங்கி, எரிபொருள் நிரப்பு நிலையம் என்பனவற்றுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. 8 கோப்சிற்றி விற்பனை நிலையங்கள் செயற்படுகின்றன. சங்கத்தின் பொதுமுகாமையாளராக த. கவீந்திரதாஸ் பணியாற்றுகின்றார். க. பேரின்பநாயகம் தலைமையில் நெறியாளர் குழு செயற்படுகின்றது. 23 ஆயிரத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இதில் 11 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் 100 ரூபாவுக்கு மேற்பட்ட பங்கு உரிமையைக் கொண்டவர்கள். 29 கட்டடத்தொகுதிகள் சொந்தமாக உள்ளன. 6 கோடி ரூபா நிரந்தர வைப்பில் உள்ளது. 3 லொறி உட்பட நான்கு வாகனங்கள் உள்ளன. 100 இற்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்டது. 37 ஆயிரத்துக்கு மேற்பட்ட நிரந்தர நுகர்ச்சியாளர்களைக் கொண்டுள்ளது.

**வலி. கிழக்குத் தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

நீர்வேலிக் கந்தசாமி கோயிலுக்கு முன்பாக யாழ்ப்பாணம், பருத்தித்துறை பிரதான வீதியோரத்தில் அமைந்துள்ள வலி. கிழக்கு (நீர்வேலி) பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் தனது பிராந்தியத்தில் கிராம மட்டத்தில் செயற்பட்ட 18 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை உள்ளீர்ப்புச் செய்து 1971.02.22 ஆம் திகதி ஜே/1554 இலக்கத்தில் பதிவு செய்துள்ளது.

நீர்வேலிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளராக க. சிவலிங்கம் கடமையாற்றுகின்றார். நெறியாளர் குழு நா. சுந்தரலிங்கம் தலைமையில் செயற்படுகின்றது. 3 கிராமிய வங்கிகள், எரிபொருள் நிரப்பு நிலையம் என்பனவற்றோடு 34 கிளை நிலையங்களும் செயற்படுகின்றன. 25 ஆயிரத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டது. 10 ஆயிரம் பேர் வரையில் 100 ரூபாவுக்கு மேற்பட்ட பங்கு உரிமையைக் கொண்டுள்ளனர். 5 கோப்சிற்றிகள் செயற்படுகின்றன. 3 லொறி உட்பட நான்கு வாகனங்கள் உள்ளன. 22 விற்பனை நிலையக் கட்டடத் தொகுதிகள் சொந்தக் கட்டடத்தில் செயற்படுகின்றன. 18 மில்லியன் ரூபாவை நிரந்தரவைப்பில் கொண்டுள்ளது. 100 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். 35 ஆயிரத்துக்கு மேற்பட்ட நிரந்தர நுகர்ச்சியாளர்களைக் கொண்டது.

**சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள்**

கூட்டுறவு அமைப்பின் தோற்றமே சிக்கன சேமிப்புக் கடனுதவி என்ற வகையில் அறிமுகமாவதைச் சர்வதேச ரீதியிலும் இலங்கையிலும் கண்டு கொள்ள முடிகின்றது. யாழ். மாவட்டத்தில் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை செயற்பட்டுவந்த காலப்பகுதியில் கூட்டுறவு மாகாண வங்கி அமைக்கப்பட்டது. அதன்மூலம் ஐக்கிய நாணய சங்கங்கள் தமது நிதித் தேவையைப் பூர்த்திசெய்து வந்தன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு இலங்கை வங்கி வழங்கும் பணப் பரிசில்கள்

இலங்கை வங்கி சிறுவர் சேமிப்பு 'பொன்அரும்பு' கணக்குகளை வைத்திருக்கின்ற மாணவர்களுக்கு பாடசாலை சேமிப்புப் பிரிவுகளுக்கூடாக அவர்கள் பரீட்சைகளில் சித்தியடையும் போது பணப்பரிசில்கள் அவர்களின் கணக்குகளில் வைப்பிலிடப்படுகின்றது.

இவ்வாறு இலங்கை வங்கி தலைமை அலுவலக பாடசாலை சேமிப்புப் பிரிவு இணைப்பதிகாரி ஆர். சுதாகரன், கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில் நடைபெற்ற முதலாம் ஆண்டு புதிய மாணவர்கள் அனுமதிக்கும் நிகழ்வில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

அவர்மேலும் கூறுகையில் இலங்கை மத்திய வங்கியினாலும், கல்வி அமைச்சினாலும் அங்கீகரிக்கப்பட்டு, அமைக்கப்படும் பாடசாலை சேமிப்புப் பிரிவுகளில் கடமையாற்றும் மாணவ வங்கி உத்தியோகத்தர்கள் இலங்கை வங்கிக்கிளைகளின் இணைப்பாளராகச் செயற்பட்டு சேமிப்பு வைப்பை ஊக்குவிக்கின்றனர்.

இவர்களுக்கு ஒருவருட முடிவில் பெறுமதி வாய்ந்த வங்கிச் சான்றிதழ்கள் வழங்கப்படுவதனால் எதிர்காலத்தில் தொழிற் தகைமை பெற அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படுகின்றது.

மேற்படி கணக்குகளில் கூடிய வைப்பைக் கொண்ட மாணவர்களுக்கு 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில், ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடையும் போது நாடுபூராவும், மாவட்ட மட்டத்திலும் வெகுமதியாக பணமாக வழங்கப்படுகின்றது.

எமது நாட்டின் முதற்தரமான கூடிய வளமுள்ள அரச வங்கியான இலங்கை வங்கியில் இதுவரை 3500 இற்கும் மேற்பட்ட பாடசாலை சேமிப்புப் பிரிவுகள் செயற்படுவதால் எதிர்காலத்தில் மாணவர்கள் சிறந்த கல்விமான்களாகச் செல்வதற்கும் ஆளுமை கொண்ட நற்பிரஜையாக விளங்குவதற்கும் இலங்கை வங்கி ஊக்குவித்துக் கொண்டிருக்கின்றது.

உங்கள் பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கை வளம் பெறுவதற்கு இலங்கை வங்கியின் பொன்அரும்பு கணக்கு களை ஆரம்பித்து அவர்களின் பெயரில் பணத்தை முதலீடு செய்ய வேண்டும் என்றார். (த)




இலங்கை வங்கி அச்சுவேலிக் கிளையின் விவசாயிகள், சுயதொழில் முயற்சியாளர்களுக்கான கடன் கொடுப்பனவும் விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் கௌரவிப்பு நிகழ்வும் கடந்த 19 ஆம் திகதி நடைபெற்றது.
நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வங்கியின் தலைமை அதிகாரி டாக்டர் காமினி விக்கிரமசிங்க, அச்சுவேலிக் கிளையின் முகாமையாளர் கூ.புவனேந்திரன் உள்ளிட்ட விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருக்கின்றனர். (த-11)



ஐ.ஐ.எஸ்.குறூப் நிறுவனத்தின் 15 ஆவது நிறுவன தின விழாவும் பட்டமளிப்பு விழாவும் கடந்த 19 ஆம் திகதி யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி ஜுபிலி மண்டபத்தில் நடைபெற்றன. நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் இயக்குநருமான கு.விக்னேஸ் மாணவி ஒருவருக்குச் சான்றிதழ் வழங்குகிறார். (த)

# வீடுகளுக்கு யுனிலிவர் நிறுவனம் அறிமுகப்படுத்தும் புரூ கோப்பி

கடந்த 2 ஆண்டு காலப்பகுதியில் யுனிலீவர் ஸ்ரீலங்காவின் விற்பனைச் சேவைத் தொழிற்பாட்டின் மூலமாகப் பொது மற்றும் விளையாட்டு நிகழ்வுகள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் பல்வேறுபட்ட நிறுவனங்கள் ஊடாக புரூ கோப்பி இலங்கை நுகர்வோரை எட்டியிருந்தது.

இந்த உற்பத்தி வீட்டு நுகர்வுத் தேவைகளுக்கும் கிடைக்கவேண்டும் என்று நுகர்வோர் மத்தியில் தொடர்ச்சியாக அதிகரித்துவந்த வேண்டுகோளுக்கு இணங்க புரூ உடனடிக் கோப்பியை 50 கிராம் சிறிய பைகள், 50 கிராம் ஜாடிகள் மற்றும் 100 கிராம் ஜாடிகள் ஆகியவற்றில் இலங்கை நுகர்வோர் கொள்வனவு செய்யக் கூடியதாக நாடெங்கிலுமுள்ள விற்பனை நிலையங்களூடாக அறிமுகப்படுத்துவதற்கு யூனிலிவர் ஸ்ரீலங்கா தீர்மானித்துள்ளது.

விருபத்துக்குரிய ரொபஸ்டா கோப்பி (Robusta) மற்றும் அராபிகா கோப்பி விதை (Arabica) ஆகியவற்றின் நேர்த்திமிக்க கலவையுடனான கோப்பி இனிமை, கருஞ்சுவையுடன் ஈடு இணையற்ற



வாசனையைத் தோற்றுவிக்கின்றது.


வத்தளையிலுள்ள ஆர்ப்பிகோ சுப்பர் சென்டரில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது புரூகபே மூலமாக புரூ கப்பச்சினோ, எஸ்பிரஸ்ஸோ மற்றும் புரூ பெரி பிளாஸ்ட் புரூ சொக்கோ மின்ட் மற்றும் புரூ மொச்சா பேர்க் போன்ற குளிர்க் கோப்பி வகைகள் உள்ளிட்ட பரவசமூட்டுகின்ற வேறுபட்ட கோப்பி வடிவங்களில் புரூ கோப்பி கிடைத்து வந்தது. புத்தாக்கம்மிக்க இந்த வகைகளும் சுவைக்கலவைகளும் சந்தேகமின்றி இலங்கை நுகர்வோருக்குப் புதியதொரு கோப்பி அனுபவத்தை வழங்கும்.

சாதாரண தருணங்களையும் ஆனந்த மூட்டு வனவாக மாறச்செய்யும் வகையில் புரூ கோப்பி அனைவரையும் ஆட்கொண்டுள்ளது.

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு உதவும்

முப்பது வருடப் போர்ச் சூழலுக்குப் பின்னர் கடந்த 2010 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் உல்லாசப் பயணத்துறை வளர்ச்சி காண ஆரம்பித்துள்ளது.

தற்போது ஆரம்பமாகியுள்ள 10 ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெற் போட்டிகள் 49 இல் 12 போட்டிகள் இலங்கையில் நடைபெறுகின்றன. இலங்கையில் இப்போட்டிகள் நடைபெறுவது இலங்கை உல்லாசப் பயணத்துறையில் பெருவளர்ச்சிகாண உதவும் என்று நம்பப்படுகிறது.



கடந்த ஆண்டில் முந்திய ஆண்டுகளை விட மிகக் கூடுதலான உல்லாசப்பயணிகள் 656,476 பேர் இலங்கை வந்திருந்தனர். மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்தவர்களின் எண்ணிக்கை 53.7 சதவீதமும் தெற்கு ஆசியாவிலிருந்து வந்தவர்களின் எண்ணிக்கை 42.9 சதவீதமும் பிரான்சிலிருந்து வந்தவர்களின் எண்ணிக்கை 100 சதவீதமும் நெதர்லாந்து, சுவீடன் ஆகிய நாடுகளிலிருந்து வந்தவர்களின் எண்ணிக்கை முறையே 103 சதவீதமும் 287 சதவீதமும் இந்தியாவிலிருந்து வந்தவர்களின் எண்ணிக்கை 20.8 சதவீதமும்2010 இல் அதிகரித்திருந்தன.

உலகில் 14 நாடுகள் கலந்து கொள்ளும் 10ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெற் போட்டிகளில் 12 போட்டிகள் இலங்கையில் நடைபெறவுள்ளதால் வெளி நாட்டவர்கள் பலர் போட்டிகளை நேரில் பார்க்க இலங்கை வருவார்கள். அவர்கள் நாடெங்கும் சுற்றிப் பார்க்கத் தவறமாட்டார்கள். இலங்கை முழுவதிலும் உள்ள இயற்கை வளங்களும் இலங்கையர்களின் அன்பான உபசரிப்பும் இங்குள்ள தங்குமிட வசதிகளும் வெளி நாட்டவர்களைக் கவரவே செய்யும் ஆகவே அவர்கள் தமது நாடுகளுக்குத் திரும்பியதும் இலங்கையைப் பற்றி மற்றவர்களுக்கும் கூறி அவர்களுடன் திரும்பவும் இலங்கை வந்து உல்லாசமாகக் காலத்தைக் கழிக்கவே விரும்புவார்கள்.

உல்லாசப் பயணத்துறை அபிவிருத்திக்கு பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அவை பூர்த்தி அடைந்ததும் உல்லாசப் பயணிகளின் வருகை மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கலாம். இங்கிலாந்திலிருந்து வெளிவரும் பிரபல பத்திரிகைகளில் ஒன்றான 'இன்டிபெண்டன்ட்' (The Independent) உல்லாசப் பயணத்துக்கு உலகிலேயே [illegible] இலங்கைதான் என்று கடந்த 15.02.2011 இல் தெரிவித்திருக்கிறது. அப்பின் உல்லாசப் பயணிகளின் வருகைக்கு கேட்கவா வேண்டும்?

# எயார்டெல் லட்சாதிபதி வெற்றியாளர் அறிவிப்பு

எயார்டெல் லட்சாதிபதி போட்டியிலே கலந்துகொண்டிருந்த 150,000 இற்கும் மேற்பட்ட போட்டியாளர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 8 அதிஷ்டசாலி வெற்றியாளர்கள் தலா ரூபா 100,000 பணப் பரிசைத் தட்டிச்சென்றனர்.

கடந்த ஆண்டு டிசம்பரிலே நிறைவடைந்த 2 மாதங்களாக நீடித்திருந்த ஊக்கு விப்புப் போட்டிக் காலப் பகுதியிலே தங்களுடைய எயார்டெல் மொபைல் தொலைபேசியிலே 7551 இனை டயல் செய்வதன் மூலமாக அதிக எண்ணிக்கையிலான வரவேற்புத்தொனிகளை (Welcome Tunes) தரவிறக்கம் செய்துகொண்ட எயார்டெல் வாடிக்கையாளர்கள் மத்தியிலிருந்து வெற்றி பெற்ற போட்டியாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

கொழும்பிலுள்ள எயார்டெல் தலைமை அலுவலகத்தில் அண்மையிலே இடம்பெற்றி ருந்த இது தொடர்பான நிகழ்வில் இலங்கைக் கிரிக்கெட் அணியின் தலைவரான குமார் சங்கக்கார கலந்துகொண்டு சிறப்பித்தார். அதிஷ்டசாலி வெற்றியாளர்களுக்கான பரி சில்களையும் அவர் கையளித்தார்.

பார்தி எயார்டெல் லங்காவின் விற்பனைகள் மற்றும் சந்தைப்படுத்தல் தலைமையாளரான விதுர் ரட்டன் கூறுகையில், "எயார்டெல் வரவேற்புத் தொனிகள் இலங்கையெங்கிலும் வாடிக்கையாளர்களுக்கு எம்மால் வழங்கப்பட்டு வருகின்ற மிகவும் பிரபலமான சேவைகளுள் ஒன்றாக மாறியுள்ளது. எயார்டெல் வரவேற்புத்தொனி (Welcome Tune) கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் மொபைல் வலையமைப்புகளுக்குள் ஒரு தனித்துவமான இடத்தைப் பிடித்துள்ளது'' என்று குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளின் கதவுகளைத் திறந்தவன் (33)


சோபியா

என்னதான் உலக அக்கிரமங்களை வெளிப்படுத்துவதையே தன்னுடைய நோக்காகக் கொண்டு யூலியன் அலைந்தாலும் பெண்கள் விஷயத்தில் அவனது மனம் எப்போதுமே அலைபாய்ந்தபடியே இருந்தது.

இந்தப் பலவீனத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த அமெரிக்கா தீர்மானித்தது. ஒரு மாங்காயை வீழ்த்த ஒரே நேரத்தில் இரண்டு கற்களை அமெரிக்கா யூலியனின் சுவீடன் விஜயத்தின்போது பலமாக வீசியது.

முதலாவது கல் - அன்னா. இரண்டாவது கல் 26 வயதே நிரம்பிய சோபியா. சுவீடன் நாட்டு மங்கை.

ஊடகத்துக்கு எந்தவித சம்பந்தமுமில்லாத அவள் யூலியனின் உரையை முன்வரிசையில் உட்கார்ந்திருந்தபடியே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது கண்களின் தூதில் எடுத்த எடுப்பிலேயே யூலியன் சரிந்து விட்டான். நிகழ்ச்சிக்குப் பின் நடந்த விருந்தின்போது சோபியாவின் தொலைபேசி எண்ணை யூலியன் கேட்க அவளும் இதையே எதிர்பார்த்திருந்தது போன்று உடனேயே கொடுத்தாள்.அன்றிரவு அன்னாவுக்கு 'அல்வா' கொடுத்து விட்டு சோபியாவின் வீட்டில் யூலியனின் உல்லாசம் நிகழ்ந்தது.

**யூலியன் அசாஞ்சே பற்றிய ஒரு விறு விறு தொடர்**

எல்லாம் முடிந்தாயிற்று. பாராட்டு மழையில் நனைந்தபடி யூலியன் சுவீடனில் இருந்து புறப்பட்டான். அதற்குப் பிறகுதான் வெடித்தன அமெரிக்கா புதைத்திருந்த கன்னிவெடிகள்.

சுவீடனில் இருந்து வெளியேறிய கையோடு நடந்தவற்றையெல்லாம் மறந்தவனாக விக்கிலீக்ஸ் தளத்தின் அடுத்த வெளியீட்டுக்கான வேலைகளில் யூலியன் ஆழ்ந்தான். அந்தவேளையில்தான் ஒருநாள் சுவீடன் நீதிமன்றத்தில் இருந்து யூலியனுக்கு அழைப்பாணை வந்திருந்தது. முதலில் அந்த வழக்கை யூலியன் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் சிறிது நாள்களில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்படும் உத்தரவை சுவீடன் நீதிமன்றம் விடுத்த செய்திகள் வெளிவந்த பின்னர்தான் தான் மீளமுடியாத சதிவலை ஒன்றில் சிக்க வைக்கப்பட்டிருப்பதை உணர்ந்து கொண்டான். அப்படி என்னதான் வழக்கு?

ஊடக சுதந்திரத்துக்கு சுவீடன் எந்தளவு வசதிகளை வழங்கியுள்ளதோ அதைவிடவும் பெண்ணுரிமைக்குக் கட்டற்ற சுதந்திரமும் செல்லமும் கொடுத்து வருகின்றது. அதனால்தான் கணவன் குறட்டை விடுவதாகக் குற்றம் சாட்டிக்கூட பெண்கள் விவாகரத்தை அங்கு வாங்க முடிகின்றது. அத்தோடு பெண்களின் சம்மதத்துடன் ஓர் ஆண் உறவு கொண்டாலும் கூட அவன் மீது வழக்குப்பதிவு செய்வதற்கான வழிகளும் அங்கு இருக்கின்றன. பெண்ணுக்குக் கூறாமல் ஆணுறை இல்லாமல் உறவு கொண்டாலோ அல்லது வேண்டுமென்றே ஆணுறையைச் சேதப்படுத்தினாலோ அந்த ஆண்மீது பெண்கள் வழக்குத் தொடர முடியும். (சுவீடனுக்குச் செல்லும் ஆண்களே உஷார்!).

யூலியனுடன் உறவு கொண்ட அன்னா, சோபியா இருவரும் இத்தகைய குற்றச்சாட்டின் பேரிலேயே யூலியன் மீது சுவீடன் நீதிமன்றத்தில் வழக்கைத் தொடர்ந்தனர். இந்த இரண்டு பெண்களும் சம்பந்தப்பட்ட நிகழ்வுகள் தங்கள் சம்மதத்துடன்தான் நடந்தேறின என்பதை மறுக்கவில்லை.

ஆனால் தமக்குத்தெரியாமல் வேண்டுமென்றே ஆணுறையைச் சேதமாக்கி யூலியன் உறவு கொண்டார் என்ற சிறுபிள்ளைத்தனமான குற்றச்சாட்டே இவர்களுடையது. வழமையாக இத்தகைய குற்றங்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை அபராதமாக விதிப்பதுடன் நீதிமன்றம் அடங்கிவிடும்.

முதலில் இந்த வழக்கை விசாரித்த நீதிபதி தகுந்த ஆதாரங்கள் இல்லாததால் வழக்கைத் தள்ளுபடி

ஒளண்யன்

செய்திருந்தார். ஆனால் இதைவிட்டால் யூலியனை மடக்க வேறு சந்தர்ப்பம் கிடையாது என்பதால் மேன்முறையீடு செய்யப்பட்டு அது பிடிவிறாந்து என்பதையும் தாண்டியது. அமெரிக்காவின் இடைவிடாத நச்சரிப்பாலேயே இவ்விதம் நிகழ்ந்தது.

ஆயினும் இந்த வழக்கே அரசியல் பின்னணி வாய்ந்தது என்ற யூலியனின் வாதத்தை மெய்ப்பிப்பது போன்று அன்னா, சோபியா இருவரைப் பற்றியும் சில திடுக்கிடும் இரகசியங்கள் அம்பலமாகின. கூடவே கொலைவெறியோடு அமெரிக்காவின் துரத்துதலும் யூலியனைத் தொடர்ந்தது.

*(திரைகள் இன்னும் திறக்கும்)*

# கலைகளுக்கு மகுடம் ஓவியக்கலை

**நாண்** கலைகளில் ஒரு பகுதியான ஓவியக்கலை பலரது கவனத்தையும் தம்வசம் ஈர்த்துள்ளது. கலைகளுக்குள் மகுடமாக விளங்குவது ஓவியக் கலை என்றால் அது மிகையாகாது என ஓவியத் துறையில் 40 வருட அனுபவத்தைக் கொண்டவரும் யாழ். மத்திய கல்லூரியின் ஓய்வு பெற்ற சித்திரப் பாட இணை ஆசிரியருமான கலாபூஷணம் திருமதி கோமதிதேவி செல்வநாதன் தெரிவித்துள்ளார்.




அவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் உயர் கல்வியை சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியிலும் ஆசிரிய பயிற்சியினை பலாலி ஆசிரியர் கலாசாலையிலும் பெற்றுள்ளார். அதன்பின் பயிற்சி ஆசிரியராக மன்னார், கண்டி, வத்தேகம, மல்லாவி G.T.M.S, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, டாக்டர் கலாநிதி தியாகராஜா மகாவித்தியாலயம், கனகரத்தினம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கற்பித்தார்.

மேலும் யாழ்.மத்திய கல்லூரியில் 1972 ஆம் ஆண்டு நிரந்தர ஆசிரியராக நியமனம் பெற்ற அவர் 2003 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டுவரை ஓவிய இணை ஆசிரியராகக் கடமைபுரிந்து 2006 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றுள்ளார்.

அவரது ஓவியக் கல்வியில் குரு என்று சொல்லும் அளவிற்கு யாரும் இல்லை எனவும் பரம்பரையாகவேதான் இந்தக் கலையைப் பெற்றதாகவும் குறிப்பிட்டுள்ளார். சிறுவயதிலேயே சுவர்களிலும் புத்தகங்களிலும் ஓவியம் வரைந்து பார்த்த அவர் சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் என்பதற்கிணங்க ஓவியக் கலையைத் தொடர ஆரம்பித்தார்.

சிறு வயதில் இவரால் சுவர்களில் வரையப்பட்ட ஓவியங்களைப் பார்த்து அவரது தாய் உற்சாகம் ஊட்டி ஓவியக் கலையில் சிறந்து விளங்க வழிவகுத்துக் கொடுத்தார். அதுமட்டுமன்றி எட்டாம் வகுப்புப் படிக்கும் போது ஆசிரியர் வன்னித்தம்பி புத்தர் சிலை ஒன்றினை வரையும்படி கூறியபோது அது அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. அவர் முதன் முதலாக உயிரோவியமான கெனடியை ஓவியமாக வரைந்தார். அதுதான் அவரை ஓவியத்தின் உச்சத்துக்குக் கொண்டு சென்றது. அப்பொழுதுதான் ஓவியத்தில் அவருக்குத் திறமை உண்டு என

**ஓவியத்துறையில் 40 வருட அனுபவம் வாய்ந்த யாழ்.மத்திய கல்லூரியின் ஓய்வுபெற்ற சித்திரபாட இணை ஆசிரியர் கலாபூஷணம் திருமதி கோமதிதேவி செல்வநாதனுடனான நேர்காணல்**

அனைவருக்கும் தெரிந்தது.அவரது 'கெனடி' ஓவியம் பலரது பாராட்டையும் பெற்றதால் அவரது அக்கா ஆர்வத்தோடு சித்திரத்துக்குரிய உபகரணங்களை வாங்கிக் கொடுத்தார். ஓவியம் வரையும் போது இலக்கியம் தொடர்பான ஓவியங்களில் அதிகமான ஈடுபாடு காட்டினார். அதைவிட இயற்கையான ஓவியங்கள், கற்பனை ஓவியம், சிறுகதைகள், தொடர் கதைகள் என்பவற்றுக்குரிய ஓவியங்களுடன் ஆலயங்களுக்குரிய சுவரோவியங்கள், ஆலய திரைச்சேலைகள், விளம்பரப் படங்கள் வரைதல் போன்றவற்றிலும் மிகுந்த அக்கறை செலுத்தி வந்தார்.

2004 ஆம் ஆண்டு அனைத்து ஆசிரியர்களுக்குமான ஓவியப்போட்டி யாழ்.கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றபோது அதில் இலக்கியக் காட்சியான ''விஸ்வாமித்திரரும் சகுந்தலையும்'', விஸ்வாமித்திரர் சகுந்தலைக்கு சாபம் அளிக்கும் காட்சி வரைவதற்கு 40 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அதன் போது வரைந்த ஓவியத்தில் அவருக்கு இரண்டாம் பரிசு கிடைத்தது. மறுநாள் வெளிவந்த உதயன் பத்திரிகையில் ஓவியத்தின் புகைப்படத்துடன் ''இவர்களா இப்படி வரைந்தார்கள்'' எனும் வாசகத்தோடு

**நேர்காணல்: வாணி**

யாழ். மாவட்டத்தில் இவ்வாறான ஓவியம் வரைவதிலும் திறமையானவர்கள் உண்டா? என மேலும் விமர்சிக்கப்பட்டிருந்தது. இதனைவிடப் பல சுவரொட்டி ஓவியங்கள் வரைந்து தங்கப் பதக்கம், வெள்ளிப் பதக்கங்கள், சான்றிதழ்கள், பரிசுகள் எனப் பல பாராட்டுக்களையும் பெற்றுள்ளார். சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியில் நடைபெற்ற அகிலஇலங்கைகம்பராமாயணசித்திரப் போட்டியில் அசோகவனத்து சீதையைச் சித்திரமாக வரைந்து இரண்டாம் இடத்தைப்பெற்றுள்ளார். 1987 ஆம் ஆண்டு மு.சு. சிவப்பிரகாசம் எழுதிய "விஷ்ணு புத்திர வெடியரசன் வரலாறு'' எனும் நூலுக்கு அட்டைப்படம் வரைந்து பிரபல்யம் அடைந்தார்.

மேலும் இலக்கியப் புலவர் வித்துவான் சிவபாதசுந்தரத்தின் இலக்கிய நூலுக்குரிய ஓவியங்கள் வரைந்து கொண்டிருந்த காலத்தில் புலவர் தன்னிடம் உள்ள பெறுமதி வாய்ந்தஇலக்கிய நூல்களை இறக்கும் தருணத்தில் அவரிடம் ஒப்படைத்தது குறிப்பிடத்தக்கது. ஓவியத் துறையில் மறக்க முடியாத முதன்முதலாகவரைந்த 'கெனடி' ஓவியமே அவரைப் பள்ளிப்பருவத்தில் பலரது பாராட்டையும் பெற வைத்து மேல் நிலைக்கு உயர்த்தியது. 1987 ஆம் ஆண்டு ''விஷ்ணு புத்திரன் வெடியரசன் வரலாறு'' எனும் நூலுக்கு அட்டைப் படம் வரையும் போது, நூலாசிரியர் பல முகத்தில் புன்சிரிப்பு, வீரம், கதைக்கேற்ப இலக்கிய ஓவியமாக வரைய வேண்டும் எனப் பல நிபந்தனைகளை விடுத்திருந்த போதிலும் மிகத் துல்லியமாக வரையப்பட்ட இந்த ஓவியம் அக்காலத்தில் மிகவும் சிறப்புப் பெற்றது.



இலை மறை காயாக இருந்த என்னை இந்த உலகிற்கு அறிமுகம் செய்ததோடு உயிர் ஓவியம் வரைவதற்கு உதவி செய்பவரும் எனது கணவரே. அதுமட்டுமன்றி என்னுடைய ஓவியக்கலைக்குமுழு ஆணிவேராக இருப்பவர் அவரே. ஓவியம் துறை சார்ந்தவர்களுக்கோ, வளர்ந்துவரும் ஓவியர்களுக்கோ, எதனையும் கலைநயத்துடனும் உயிரோட்டத்துடனும் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் உண்டு. அவர்கள் தினமும் ஓர் ஓவியமாவது வரைந்து கையைப் பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும். அத்தோடு எத்துறையிலாவது ஆர்வம் உள்ள வர்கள் அத்துறைபற்றிய அனுபவம் இல்லா விட்டாலும் அதனை இரசிக்கக் கூடிய வகையில் அறிந்து கொள்ள வேண்டும். குறை குற்றங்கள் சொல்லாது அத்துறை பற்றிய அறிவிருந்தால் அவற்றினை விமர்சிக்கத் தெரிய வேண்டும். மனம் திறந்து பாராட்டக் கற்றுக்கொள்வதோடு ஊக்கப்படுத்த வேண்டும் என்பதே கலைத்துறையில் உள்ளவர்களின் விருப்பு. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
24 பெப்ரவரி 2011 வியாழக்கிழமை



சீனா வந்திருந்த கஜகஸ்தான் அதிபர் நூர்சுல்தான் நாஸர்பையாவ் (இடது), அந்நாட்டு அதிபர் ஹூஜின்டாபோவை, தலைநகர் பீய்ஜிங் அதிபர் மாளிகையில் சந்தித்து பேசினார்.(ம)

# லிபியாவில் இருந்து கனேடியர்கள் விமானம் மூலம் வெளியேற்றம்

## வன்முறையை அடுத்து நடவடிக்கை

றொறன்ரோ, பெப்.24

லிபியாவில் வன்முறை தலை தூக்கியுள்ளது. பாதுகாப்பு படையினரின் தாக்குதலில் 200 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இங்கு கனடா நாட்டு குடிமக்களும் பெருமளவு உள்ளனர். இவர்களை பாதுகாப்பாக வெளியேற்ற கனடிய அரசு திட்டமிட்டு வருவதாக பிரதமர் ஸ்டீபன் உறுதியளித்துள்ளார்.

லிபியாவில் கடந்த 42 ஆண்டுகளாக கடாபியன் ஆட்சி நடைபெற்று வருகிறது. கடாபியின் சர்வாதிகார ஆட்சியை அகற்ற மக்கள் புரட்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தநிலையில் -

லிபியாவில் உள்ள தமது நாட்டு மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றுவது தொடர்பாக பிரிட்டன், பிரான்ஸ், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகள் முனைந்துள்ளன. அந்த நாடுகளை தொடர்ந்து கனடாவும் தமது மக்களை தாயகம் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது குறித்து பிரதமர் ஸ்டீபன்ஹார்பர் விக்டோரியா கூறுகையில்,''மக்களை பாதுகாப்பாக அழைத்து வருவது குறித்து ஆலோசித்து வருகிறோம்'' - என்றார். (ம)

# 15 மாதக் குழந்தையின் படங்கள் 30 ஆயிரம் பவுண்ஸ் பேரம்

லண்டன், பெப்.24

இங்கிலாந்தின் புகழ்பெற்ற கால்பந்து வீரர் வெய்னே ரூனி கோலின் தம்பதியின் குழந்தை தொடர்பான அரிய புகைப்படங்கள் திருட்டுப் போய்விட்டன.

இந்த புகைப் படங்களை திரும்ப ஒப்படைக்க 30 ஆயிரம் பவுண்ஸ் பேரம் பேசப்பட்டது. காணாமல் போன கமராவை ஒப்படைக்க இந்தப் பேரம் நடந்தது. இதில் குழந்தையின் 100 அரிய புகைப்படங்கள் இருந்தன.

ரூனியின் கமராவை திருடிச் சென்ற நடவடிக்கை தொடர்பாக இரு ஆண்களும், ஒரு பெண்ணும் கைது செய்யப்பட்டனர். கடந்த மே மாதம் மான்செஸ்டர் ஸ்டேடியத்தில் தொலைந்து போன கமரா குறித்து வய்னே ரூனி தொடர்பு கொண்டு விசாரித்தார். ஆனால் கமராவைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

கேமிராவை எடுத்துச் சென்றவர்கள் ரூனியிடம் பேரம் செய்த போது பொலிஸார் உஷார் ஆனார்கள். பேரம் பேசிய கும்பலாக கருதப்படும் நபர்கள் மார்ச் 9 ஆம் திகதி வரை பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (ம)

# நியூஸிலாந்தில் பெரும் நிலநடுக்கம் மீட்பு நடவடிக்கைகள் தீவிரம்

கிரஸ்ட்சர்ச், பெப்.24

நியூசிலாந்தில் செவ்வாயன்று நடந்த நிலநடுக்கத்தில் 400 இற்கு மேற்பட்டோர் இறந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. இது ரிச்டர் அளவுகோலில் 6.3 ஆக பதிவானது.

இதனைத் தொடர்ந்து பிரதமர் ஜான் தேசிய அவசர நிலையை அறிவித்தார். இதுவரை 75 உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் இரவு இடிபாடுகளில் சிக்கிய 30 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

கடந்த 80 ஆண்டுகளில் நியூசிலாந்தில் ஏற்பட்ட மிக மோசமான இயற்கை பேரிடர் இதுவாகும்.

நாட்டின் 2 ஆவது பெரிய நகரமான கிரஸ்ட்சர்ச்சில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. கடந்த 6 மாதத்திற்கு முன்னர் 7 ரிச்டர் அளவில் இங்கு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் கட்டடங்கள் அதிர்ந்தன. ஆனால் உயிரிழப்பு எவையும் இடம்பெறவில்லை. தற்போது கிரஸ்ட்சர்ச்சில் ஏற்பட்ட நிலநடுக்கம் ஏராளமாக உயிர்களை பலி வாங்கி உள்ளது.

நிலநடுக்கத்தில் மத்திய கிரஸ்ட்சர்ச்சில் உள்ள கட்டடங்கள் குருவிக்கூடுகள் போல நொறுங்கி உள்ளன. நிலநடுக்கத்தில் 24 ஜப்பானிய மக்கள் மாயமாகி உள்ளனர். இது தொடர்பாக பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில், ''பலியானோர் எண்ணிக்கை 500 இற்கு மேல் இருக்கலாம்'' என்றார்.

அவசர நிலை ஊழியர்கள் இடிந்த கட்டடங்களில் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். நகரம் முழுவதும் கட்டடங்கள் இடிந்துள்ளன. மக்கள் வீதியில் ஆழ்ந்துள்ளனர். மேலும் கனடிய பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் பூகம்பத் தால் பாதிக்கப்பட்ட நியூசிலாந்திற்கு எல்லா உதவிகளையும் செய்யத் தயார் என்று அறிவித்துள்ளார். (ம)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

நன்னித்தம்பி அருணகிரிநாதன்

(முன்னாள் விற்பனை அபிவிருத்தித் திணைக்கள, வர்த்தகத் திணைக்கள முகாமையாளரும், யாழ்.வர்த்தக தொழிலாளர் கூட்டுறவுச் சங்க முகாமையாளரும்)

பிறப்பு 14.08.1949 இறப்பு 25.01.2011

அன்பின் தெய்வமே ஆசை அப்பா!
மாதம் ஒன்று சென்றாலும் அன்பாக நீங்கள் அழைக்கும் குரல் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.....!

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அந்தியேட்டிக் கிரியையும் இன்று (24.02.2011) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தாவடி தெற்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

சந்திரலிங்கம் றதீஸ்

(R.D.A கிளிநொச்சி)



தோற்றம் 27.07.1976

மறைவு 16.02.2009

திதி: அபரபக்க ஸப்தமி (24.02.2011)

என் அன்பான அப்பாவே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
இரண்டு ஆண்டுகளப்பா...
வாட்டுகிறது தினமும் உங்கள் நினைவு
உங்களை நாம் இனி எப்போது காண்போம்?
ஏன் அப்பா எம்மை பாதிவழியில்
தவிக்கவிட்டு எங்கு சென்றீர்...?

மந்துவில் வடக்கு, கொடிகாமம்.

குடும்பத்தினர்.


# கொள்ளையரால் 4 அமெரிக்கர் சுட்டுக் கொலை

வாஷிங்டன், பெப்.24

அமெரிக்கர்களை கடத்தி சென்ற சோமாலியகடல் கொள்ளையர்கள் அவர்களை சுட்டுக் கொன்றனர்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் அமெரிக்காவை சேர்ந்த 4 பேர் கொண்ட குழுவினர் ஒரு படகில் அரபிக் கடல் பகுதியில் சென்று கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு வந்த கடல் கொள்ளையர்கள் படகுடன் நான்கு பேரையும் கடத்தி சென்றனர். இதனையடுத்து அமெரிக்க ராணுவத்தினர் அமெரிக்கர்களை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

அப்போது நடைபெற்ற சண்டையின் போது கடத்திச் செல்லப்பட்ட படகுகளை அமெரிக்க ராணுவத்தினர் மீட்டனர்.

ஆனால் அதில் இருந்த நான்கு அமெரிக்கர்களும் இறந்து கிடந்தனர். கடல் கொள்ளையர்கள் தரப்பிலும் இரண்டு பேர் கொல்லப்பட்டனர். மேலும் 13 கடல் கொள்ளையர்கள் உயிருடன் கைது செய்யப்பட்டனர். (ம)

# றொக்கெட் தாக்குதல்; 5 பேர் மரணம்

பாகிஸ்தானின் கைபர் பக்டுன்க்வா மாகாணத்தில், தீவிரவாதிகள் றொக்கெட் தாக்குதல் நடத்தினர். இந்தச் சம்பவத்தில் 3 பெண்கள் உள்ளிட்ட 5 பேர் சம்பவ இடத்திலேயே பலியாயினர். 10இற்கும் மேற்பட்டோர் படுகாய மடைந்தனர்.

மக்கள் குடியிருப்புப் பகுதியில், தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியிருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


# கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற அங்கத்தவரான இ.பிரதீபன் (அபிஷன் மீன் ஒட்டும் தொழிற்சாலை, சாவகச்சேரி) அவர்களின் பாசமிகு தந்தை

அமரர் நிக்கலஸ் இராயப்பு

06.02.2011 இல் காலமானார். இவரின் மறைவுக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1271 நீலம்

தனுசு 03 15 39 47 22-02-2011

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 248,471 | 20/- | 4,969,420/- |
| 2 இலக்கங்கள் | 22,889 | 40/- | 915,560/- |
| 1 இல. + லக்கினம் | 22,659 | 60/- | 1,359,540/- |
| 2 இல. + லக்கினம் | 2,071 | 200/- | 414,200/- |
| 3 இலக்கங்கள் | 618 | 1000/- | 618,000/- |
| 3 இல. + லக்கினம் | 49 | 10,000/- | 490,000/- |
| 4 இலக்கங்கள் | 04 | 200,000/- | 800,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 9,566,720/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 674 | | 635,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 297,435 | | 10,202,220/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,110,650/-

## இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

02 06 19 38 ஜக்பொட் பரிசு ரூபா. 200,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 671 | 500/- | 335,500/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 200,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 674 | | 635,500/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 300,000/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷியா கைதிகளை விடுவிக்குக பஹ்ரைனில் மன்னர் உத்தரவு

மனாமா, பெப். 24

பஹ்ரைனில் பல்வேறு வழக்குகளில் கைதுசெய்யப்பட்ட ஷியா பிரிவு கைதிகளை விடுவிக்கும்படி மன்னர் உத்தரவிட்டுள்ளார்.

கடந்தாண்டு 25 பேர் மீது போடப்பட்ட வழக்கும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அங்கு அரசுக்கும், எதிர்க் கட்சிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் ஆரம்பமாகும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

பஹ்ரைனில், மன்னர் பதவி விலகக் கோரி தலைநகர் மனாமாவில் உள்ள 'பேர்ள்' சதுக்கத்தில் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்காக, பேச்சுக்கு வரும்படி எதிர்க் கட்சிகளுக்கு இளவரசர் ஷேக் சல்மான் அழைப்பு விடுத்தார்.

''பேர்ள் சதுக்கத்தில் இருந்து இராணுவம் வாபஸ் பெறப்பட வேண்டும்; அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும்; மன்னர் பதவி விலக வேண்டும்'' என்ற மூன்று கோரிக்கைகளை எதிர்க்கட்சிகள் முன்வைத்தன.

இதையடுத்து முதல் நடவடிக்கையாக பேர்ள் சதுக்கத்தில் இருந்து இராணுவம் வாபஸ் பெறப்பட்டது. தொடர்ந்து ஷியா பிரிவைச் சேர்ந்த கைதிகளை விடுவிக்கும்படி மன்னர் உத்தரவிட்டார் என செய்திகள் வெளியாகின. எத்தனை பேர் விடுவிக்கப்பட்டனர் என்பது தெரியவில்லை.

இதற்கிடையில், மார்ச் மாதம் 13ஆம் திகதி பஹ்ரைனில் நடப்பதாக இருந்த கார் பந்தயம் இரத்துச் செய்யப்பட்டது என அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து ஷேக் சல்மான் வெளியிட்ட அறிக்கையில், ''புதிய தேசிய பேச்சுகளை ஆரம்பிப்பதில் நாட்டின் முழுக் கவனமும் இப்போது இருப்பதால் கார் பந்தயம் இரத்துச் செய்யப்படுகிறது'' என்றார்.

பேச்சுக்கான முயற்சிகள் ஒருபுறம் இருந்தாலும், 'பேர்ள்' சதுக்கத்தில் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்கள் நடந்துவருகின்றன.

'ஹக்' என்ற எதிர்க்கட்சியின் தலைவர் ஹசன் முஷைமா, பஹ்ரைன் திரும்பி, மக்களுடன் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டார்.

கடந்தாண்டு அரசுக்கு எதிராக இராணுவப் புரட்சி நடத்த திட்டமிட்டனர் என 25 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவரான முஷைமா, லண்டனுக்கு தப்பிச் சென்றார். தற்போது அங்கிருந்து மீண்டும் நாடு திரும்பியுள்ளார். அரசு அறிவிப்பின்படி, 25 பேர் மீதான வழக்கு நிறுத்தி வைக்கப்பட்டதால், அவரது வருகைக்கு அரசு மறைமுக அனுமதி அளித்திருக்கிறது எனக் கூறப்படுகிறது.

# அடக்கு முறையைக் கைவிடுக

வாஷிங்டன், பெப். 24

லிபிய தலைவர் கடாபியின் உரைக்கு அமெரிக்கா உட்பட பல நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிரான வன்முறைகளைக் கைவிடுமாறு அவை கடாபியை வலியுறுத்தியுள்ளன.

ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிரான வன்முறை முற்று முழுதாக ஏற்றுக்கொள்ளத்தக்க தொன்றல்ல என அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளிங்ரன் தமது கண்டனத்தில் தெரிவித்துள்ளார்.

''லிபிய அரசு தன் சொந்த மக்களுக்குரிய சர்வதேச உரிமைகளை மதிக்கவேண்டும். இந்த உரிமைகளில் கருத்துச் சுதந்திரமும், ஒன்றுகூடலுக்கான உரிமையும் அடங்கும். இந்தப் பொறுப்பை லிபிய அரசு தட்டிக் கழித்து விடக்கூடாது'' என ஹிலாரி கிளிங்ரன் வலியுறுத்தியுள்ளார்.

''லிபிய தலைவர் கடாபி தமது சொந்த மக்களுக்கு எதிராகவே யுத்தப் பிரகடனம் செய்துள்ளார். அவரது உரை, மாறாத வடுவை ஏற்படுத்தக்கூடியது. ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிரான வன்முறையை லிபியா கைவிடாவிட்டால் அதன்மீது பொருளாதாரத் தடைவிதிப்பது குறித்து ஜேர்மன் பரிசீலிக்கும்'' என ஜேர்மன் அதிபர் ஏஞ்சலா மேர்கல் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

லிபியா தனது மக்களின் பிரச்சினைகளுக்கு அமைதித் தீர்வுகாண வேண்டும். அவர்களின் பாதுகாப்புக்கும், நிலைப்பாட்டுக்கும் உத்தரவாதமளிக்க வேண்டும். அதுவரை அரபுலீக் கூட்டங்களில் பங்குபற்ற முடியாதவாறு அதற்குத் தடைவிதிக்கப்படுகிறது என அரபுலீக் அறிவித்துள்ளது.

# லிபிய வீதிகளில் பிணக் குவியல்

கெய்ரோ, பெப். 24

லிபியாவில் ஜனாதிபதியாக கடந்த 42 ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆட்சியில் இருக்கும் சர்வாதிகாரி மம்மர் கடாஃபி (வயது - 68), எங்கே ஆட்சி தன் கையைவிட்டுப் போய்விடுமோ என்ற பீதியில் வரலாறு காணாத வகையில் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்.

இராணுவச் சிப்பாய்கள் வீதிகளில் ரோந்துவந்து கண்ணில்பட்டவர்களைச் சுடுவதுடன் விமானங்களிலும் ஹெலிக்கொப்டர்களி லும் பறந்துவந்து எதிர்ப்பாளர் களைத் துப்பாக்கிகளால் சுட்டுத் தள்ளுகின்றனர்.

ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த கூலிப்படையினரை ஹெலிக்கொப்டர்களில் ஏற்றிவந்து ஆங்காங்கே இறக்கிவிட்டு இராணுவச் சீருடை அல்லாமல் வேறு யார் கண்ணில்பட்டாலும் சுட்டுத்தள்ளுங்கள் என்று கூறிவிட்டனர்.

8ஆவது நாளாக செவ்வாய்க்கிழமையும் மக்கள் எதிர்ப்புத் தொடர்கிறது.



அமெரிக்காவின் சிகாகோ நகர மேயர் தேர்தல் நடைபெறவிருப்பதையொட்டி மேயர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள ராஹம் இம்மானுவேல், முன்னாள் அதிபர் பில்கிளின்டனைச் சந்தித்துப் பேசினார்.

# கிளர்ச்சியை ஒடுக்குமாறு கடாபி உத்தரவு

திரிபோலி, பெப். 24

லிபியாவில் தமது 41 வருடகால ஆட்சிக்கு எதிராகக் குமுறி வெடித்துள்ள கிளர்ச்சியை அடக்கி, ஒடுக்கிவிடுமாறு லிபியத் தலைவர் கடாபி செவ்வாய்க்கிழமை படைகளுக்கு உத்தரவிட்டார்.

ஆயுதபாணிகளான ஆர்ப்பாட்டக்காரர்கள் கொல்லப்படுவார்கள். கிளர்ச்சி வேரோடு ஒழிக்கப்படும்வரை நான் போராடுவேன் என்றும் அவர் சூளுரைத்தார்.

கடாபி அரச தொலைக்காட்சியில் தோன்றி நாட்டு மக்களுக்குத் தாம் ஆற்றிய உரையில் இந்த எச்சரிக்கையை விடுத்தார். சிற்சில சமயங்களில் அவர் உணர்ச்சி மேலிட்டு உரத்த குரலில் பேசினார்.

''இது எனது மூதாதையர்களின் பூமி. இங்கு ஒருபோதும் கிளர்ச்சியை அனுமதியேன். எனது உடலில் 'இறுதிச் சொட்டு' குருதி இருக்கும்வரை கிளர்ச்சியை முறியடிக்கப் போராடுவேன். கோழையாக அல்ல. தியாகியாகவே வீர மரணத்தை நான் தழுவுவேன்'' என்றும் அவர் தெரிவித்துக்கொண்டார்.

''கிளர்ச்சியாளர்கள் உடனடியான தங்களின் ஆயுதங்களை ஒப்படைத்துவிட வேண்டும். இல்லையேல் பிணங்கள் குவியும். லிபியாவில் 'வீடு வீடாக', 'அங்குலம் அங்குலமாக' தேடுதல் வேட்டை மேற்கொள்ளப்படும்'' என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

# டாக்டர் பட்டத்தைத் துறந்த அமைச்சர்

பேர்ளின், பெப். 24

ஜேர்மனின் பாதுகாப்பு அமைச்சர் கார்ல் தியோடர் ழூ குட்டன்பர்க் தன்னுடைய டாக்டர் பட்டத்தைத் துறந்துவிட்டார்.

மற்ற ஆராய்ச்சியாளர்களின் கண்டுபிடிப்புகளையெல்லாம் திரட்டி (திருடி) தன்னுடையதைப் போல தொகுத்து டாக்டர் பட்டம் பெற்றுவிட்டார் என்று கடந்த ஒரு வாரமாக இணையத் தளத்தில் நடந்த தீவிர பிரசாரத்தின் விளைவாக அவர் இந்த முடிவை எடுத்தார்.

407 பக்கங்களைக் கொண்ட அந்த ஆய்வறிக்கையைத் தானே கைப்பட எழுதினார் என்றும் நன்கு ஆய்ந்த பின்னரே அறிக்கையைத் தயார் செய்தார் என்றும் அமைச்சர் கார்ல் தியோடர் தெரிவிக்கிறார்.

அதே சமயம், எதிர்ப்பாளர்களின் விமர்சனங்களுக்குப் பின்னர் தன்னுடைய ஆய்வுக் கட்டுரையை மீண்டும் ஒருமுறை கூர்ந்து படித்துப் பார்த்தார் என்றும் பல இடங்களில் மற்ற ஆய்வாளர்களின் கண்டுபிடிப்புகளிலிருந்து தான் கையாண்ட மேற்கோள்கள் பற்றிய விவரக் குறிப்புகளைச் சேர்க்காமலேயே விட்டுவிட்டது அப்போதுதான் தெரிந்தது என்றும் எனவே டாக்டர் பட்டமே வேண்டாம் என்று கூறி திரும்பத்தந்துவிட முடிவு செய்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அந்த ஆய்வறிக்கையில் 70% தகவல்கள் மற்றவர்களுடைய ஆய்வுகளிலிருந்து பெறப்பட்டவை என்றும் 250 இடங்களில் அடுத்தவர்களின் ஆய்வுக் குறிப்புகளைப் பயன்படுத்தியிருக்கிறார் என்றும் அவருடைய ஆய்வறிக்கையைப் பார்த்தால் சொந்தமாகத் தயாரித்ததெல்லாம் முன்னுரை, முடிவுரை, விளக்கம் போன்ற அவயங்களும் இணைப்பு வாக்கியங்களும்தானே தவிர உருப்படியான கருதுகோள்களோ, முடிவுகளோ, விளக்[illegible] விமர்ச[illegible]

# வெனிசூலாவில் விமான விபத்து

## 6 பேர் பலி

கராகஸ், பெப். 24

வெனிசூலாவின் தசிரா மாநிலத்தில் நிகழ்ந்த விமான விபத்தில் 6 பேர் பலியாகினர். இதுகுறித்து, வெனிசுலா போக்குவரத்துத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

எல் விஜியா விமானப்படைத் தளத்திலிருந்து 6 பேருடன், சான்டோ டோமிங்கோ வழியாக, மெரிடா நோக்கிச் சென்று கொண்டிருந்த செஸ்னா 340 ஏ ரக சிறிய விமானம், தசிரா மாநிலத்தின் சான் பெட்ரோ டெல் ரியோ பகுதியில் விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில், விமானத்தில் இருந்த 6 பேரும் பலியாகினர். அவர்களது சடலங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. விபத்திற்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணையை ஆரம்பித்துள்ளனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவருக்கு அனுமதி மறுத்தமைக்கு சத்தியராஜ் கண்டனம்

சென்னை,பெப்.24

பார்வதி அம்மாவின் உடலுக்கு அஞ்சலி செலுத்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சித்தலைவர் தொல். திருமாவளவனுக்கு இலங்கையில் அனுமதி அளிக்காததற்கு நடிகர் சத்தியராஜ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் கூறியிருப்பதாவது:

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மா மரணம் அடைந்ததற்காக, உலகத் தமிழர்களுடன் சேர்ந்து நானும் கவலைப்பட்டேன்.

பார்வதி அம்மாவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிப்பதற்காக, சென்னை தியாகராஜ நகரில் உள்ள ஒரு பாடசாலையில் பழ.நெடுமாறன், வைகோ ஆகிய இருவரின் தலைமையில் இரங்கல் கூட்டம் நடந்தது.

அங்கு சென்று நான் அஞ்சலி செலுத்தினேன்.

பார்வதி அம்மாவின் உடலுக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்துவதற்காக, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் இலங்கைக்குச் சென்று அஞ்சலி செலுத்த இலங்கை அரசு அனுமதி மறுத்து இருக்கிறது.



இதற்காக எனது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதில் இருந்து இலங்கையில் தமிழர்களுக்குச் சுதந்திரம் வழங்கப்படவில்லை என்று தெரிகிறது.

இவ்வாறு அந்த அறிக்கையில் நடிகர் சத்தியராஜ் கூறியிருக்கிறார்.

## பிரமுகர்கள் சந்திப்பு.....



டில்லியில் கனரக மற்றும் பொதுத் துறை அமைச்சர் பிரபுல் பட்டேலும், பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர் ஜஸ்வந்த் சிங்கும் நாடாளுமன்றில் சந்தித்துக் கொண்டனர்.

# ஜெகன் மோகன் ரெட்டி ஆஸ்பத்திரியில்

ஜெகன்மோகன் ரெட்டி ஆந்திர அரசு மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையை உடனே வழங்கக் கோரி உண்ணாவிரதம் இருந்து வருகிறார். 6ஆவது நாளான நேற்று அவர் மிகவும் சோர்வுடன்காணப்பட்டார். அவரை டாக்டர்கள் பரிசோதித்தபோது உடல் நிலை மோசம் அடைந்தது தெரிய வந்தது. இதையடுத்து அவரை பொலிசார் வலுக் கட்டாயமாக கைது செய்து மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

# 'தமிழர்கள் மீது இனி விழும் அடி என்மீது விழும் அடி' கண்டனப் பொதுக் கூட்டத்தில் விஜய் ஆவேசம்

''இனித் தமிழர்களின் மீது விழும் ஒவ்வொரு அடியும், என் மீது விழும் அடியாக நினைத்து போராடுவேன்'' என்று நடிகர் விஜய் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசால் தமிழக மீனவர்கள் கொல்லப்படுவதைக் கண்டித்து விஜய் மக்கள் இயக்கம் சார்பில் கண்டனப் பொதுக் கூட்டம் காடம்பாடிசாலையில் உள்ள வலிவலம் தேசிகர் பாலிடெக்னிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நடிகர் விஜய் பிற்பகல் 4 மணிக்கு மேடைக்கு வருவதாக அறிவிக்கப் பட்டிருந்தது. ஆனால் 4 மணிக்கு திடீரென நாகையில் மழை பெய்ய ஆரம்பித்தது. கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகக் காடம்பாடி மைதானத்தில் ரசிகர்களும், பொதுமக்களும் கூடியிருந் தனர். மழை தொடர்ந்து பெய்துகொண்டிருந்ததால் மாலை 5.30 மணி வரையும் நடிகர் விஜயால் மேடைக்கு வர முடியவில்லை. 5.35 மணியளவில் மழைலேசாகத் தூறியதை தொடர்ந்து 5.45 மணிக்கு நடிகர் விஜய் பொதுக்கூட்ட மேடைக்கு வந்தார். பொதுக்கூட்ட மேடையில் உரையாற்றுகையில்:

ஒரு குடும்பத்தில் அண்ணன், தம்பியை இழந்தால் எவ்வாறு துன்பப்படுவமோ அதுபோல இன்று நாம் ஒன்று அல்ல, 2 அண்ணன்களை இழந்து துயரப்பட்டு உள்ளோம். தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்பட்டு வருகின்றனர். படுகொலை செய்யப்பட்டு உள்ளனர். இதற்கு அரசியல் சாயம் பூச வேண்டாம். இங்கு நாம் இந்தக் கண்டனப் பொதுக்கூட்டத்தை நடத்துகிறோம்.

இது சென்னைக்கோட்டையை மட்டுமல்ல, டில்லி கோட்டை வரை எட்டும். இலங்கை இராணுவத்தால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது தொடர்ந்து வருகிறது. இதை மத்திய, மாநில அரசுகள் வேடிக்கை பார்க்கிறது. இனித்தமிழர்களின் மீது விழும் ஒவ் வொரு அடியும், என் மீது விழும் அடியாக நினைத்து போராடுவேன் என்றார்.

# கடத்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளர் மாவோயிஸ்டுக்களால் விடுவிப்பு

புவனேஸ்வர், பெப்.24

ஒரிசாவில் மாவோயிஸ்டுகளால் கடத்தப்பட்ட மாவட்ட ஆட்சியர், இளநிலைப் பொறியாளர் ஆகியோர் செவ்வாய்க்கிழமை விடுவிக்கப்பட்டதாக மாவோயிஸ்ட் ஆதரவாளர் ராவ் தெரிவித்தார்.

ஒரிசா மாநிலம் மல்காங்கிரி மாவட்ட ஆட்சியர் ஆர்.வி.கிருஷ்ணா, பொறியாளர் பவித்ர மஜி ஆகியோர் கடந்த வாரம் மாவோயிஸ்டுகளால் கடத்திச் செல்லப்பட்டனர். அவர்களை விடுவிக்க வேண்டுமானால் சிறையிலிருக்கும் மாவோயிஸ்ட் தலைவர்களை விடுவிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட 14 கோரிக்கைகளை மாவோயிஸ்டுகள் முன்வைத்தனர்.

அதில், 5 மாவோயிஸ்டுத் தலைவர்கள் மீதான வழக்குகளை வாபஸ் பெறுவது உள்ளிட்ட 14 கோரிக்கைகளையும் அரசு ஏற்றுக்கொண்டது.

மேலும், 12 மாவோயிஸ்டு பிரமுகர்கள், கோர்ட்டின் மூலம் விடுதலை அடைந்தனர். இந்த நிலையில், கடத்திச் செல்லப்பட்ட மாவட்ட ஆட்சியர் கிருஷ்ணா, இளநிலைப் பொறியாளர் பவித்ர மஜி ஆகியோரை மாவோயிஸ்டுகள் விடு வித்துவிட்டதாக ராவ் என்ற மாவோயிஸ்ட் ஆதரவாளர் தெரிவித்திருக்கிறார்.

# விரைவில் வருகின்றது 150 ரூபா நாணயம்

இந்தியாவில் வரி விதிப்பு முறை அமுலுக்கு வந்து 150 ஆண்டுகள் நிறைவ டைந்ததைக் குறிக்கும் வகையில் 150 ரூபா நாணயம் வெளியிடப்படவுள்ளது.

மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி பட்ஜெட் தாக்கல் செய்வதற்கு முன்பாக இந்தச் சிறப்பு நாணயம் வெளியிடப்படும். இது தவிர, சிறப்பு 5 ரூபா நாணயமும் வெளியிடப்பட உள்ளது. இதே வேளை இந்திய அரசு 150 ரூபா நாணயம் வெளியிடுவது இதுவே முதல் முறையாகும். இது தொடர்பான அறிக்கையை நிதி அமைச்சகத்தின் பொருளாதார விவகாரத்துறை சமீபத்தில் வெளியிட்டுள்ளது. வெள்ளி, தாமிரம், நிக்கல், துத்தநாகம் ஆகிய வற்றின் கலவையாக இந்த நாணயம் அமை யவுள்ளது. இதில் ''சத்யமேவ ஜெயதே'' என்ற வாசகம் இடம்பெற்றிருக்கும். சாணக்கியர் மற்றும் தாமரைப் பூ ஆகியனவும் இதில் இடம்பெற்றிருக்கும்.

உ

சிவாச்சாரியபிஷேக வைபவம்

பேரன்புடையீர்,

ஸ்வஸ்தி நிகழும் மங்கலகரமான விகிர்தி வருடம் மாசிமாதம் 12 ஆம் நாள் இன்று (24.02.2011) வியாழக்கிழமை விசாக நட்சத்திரமும் ஸப்தமி திதியும் சித்தயோகமும் கூடிய காலை 8.21மணி முதல் 9.21 மணி வரையான மீனலக்கின சுபமுகூர்த்தத்திலே உத்தரகோவை சிவஸ்ரீ வை.மு.கார்த்திகேஜகுருக்கள் தம்பதிகளின் பௌத்திரனும்

*கீரிமலை நகுலேஸ்வர ஆதீனத்தைச் சார்ந்த*

*பிரம்மஸ்ரீ சபா.சுப்பிரமணியசர்மா தம்பதிகளின்*

*தௌகித்திரனும்*

*கீரிமலை பிரம்மஸ்ரீ கா.சந்திரசேகர சர்மா - ஸ்ரீமதி கௌரிமாலதி*

*தம்பதிகளின் ஏகபுத்திரனுமாகிய*

**பிரம்மஸ்ரீ சாந்தரூப சர்மா**

அவர்களுக்கு சமய, விசேட, நிர்வாண தீட்சையும்

சிவாச்சாரியாபிஷேகமும் இஷ்டதேவதா, குலதேவதா, பாரம்பர்ய தேவதா திருவருளுடன் அந்தண சிவாச்சாரியார்களின் குருவருளுடன் வட்டுக்கோட்டை உடுக்கியவளை ஸ்ரீ மஹா கணபதி திருக்கோயிலில் நடைபெற உள்ளதால் அவ்வமயம் தாங்கள் வருகை தந்து சபையை சிறப்பித்து விப்ரபோஜனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வித்தியாகுரு : *சிவாகமஞான பாஸ்கரன்* சிவஸ்ரீ தா.மஹாதேவ சிவாச்சாரியார் - அதிபர் தர்மசாஸ்தா குருகுலம், இணுவில்.

தீட்சாகுரு: *சாஹித்ய சிரோமணி* சிவஸ்ரீ வை.மு.ப.முத்துகுமாரசாமி குருக்கள் (விசேடகுரு, நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் தேவஸ்தானம் உத்தர கோவை)

சர்வசாதகம் : *சாதக வித்யா பூஷணம்* பிரம்மஸ்ரீ ந.பிரசாந்த சர்மா, வட்டுக்கோட்டை

சுபம்.

*பிரம்மஸ்ரீ கா.சந்திரசேகர சர்மா*
*குடும்பத்தினர் [கோப்பாய்]*
*பிரம்மஸ்ரீ S.வெங்கடேஸ்வர சர்மா*
*குடும்பத்தினர் [வட்டுக்கோட்டை]*

*பிரம்மஸ்ரீ சந்திர சாந்தரூபசர்மா*
*ஸ்ரீமதி ஸ்ரீ கௌரி தம்பதிகள்*
*செல்வி S.பிரஹர் ஷிதா*
*கோப்பாய்.*

# டில்லியில் குற்றச் செயல்கள் குறைவு; உள்துறை அமைச்சர் சிதம்பரம் தகவல்

டில்லி, பெப்.24

''இந்தியாவில் உள்ள ஏனைய நகரங்களை விட, தலைநகர் டில்லி மிகவும் பாதுகாப்பான நகரம்'' என, மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் கூறியுள்ளார்.

லோக்சபாவில், மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் கேள்வி நேரத்தின் போது, பதிலளித்துப் பேசுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

தலைநகர் டில்லியில் நடக்கும் குற்றச் செயல்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளன. பொலிசாரின் கடுமையான நடவடிக்கைகளின் காரணமாக, சட்டம் ஒழுங்கு நிலை கட்டுப்பாட்டுக்குள் உள்ளது.

உலக அளவில் குற்றச் செயல்களின் எண்ணிக்கையை ஒப்பிடும்போது ஒரு லட்சம் மக்களின் அடிப்படையில், டில்லியில், 2001இல், 392.66 ஆக இருந்த குற்றச் செயல்களின் குறியீட்டு எண், 2010இல், 281.34 ஆகக் குறைவடைந்துள்ளது.

எனினும், அரசு அளித்துள்ள புள்ளி விவரத்தின் அடிப்படையில், 2009 இல், 425 ஆக இருந்த பாலியல் வன்முறை வழக்குகள், 2010 இல், 458 ஆக அதிகரித்துள்ளது.

கடந்தமாதம் மட்டும், 17 பாலியல் வன்முறை வழக்குகள் பதிவாகியுள்ளன.

இந்தியாவில் உள்ள ஏனைய நகரங்களை விடவும், தலைநகர் டில்லி மிகவும் பாதுகாப்பான நகரம்.

இங்கு, பாதுகாப்பை அதிகரிக்கப் பல்வேறு திட்ட[illegible] கின்றன இ[illegible] தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ் நிபந்தனையால் தி.மு.க.தொகுதி பங்கீடு தாமதம்

சென்னை,பெப்.24

தி.மு.க.-காங்கிரஸ் தொகுதி பங்கீடு தொடர்பாகப் பேச்சுவார்த்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதன் போது எந்த முடிவும் எடுக்கப் படவில்லை.

பேச்சுவார்த்தை சுமுகமாக நடந்தது என்று இருதரப்பிலும் கூறப்பட்டது. அதன் பின்னர் பா.ம.க. தலைவர் டாக்டர் ராமதாஸ் கடந்த வாரம் தி.மு.க தலைவர் முதலமைச்சர் கருணாநிதியை சந்தித்தார்.

அன்றைய தினமே தி.மு.க. கூட்டணியில் பா.ம.க. சேருவதாகவும், 31 தொகுதிகள் ஒதுக்கப் பட்டுள்ளதாகவும் அறிவிக்கப் பட்டது.

தி.மு.க. குழுவினருடன் பேச்சுவார்த்தை நடத்திய விடுதலைச் சிறுத்தைகள், முஸ்லிம்லீக், மூவேந்தர் முன்னேற்றக் கழகம் ஆகிய கட்சியினரும் பேச்சுக்கள் நடத்தி உள்ளனர்.

இவர்களுக்கும் எத்தனை தொகுதிகள் என்பது அறிவிக்கப் படவில்லை. காங்கிரஸ் கட்சியுடன் தொகுதி உடன்பாடு ஏற்படாததால்தான் தி.மு.க. கூட்டணியில் உள்ள மற்றக் கட்சிகளுக்கும் தொகுதிகளை ஒதுக்குவதில் பிரச்சினை இருப்பதாகக் கூறப்படுகிறது.

கூட்டணியின் முக்கிய கட்சியான காங்கிரசுடன் பேச்சுவார்த்தை சுமுகமாக முடிந்த பிறகே ஏனைய கட்சிகளுக்கு எத்தனை தொகுதிகள் என்பதை முடிவு செய்ய முடியும். எனவேதான் தொகுதிப் பங்கீட்டில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பேச்சுவார்த்தையின் போது காங்கிரஸ் தரப்பில் ஆரம்பத்தில் 80 தொகுதிகளும், பின்னர் 70 தொகுதிகளும் கேட்கப்பட்டன. ஆட்சியில் பங்கு வேண்டும். ஒருங்கிணைப்பு குழு அமைக்க வேண்டும். குறைந்தபட்ச செயல்திட்டம் வகுக்கப் படவேண்டும் என்று நிபந்தனைகள் விதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தி.மு.க. தரப்பில் கூறும் போது கடந்தமுறை தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ், பா.ம.க.கட்சிகள் இருந்தன. அப்போது தி.மு.க.வுக்கு 128 தொகுதிகளும், காங்கிரசுக்கு 48 தொகுதிகளும், பா.ம.க.வுக்கு 31 தொகுதிகளும் ஒதுக்கப்பட்டன. இந்த முறையும் அதே முறையில் தொகுதிகளைப் பகிர்ந்து கொள்ளலாம்.

முஸ்லிம் லீக் கட்சிக்கும் கடந்த முறை ஒதுக்கியது போல தி.மு.க. சின்னத்தில் இடம் கொடுக்கலாம். மிகுதியாக உள்ள தொகுதிகளை விடுதலைச் சிறுத்தைகள், மூவேந்தர் முன்னணிக் கழகம் உள்ளிட்ட ஏனைய ஆதரவு அமைப்புகளுக்குக் கொடுக்கலாம். அவர்களுக்கு கொடுத்தவற்றை விட ஏனைய சில தொகுதிகள் மிகுதியாக இருந்தால் தி.மு.க.வும், காங்கிரசும் பகிர்ந்து கொள்ளலாம்.

அதன் அடிப்படையில்தான் பா.ம.க.வுக்கு 31 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. ஆட்சியில் பங்கு, ஒருங்கிணைப்புகுழு, குறைந்தபட்ச செயல்திட்டம் போன்ற நிபந்தனைகள் குறித்து தேர்தலுக்குப் பின்னர் பேசி முடிவு செய்யலாம். எனக் கூறப்பட்டதாகத் தெரிகிறது.

ஆனால் காங்கிரஸ் தரப்பில் எங்கள் கட்சித் தொண்டர்கள் விருப்பத்தை மேலிடத்தில் தெரிவித்தோம். அவர்களின் ஆலோசனைப்படி இந்தக் கருத்தை வைத்திருக்கிறோம் என்று சொன்னதாக கூறப்படுகிறது. இரு தரப்பிலும் உள்ள காரணங்கள் குறித்து இரண்டு கட்சியினரும் ஆலோசித்து வருகிறார்கள். இன்னும் சிலதினங்களில் மீண்டும் பேச்சுவார்த்தை நடைபெறும் என்று தெரியவந்துள்ளது.

இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையின் போது தொகுதிப் பங்கீடு சுமூகமாக முடியலாம் என்று இரண்டு கட்சி வட்டாரங்களும் தெரிவித்துள்ளன.

## நீதிமன்றத்துக்கு வெடிகுண்டு மிரட்டல்

திண்டுக்கல், பிப்.24

திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் வெடிகுண்டு இருப்பதாக வந்த தகவலால் நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தும் பாதியில் நிறுத்தப்பட்டன.

நீதிமன்றத்தில் இருந்த அனைவரும் வெளியேற்றப்பட்டு, மோப்பநாய் உதவியுடன் பொலிசார் அங்கு சோதனை நடத்தியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பிரதீபா பாட்டிலின் கணவர் வைத்தியசாலையில்

குடியரசுத் தலைவர் பிரதிபா பாட்டீலின் கணவர் தேவிசிங் ஷெகாவத் காய்ச்சல் காரணமாக நாக்பூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அவரது உடல்நிலை சீராக உள்ளது.கவலைப்படும்படியாக எதுவும் இல்லை என மருத்துவமனையின் இயக்குநர் டாக்டர் முரளி ராவ் தெரிவித்தார்.தேவிசிங் ஷெகாவத் அனுமதிக்கப்பட்டுள்ளதால் அந்த மருத்துவமனை முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

## லிபியாவில் தவிக்கும் இந்திய மக்களை மீட்க அரசு நடவடிக்கை

புதுடில்லி, பெப்.24

லிபியாவில் உள்நாட்டுப் போர் உருவாகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால், அங்கு வாழும் இந்தியர்களை கவனமாக மீட்டு வர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் ஒரு கட்டமாக, அவர்களை கப்பல் மூலம் அழைத்துவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்தக் கப்பல், தற்போது லிபியாவை நெருங்கியுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதற்குமுன்னதாக, அவர்கள் ஏர் இந்தியா விமானத்தில் அழைத்து வரப்படுவதாக இருந்தனர். ஆனால் கிளர்ச்சியாளர்கள், பெங்காஜி ஏர்போர்ட்டை சூறையாடியதால், அங்குவிமானப் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது. இதன்காரணமாக இந்த மாற்று நடவடிக்கை என மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல், எகிப்து நாட்டின் அலெக்சாண்டிரியா துறைமுகத்திலிருந்து லிபியாவிற்கு புறப்பட்டுள்ளது. அங்கு தவிக்கும் இந்தியர்கள், கப்பல் மூலம், எகிப்து நாட்டின் அலெக்சாண்டிரியா துறைமுகத்திற்கு வந்து சேருவார்கள் என்றும், அதன் பின்னர் அவர்கள் விமானம் மூலம் இந்தியா திரும்புவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு வசதியாக, அலெக்சாண்டிரியா நகருக்கு கூடுதல் விமான சேவைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. தமிழர்களைப் போலவே, லிபியாவில் தவிக்கும் ஏனைய மாநிலத்தைச் சேர்ந்தவர்களும், அங்கிருந்தபடியே உறவினர்களுடன் பேசியுள்ளனர். இதனால், இந்தியர்களைப் பத்திரமாக மீட்டு அழைத்து வந்துவிடலாம் என்ற நம்பிக்கை மத்திய அரசிற்கு ஏற்பட்டுள்ளது.

இதுபற்றி, பத்திரிகையாளர்களிடம் பேசிய இந்திய வெளியுறவுத்துறை செயலர் நிருபமா ராவ், லிபியாவின் நிலையை உன்னிப்பாக கவனித்து வருகிறோம். அங்கு இந்தியர்கள் பாதுகாப்பாக உள்ளனர். அவர்களைப் பத்திரமாக இந்தியா அழைத்துவர அனைத்து ஏற்பாடுகளையும் செய்து உள்ளோம் என்று கூறினார்.

## மீனவர் பிரச்சினைக்கு தி.மு.க, காங்கிரஸ் போராட்டம் நடத்துவது ஏமாற்று வேலை

### பா.ஜ.க.தலைவர் பொன். ராதாகிருஷ்ணன்

சேலம், பெப். 24

தமிழக மீனவர் பிரச்சினைகளுக்காக திமுக, காங்கிரஸ் கட்சிகள் போராட்டம் நடத்துவது ஏமாற்று வேலை என தமிழக பா.ஜ.க. தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் குற்றஞ்சாட்டினார்.

பேரவைத் தேர்தலுக்கான பா.ஜ.க. தேர்தல் குழுவின் 5 மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் சேலத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் பங்கேற்க வந்த அவர், செய்தியாளர்களிடம் பேசியபோது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்:

தமிழகத்தில் தி.மு.க. தோற்கடிக்கப்பட வேண்டும்.

இதற்காக அனைத்து எதிர்க் கட்சிகளும் ஓரணியில் திரள வேண்டும் எனத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். துரதிஷ்டவசமாக இம்முயற்சி பெரிய அளவில் நடைபெறவில்லை.

எனவே, நாங்கள் எங்கள் சொந்தப் பலத்தில் பேரவைக்குள் நுழைய முயற்சிக்க முடிவு செய்துள்ளோம். அதன்படி 234 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிட உள்ளோம்.

எங்களுக்கு இரட்டை இலக்கத்தில் வெற்றி வாய்ப்பு உள்ளது. தமிழகத்தில் 3ஆவது அணி அமையும் வாய்ப்பில்லை.

கூட்டணி குறித்து அ.தி.மு.க தரப்பில் இருந்து எங்களை அழைக்கவும் இல்லை. நாங்கள் பேசவும் இல்லை.

இனியும் மீனவர் மீதான தாக்குதல் தொடர்ந்தால் மத்திய அரசில் இருந்து தமிழக அமைச்சர்கள், எம்.பிக்கள் பதவி விலக வேண்டும். மீண்டும் தாக்குதல் நடைபெற்றால் பா.ஜ.க. கடல் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபடும் என்றார் ராதாகிருஷ்ணன்.

# தெலுங்கானா தனிமாநிலமாக்கல் பிரச்சினை தொடர்பாக நாடாளுமன்றில் நேற்று அமளி

### சந்திரசேகர ராவ், விஜயசாந்தி எம்.பிக்கள் ஆவேசம்

டில்லி, பெப்.24

ஆந்திராவை இரண்டாகப் பிரித்து தெலுங்கானா மாநிலத்தை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கை நாடாளுமன்றத்தில் நேற்று எழுப்பப்பட்டதால் சபையில் பெரும் அமளி ஏற்பட்டது.

ஆந்திராவை இரண்டாகப் பிரித்து தெலுங்கானா தனி மாநிலம் அமைக்க வேண்டும் என்று தெலுங்கானா ராஷ்ட்ரீய சமீதி கட்சி போராட்டத்தில் ஈடுபட்டு வந்தது.

இது கலவரமாக மாறியது. இதையடுத்து தெலுங்கானா பிரச்சினை குறித்து ஆராய மத்திய அரசு நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா தலைமையில் குழு அமைத்தது. அவர்கள் கொடுத்த அறிக்கையில் பல்வேறு சிபாரிசுகளை செய்து இருந்தனர்.

இதில் மத்திய அரசு உறுதியான முடிவு எடுக்காமல் பிரச்சினையை பிற்போட்டு வந்தது.

இதனால் கோபம் அடைந்த தெலுங்கானா ராஷ்ட்ரீய கட்சி மீண்டும் போராட்டத்தில் இறங்கி உள்ளது. ஹைதராபாத் மற்றும் 10 மாவட்டங்களில் 2 நாள்களாக முழு அடைப்பு போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

நேற்று நாடாளுமன்றத்திலும் தெலுங்கானா ராஷ்ட்ரீய சமீதி கட்சியினர் இந்தப் பிரச்சினையை எழுப்பினார்கள். சபை தொடங்கியதும் கட்சி எம்.பி.க்கள் அனைவரும் எழுந்து தெலுங்கானா தனி மாநில அறிவிப்பை இப்போதே வெளியிட வேண்டும். இதற்கான பிரேரணையை உடனடியாக நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

அனைவரும் இருக்கையை விட்டு எழுந்து நின்று தெலுங்கானா மாநிலக் கோரிக்கையை வலியுறுத்திக் கோஷமிட்டனர். இதற்கு சபாநாயகர் மீராகுமார் அனுமதி மறுத்தார். தெலுங்கானா ராஷ்ட்ரீய சமீதி கட்சி தலைவர் சந்திரசேகர ராவ், நடிகை விஜய சாந்தி எம்.பி. ஆகியோர் ஆவேசமாக சபாநாயகரை நோக்கிச்சென்றனர். அவர்இருக்கை அருகே நின்றபடி உரத்த குரலில் கோஷமிட்டனர்.



இதனால் சபையில் அமளி ஏற்பட்டது. சபாநாயகர் மீராகுமார் பலமுறை கூறியும் அவர்கள் கேட்கவில்லை. இந்த பிரச்சினையை ஒத்திவைப்பு வேளையில் பேசலாம். இருக்கைக்கு செல்லுங்கள் என்று மீராகுமார் கேட்டு கொண்டார். அதை அவர்கள் ஏற்க மறுத்தனர்.

அப்போது தெலுங்கானா பகுதியை சேர்ந்த காங்கிரஸ் எம்.பி.க்கள் ஜெகநாத் மதுகவுடு, சத்யநாராயணா ஆகியோர் எழுந்து அவர்களுடன் தெலுங்கானா மாநிலத்துக்கு ஆதரவாக கோஷமிட்டனர். அப்போது தெலுங்கு தேசம் எம்.பி.க்கள் வேணுகோபால், சத்யநாராயணா ஆகியோர் ஒன்றுபட்ட ஆந்திராவை வற்புறுத்திக் கோஷமிட்டனர்.

இதனால் இரு தரப்பினரும் வாக்குவாதம் செய்தனர். இது சபையில் அமளியாக மாறியது. எனவே சபாநாயகர் மீராகுமார் சபையை முற்பகல் 11.30 வரை ஒத்திவைத்தார். 11.30 மணிக்கு மீண்டும் சபை கூடிய போதும் இதே பிரச்சினையை எழுப்பி அமளியில் ஈடுபட்டனர். இதனால் நண்பகல் 12 மணிவரை சபையை ஒத்திவைத்தார். பின்னர் சபை கூடிய போதும் அமளி ஏற்பட்டது. இதனால் 3ஆவது முறையாகதச் சபை ஒத்திவைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

## அன்னராசா தபியன்



மலர்வு 10.04.1982 உதிர்வு 11.01.2011

எத்தனை பகிடியடா சொல்வாய் சிரிப்பதற்கு
கண்பட்டதுவோ காதகன் கவர்ந்திட
கண்டோர் எல்லாம் கனன்றுமே - புலம்பிட
காலமெனும் சதிவலையில் விதி விளையாடியதுபோல்
இன்று கதறியழுவதற்கு வழிசொன்னதடா உன் பிரிவு
தாங்கவும் வலுவிழந்தோம் தாழாது தவிக்கின்றோம்
நினைவுகள் உள்ளவரை நீங்காது உன் நினைவு
நிலைத்திருக்கும் உண்மைடா
பாசத்தின் பிறப்பிடமே அன்பின் தைபனே!
உன்னைக் காணத்துடிக்குது கண்கள்
உன்னுடன் பேசத்துடிக்குது நாவுகள்
ஆனாலும் இவையனைத்தும் இனி
எம் வாழ்வில் நிறைவேறாக் கனவுகள்
உன்னைக் கடைசிவரை என்றும்
நினைத்திருக்கும் நெஞ்சங்கள்!

அன்னாரின் திடீர் மறைவுச் செய்தியறிந்து நேரிலும், தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றோம். இவரின் 45ஆம் நாள் வீட்டுக்கிருத்திய கிரியைகள் (24.02.2011) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

161, காரைநகர் வீதி,
வில்லூன்றிப்பிள்ளையார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

### பவல் தினம்

யாழ்ப்பாணம், வலிகாமம் வலயங்களில் இன்று பேடன்பவல் தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

வலிகாமம் வலயத்தில் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு விக்டோறியாக் கல்லூரியிலும் யாழ். வலயத்தில் பிற்பகல் 2 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியிலும் இந்த நிகழ்வுகள் இடம்பெறும்.

இதில் பெண் சாரணியர்களைக் கலந்துகொள்ளுமாறு வடமாகாண ஆணையாளர் அறிவித்துள்ளார். (ஓ-10)

### முற்றோதல்

அரியாலை நீர் நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்த்தானத்தில் கடந்த மாதம் 15ஆம் திகதி தொடங்கிய பண்ணிருதிருமுறைகள் ஓதுதல் நிகழ்வு நாளை நிறைவடையவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு யாழ்ப்பாணம் பொது நூலக பிரதம நூலகர் ச. தனபால சிங்கம் பிரதம அதிதியாக கலந்துகொள்வார்.

### ஆங்கிலம் வார நாள் வகுப்புக்கள்

ஒரு மொழியைப் பேசப்பழகுவதற்கு முன் அதன் இலக்கணத்தைக் கற்றுக்கொள்வது தவறாகும்.

பேசத்தெரியாத ஒரு மொழியினது இலக்கணத்தைக் கற்றுக்கொள்வது அம்மொழியை பழகுவதில் மேலும் கடினத்தை உண்டுபண்ணும்.

செயல்முறை ரீதியான உரையாடற் பயிற்சியின் மூலம் ஆங்கிலப் பேச்சுப்பயிற்சியை வழங்கி வரும் நாம் அனேகமானோரின் வேண்டுகோளுக்கிணங்க தற்போது வாரநாள் வகுப்புக்களையும் ஆரம்பிக்கிறோம்.

எமது பயிற்சியில் இணைய விரும்பும் பல்கலை மாணவர்கள் ஆசிரியர்கள், இளைஞர் யுவதிகள் வெளிநாடு செல்லவிருப்போர் 28.02.2011 இக்கு முன் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

பயிற்சி நேரம் :- பிரிவு I திங்கள்- 09.00 வெள்ளி- 09.00
பிரிவு II திங்கள்- 03.00 வெள்ளி- 03.00

SAAMSON ENGLISH
279, Clock Tower Road, Jaffna.
077 6214567

### துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தில் சமூக சேவை உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு.த.கனகராஜா அவர்களின் அன்புத் தாயார் திருமதி த.செல்லாச்சி அவர்களின் பிரிவுத்துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

யாழ்.பிரதேச செயலக நலன்புரி சங்கம்,
யாழ்ப்பாணம்.

### மரண அறிவித்தல்

## நவரத்தினம் ஸ்ரீபரன் (சின்னண்ணை)



(சாரங்கன் லொறி உரிமையாளர்)

சிவன் வீதி, ஆவரங்கால் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் ஸ்ரீபரன் நேற்று (23.02.2011) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி,
ஆவரங்கால் மேற்கு.

(714)

தகவல்:
குடும்பத்தினர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணக் கரப்பந்தாட்டத்தில் காங்கேசன்துறை ஐக்கியம் சம்பியன்

வலி.வடக்கு,பெப்.24


யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் இலங்கை மஞ்சி பிஸ்கட் ஸ்தாபனத்தின் ஆதரவுடன் வட மாகாணக் கரப்பந்தாட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான இறுதிப்போட்டியில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் சம்பியனாகியது.

ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகமும் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இந்தப்போட்டியில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களை காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் 25:14, 25:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை வெற்றிபெற்றுச் சம்பியன் வென்றது.

இந்தப்போட்டியில் வட மாகாணத்திற்கு உட்பட்ட 07 அணிகள் இடம்பெற்றன. இதில் வவுனியா பொலிஸ் அணி, கிளிநொச்சி நியூ ஸ்ரார் அணி, முல்லைத்தீவு முல்லை அணி என்பனவும் இடம்பெற்று இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (த-86)

# 13 வயதுப் பிரிவுக்கான கிரிக்கெட் பயிற்சி முகாம்



வலி.வடக்கு,பெப்.24

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 13வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் பயிற்சி முகாம் யாழ். மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் மற்றும் இலங்கை வங்கி ஆகியவற்றின் ஆதரவுடன் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் கடந்த 17ஆம் திகதி மு.பகல் 10.45 மணியளவில் ஆரம்பமாகியது.

இலங்கை கிரிக்கெட்டின் முன்னாள் துப்பாட்ட வீரர் பிறெண்டன் குறூப் மற்றும் தேசிய கிரிக்கெட் சங்கத்தின் உறுப்பினர்கள் இந்தப் பயிற்சி முகா மில் கலந்துகொண்டனர்.

யாழ்.மாவட்டப் பாடசாலைகளான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களும் பயிற்றுவிப்பாளர்களும் இந்தப் பயிற்சி முகாமில் கலந்துகொண்டனர்.

இரண்டு நாள்களுக்கு தொடர்ந்து வதிவிடப் பயிற்சி முகாமாக நடைபெற்ற இந்தப் பயிற்சி முகாமில் வீரர்கள் மகிழ்வுக்காகத் தீப்பாசறை நிகழ்வுகளும் இடம்பெற்றன.(த-86-51)

# முடிவுற்றது விளையாட்டு விழா

வலி.வடக்கு,பெப்.24

கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் மூன்றாவது ஆண்டாக இடம்பெற்ற அகில இலங்கை ஆசிரியர்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள் நேற்று நிறைவடைந்துள்ளன.

இலங்கையின் பல பகுதிகளில் இருந்தும் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்கள், வீராங்கனைகள் இந்தப் போட்டிகளில் கலந்துகொண்டார்கள்.

கடந்த 19ஆம் திகதி வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை மற்றும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானங்களில் இடம்பெற்ற ஆண்களுக்கான கிரிக்கெட், பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி மற்றும் ஆண்கள், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகளுடன் இது ஆரம்பமாகியது.

பெருவிளையாட்டுப் போட்டிகளைத் தொடர்ந்து கடந்த திங்கட்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் பா.விக்கினேஸ்வரன் தலைமையில் தடகளப் போட்டிகள் ஆரம்பமாகின.

இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகப் பாரம்பரிய மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி உட்பட மற்றும் கல்வித்திணைக்கள அலுவலர்கள் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டார்கள் (த-86)



குருநகர் சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. விருந்தினர்கள் மாணவிகளின் அணிநடை மரியாதையை ஏற்றுக்கொள்கின்றனர். (த)

# எழுவைதீவு மகாவித்தியாலயத்துக்கு உடற் கல்விக்கு ஆசிரியர் இல்லை

ஊர்காவற்றுறை,பெப்.24

நிரந்தரமான உடற்பயிற்சி ஆசிரியர் இல்லாத போதும் சாதனை படைக்கிறது எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம். இவ்வாறு தெரிவித்தார் எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மை போட்டிக்குத் தலையேற்று உரையாற்றிய வித்தியாலய அதிபர் க.கமலதீபன்.

எமது பாடசாலையில் குறைந்தளவான மாணவர்கள் கல்வி கற்கின்ற போதிலும் கடந்த ஆண்டு 25 மாணவர்கள் மாவட்ட மட்டப்போட்டிகளில் பங்குபற்றி அதில் சில மாணவர்கள் வெற்றியீட்டினார்கள். ஒரு மாணவன் மாகாண மட்டத்துக்கு தெரிவாகி தேசிய மட்டத்திலும் பங்குபற்றி 7ஆம் இடத்தை பெற்றுக் கொண்டார்.

இம் மாணவன் தேசிய மட்டத்தில் 7ஆம் இடத்தை பெற்றமைக்கு போதியளவு விளையாட்டு உபகரணங்கள் இல்லாமையும் நிரந்தரமான உடற்பயிற்சி ஆசிரியர் இல்லாமையுமே காரணமாகும். அதாவது இம்மாணவன் உயரம் பாய்தல் போட்டியிலேயே 7ஆம் இடத்தை பெற்றுக்கொண்டார். ஆனால் எமது பாடசாலையில் உயரம் பாய்வதற்குரிய மெத்தை வசதியும், உயரம் பாய்தல் கம்பமும் இல்லாமையினாலேயே இம் மாணவன் 7ஆம் இடத்தை பெற வேண்டிய நிலை ஏற்பட்டது- என்றார். (த-325)

# மெய்வன்மைப் போட்டிகள்

தென்மராட்சி, பெப்.24

மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்கலவன் வித்தியாலய இல்லமெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப ஒரு மணிக்கு மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் வே. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும் போட்டிக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்விக் வலய உடற்கல்விப் உதவிக் கல்விப் பணிப்பாளர் த.சிவகுமார், ஸ்ரீலங்கா ரெலிக்கொம் உதவிப் பொறியியலாளர் க.சுமந்திரன் மக்கள் வங்கியின் கொடிகாமக் கிளை முகாமையாளர் க.ஸ்ரீதரன், வித்தியாலய பழைய மாணவன் செ.கனகலிங்கம் ஆகியோரும் கௌரவ விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலக முன்னாள் நா.சத்தியநாதனும் கலந்து கொள்வர். (த-207)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலையின் முதன் நிலை 2,3 இற்கான இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் சு.தியாகலிங்கம் தலைமையில் நடைபெறும் இப்போட்டியில் யாழ். வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் சண்.தயாளன் [illegible] விருந்தினராகக் கலந்து கொள்[illegible] யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை பகுதித் தலைவர் திருமதி கா.நாகராசா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார். திருமதி றோகினி தயாளன் நிகழ்வில் பரிசில்கள் வழங்குவார். (த-26)

* * *

தென்மராட்சி,பெப்.24

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பி.ப1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் க.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும்போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி [illegible] பணிப்பாளர் [illegible]தியும், சிறப்பு விருந்தினராக ஈ.பி. டி.பியின் தென்மராட்சி அமைப்பாளர் வலன்ரைனும் கௌரவ விருந்தினராக வித்தியாலய முன்னாள் அதிபர் நா. அருட்சோதியும் கலந்து கொள்வர். (த-207)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.24

முல்லைத்தீவு செம்மலை மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பி.ப1மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலையின் அதிபர் ந.விஜயரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரமத விருந்தினராக முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். [illegible]ஸ்ணகுமார் கலந்துகொள்வார். (த-313)

# வெற்றி பெற்ற அணிகள்

யாழ்.மாவட்ட பாதுகாப்புப் படைகளின் தலைமையகமும் பருத்தித்துறை, யாழ்ப்பாணம் உதை பந்தாட்ட லீக்குகளும் இணைந்து நடத்தும் உதை பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு:

யாழ்ப்பாணம் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்துக்கும் பலாலி இராணுவ எம்.ஐ.சி அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் 3:2 என்ற கோல் கணக்கில் பலாலி இராணுவ எம்.ஐ.சி படையணியை வென்றது.

மானிப்பாய் றெட்றேஞ்சஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் யாழ்ப்பாணம் கிஸ்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே நடைபெற்ற போட்டியில் மானிப்பாய் றெட்றேஞ்சஸ் விளையாட்டுக்கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலை வாய்ப்பு**

யாழ். நகரில் உள்ள அச்சகத்துக்கு, Computer இல் Corel DRAW, Photo Shop தெரிந்தவர்கள் தொடர்புகொள்ளவும். 0776519913.

**பணிப்பெண் தேவை**

யாழ். நகரில் வீட்டில் தங்கி இருந்து குழந்தையினைப் பராமரித்து வீட்டு வேலைகளைச் செய்வதற்கு உடனடியாகப் பணிப்பெண் தேவையாகவுள்ளது. நியாயமான சம்பளம் வழங்கப்படும். தொடர்பு- 0778284837

**தேவை**

Computer Accounting செய்யக்கூடிய ஆண் ஒருவர் தேவை. வேலை நேரம் 4.00p.m. - 8.00p.m. தகுதியானவர்கள் நேரில் வரவும்.

**C.C.S.**
Kupilan South, Kupilan.
Chunnakam. T.P. 0778996559

# மரண அறிவித்தல்

## திருமதி அந்தோனிப்பிள்ளை லூர்த்தம்மா



பருத்தித்துறை புனித அந்தோனியார் பதியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி அந்தோனிப்பிள்ளை லூர்த்தம்மா நேற்று (23.02.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ம.அந்தோனிப்பிள்ளையின் மனைவியும், திருமதி. மேரிய சிந்தா, திருமதி மேரி மெக்டலின் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ம.மருசலீன், லீ.பிலிப்புராசா ஆகியோரின் மாமியாரும் சியாமா, றொபின், கொலின்ஸ், ஒஸ்ரின், அல்விஸ், ரஞ்சனா, காஞ்சனா, தர்சினி, ஜோன்பெலிக்ஸ், ஹோபின் ராஜே, ஜொசி, கமல், கமில்ரன், ரேணுகா, வில்பிறெட் ஞானம், அனுசா, கிறிஸ்ரின், வனிதா, கிருபாகரன், ஹோபு, சாந்தி, ராஜசேகரன், சகாயராசா, வித்தியா ஆகியோரின் பேர்த்தியும் கமில்ரன், டிலக்ஷன், கனிஸ்ரன், கீர்த்தனா, டிலக்ஷனா, டிக்ஷன், டினுஷன், விவினா, மெலினா, கெபின், அபினா, செகரானா, அஸ்கிளின், ஸ்ரெபினா, சியாமளா, ஸ்ரெபின், ஸ்ரெபானா, சாளினி, மெல்வின், ஜெரிஸ்ரன், நவின் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.02.2011) வியாழக் கிழமை பி.ப 2.30 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப் பட்டு புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு கோரியடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக்கொள்ளவும்.

புனித அந்தோனியார் ஒழுங்கை,
பருத்தித்துறை.

தகவல்:
அ. வில்பிறெற் (சியாமா)

(108618)

## கூட்டங்கள் ஒத்திவைப்பு

சாவகச்சேரி நகரசபையின் ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவிருந்த உள்ளூராட்சி மறுசீரமைப்பு, நகர அபிவிருத்தி தொடர்பான கூட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என சபையின் செயலாளர் கொன்ஸ்ரைன் ஜக்சீல் தெரிவித்தார்.

உள்ளூராட்சிச் சபை செயலாளர்களுக்கான கூட்டம் ஒன்றை வடக்கு மாகாண ஆளுநர் ஏற்பாடு செய்துள்ளதால் இந்தக்கூட்டங்கள் பிற்போடப்பட்டுள்ளன.

(ஐ)

## கை முறிந்தது

பாடசாலையில் உயரம் பாய்தல் போட்டியில் பங்குபற்றிய மாணவனுக்குகை முறிந்தது.

நேற்று அல்லாரை அ.த.க. பாடசலையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தட்சணாமூர்த்தி கெங்காதரன் (வயது - 15) என்ற மாணவன் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஒ-207)

## இலங்கை கல்வி நிர்வாக சேவை III போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் செயலமர்வு

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா பங்குபற்றுநரின் வேண்டுகோள்களுக்கு இணங்கவும், எம் மண்ணிலிருந்து அதிகமானோர் தெரிவாகும் நோக்கில் SLEAS III வழிகாட்டல் செயலமர்வு தொடராக நடைபெறவுள்ளது.

இடம் : யா/ கிளிநொச்சி மகா வித்தியாலயம்
ஆரம்பம் : 26.02.2011 காலை 9.00 - பி.ப. 3.00 மணிவரை
வளவாளர்கள் - ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவக பணிப்பாளர்

**பா. தனபாலன்**

அவர்கள் தலைமையிலான பேராசிரியர்கள், நிபுணர்கள். பங்குபற்ற விரும்புவோர், முன்கூட்டியே 0776737535 என்ற தொ.பே. இலக்கத்துடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

அறிவு நதி புத்தக நிலையம்,
கனகபுரம் வீதி, கிளிநொச்சி.

## 45ஆம் நாள் இதய அஞ்சலி



எமது வித்தியாலய முன்னாள் அதிபர்
நா. நல்லதம்பியின் அருமை மகனும்,
வித்தியாலய ஆங்கில ஆசிரியை
திருமதி வசந்தா விக்னேஸ்வரனின்
பாசமிகு சகோதரனுமாகிய
**நல்லதம்பி தயாபரன்** அவர்கள்
11.01.2011 அன்று சுவிஸில்
அமரத்துவமடைந்ததையிட்டு எமது இதய அஞ்சலியைச்
செலுத்தி குடும்பத்தாரின் துயரில் பங்கேற்பதோடு
அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை
வித்தியாலயம், சாவகச்சேரி.

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற அங்கத்தவரான த. தர்மபாலன்
(நியூ செலக்சன் புடைவை- சாவகச்சேரி) அவர்களின் பாசமிகுத் தாயார்
அமரர் திருமதி தம்பையா நல்லம்மா 14.02.2011இல்
காலமானார். அவரது மறைவுக்கு மன்றம் தனது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

- சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.

## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்
**கணபதிப்பிள்ளை கிருஷ்ணசாமி**
(மாணிக்கம்)



மலர்வு: 19.11.1948

உதிர்வு : 06.05.2010

திதி: 24.02.2011

எங்களை வழிநடத்திய எம்
குடும்பத் தலைவா
எம் உயிர் உள்ளவரை
உம் நினைவு நீங்காது

40, நெடுங்குளம் றோட்,
கொழும்புத்துறை.

என்றும் நீங்காத நினைவுடன்
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி குணபாலதேவி சுகுமார்
அவர்களின் பாசமிகுத் தந்தை
**கந்தையா கிருஷ்ணபிள்ளை**
அவர்களது மறைவினையிட்டு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/ கொட்டடி நமசிவாய வித்தியாலயம்.

(701)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட சமூக சேவைகள் திணைக்கள அலுவலர் நலன்புரி சங்கத்தின் பொருளாளரும் யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தின் சமூக சேவை அலுவலருமான த. கனகராசா அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி தம்பியப்பா செல்லாச்சி**

அவர்கள் 22.02.2011 இறைவனடி சேர்ந்தமையால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாவட்ட சமூக சேவைகள் திணைக்கள
அலுவலர் நலன்புரி சங்கம்.

(702)

## அலுவலக இடமாற்ற அறிவித்தல்

John Keells Office Automation (Pvt) Ltd. 2011 மார்ச் 01ஆம் திகதியிலிருந்து கீழ்க்காணும் புதிய முகவரிகளுக்கு இடமாற்றம் செய்யப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்கள், மீள்விற்பனையாளர்கள், வியாபாரப் பங்காளிகள் மற்றும் வழங்குநர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

ஹார்ட்வெயார் மற்றும் நுகர்வுப்பொருள் விற்பனை/நிதி மற்றும் நிர்வாகப் பிரிவுகள்
**90, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.**

தொழில்நுட்ப சேவை (வேலைத்தலங்கள்/உதிரிப்பாகங்கள்) பிரிவுகள்
**148, வொக்சோல் வீதி, கொழும்பு 02.**

தொலைபேசி இலக்கங்கள், நீடிப்புக்கள், ஈ-மெயில் முகவரிகள் என்பவற்றில் மாற்றமில்லை.

இடமாற்ற காலத்தில் ஏதேனும் அசௌகரியங்கள் ஏற்படுவதைத் தவிர்க்க, எம்மிடம் விசாரிக்கவும். ஏதேனும் உதவி அல்லது விளக்கம் தேவைப்பட்டால், 0777270772 என்ற மொபைல் இலக்கத்தில் அருணவுடன் தொடர்புகொள்ளவும்.

உங்கள் ஒத்துழைப்பிற்கு நன்றி.

ஜோஃண் கீல்ஸ் ஒபிஸ் ஓட்டொமேஷன் (பிறைவேட்) லிமிட்டட்
தொலைபேசி: 011 2313000, 011 2431576, 011 4702611/பெக்ஸ்: 011 2431745
இணையத்தளம்: www.jkoa.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடாநாட்டு அபிவிருத்திப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேள்விகள் எழுந்தன.

தற்போதைய யாழ்.மாவட்டத்தின் நிலைமை தொடர்பாக ஆராய்வதற்காகவே மேற்படி 14 பேர்கொண்ட குழுவினர் நேற்று இங்கு வருகைதந்தனர்.

அரச அதிபருடன் குழுவினர் கலந்துரையாடிய வேளையில் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற அபிவிருத் திப் பணிகள் தொடர்பிலும், மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளையும் அரச அதிபர் விளக்கிக் கூறினார். அத்துடன் இதுவரை மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டமை தொடர்பான விவரங்களையும் அவர்களுக்கு வழங்கப்பட்ட உதவிகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்தித் திட்டங்களுக் குத் தேவையான நிதிகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட் டது. மக்களை மீள்குடியமர்த்தும் நடவடிக்கைகள் மந்தமான கண்ணிவெடி அகற்றலினால் தாமதமடைவதாகவும், கண்ணி வெடி அகற்றுவதற்குப் போதிய ஆளணி மற்றும் நிதிவளம் இல்லையெனவும் அரச அதிபர் அவர்களிடம் சுட்டிக்காட்டி னார்.

அத்துடன் தற்போது எழுந்துள்ள இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பாகவும் அதனால் எமது யாழ்ப் பாணத்து மீனவர்கள் அதிகம் பாதிக்கப்படுவதாகவும் அரச அதிபர் எடுத்துரைத்தார்.

இராணுவத்தினர் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடு வது தொடர்பாக ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த அரச அதிபர் நாங் களும் அரசாங்க ஊழியர்கள். இராணுவத்தினரும் அரசாங்க ஊழியர்கள். மக்களுக்குச் சேவைசெய்யவேண்டிய கடப்பாடு இருப்பதனால் அவர்கள் தமது திட்ட நடைமுறைகளைத் தமக்கு ஏற்றவாறு நடைமுறைப்படுத்துகின்றனர் - என்றார்.

மக்களுக்கு இவ்வாறான வாழ்வாதார உதவிகள் வழங்கப் பட்டபோதும் மக்களின் வருமான மட்டம் அதிகரிக்கவில்லை என்று ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி யெழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அரச அதிபர் ''மக்களுக்கான வாழ் வாதார உதவிகள் வழங்கப்பட்டபோதும்'' ஏனைய உட்கட்டு மான வசதிகள் விருத்தியடையவில்லை. வீதிகள் திருத்தப்பட வில்லை. அவற்றைவிட உற்பத்தி செய்யப்பட்ட பொருள் களைச் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளது என்று பதிலளித்தார்.

ஏனைய பகுதிகளையும் விட யாழ். மாவட்டத்துக்கு எவ் வாறு அதிக நிதி கிடைக்கின்றது என்று எழுப்பப்பட்ட கேள் விக்குப் பதிலளித்த அரச அதிபர் எமது பிரதேசத்தில் தன்னார் வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் அதிகளவான அபிவிருத் திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன கடனுதவி களை வழங்கிவருகின்றன என்றார்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் ஏன் ஒத்திவைக்கப்பட் டுள்ளது என்பது தொடர்பாக ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப் பினர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையில் இது தேர்தல் ஆணையாளரால் எடுக்கப்பட்ட முடிவு. இது தொடர்பில் என்னால் ஒன்றும் கூறமுடியாது என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்.மாவட்ட செயலகத் திட்டமிடல் கிளையைச் சேர்ந்த பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.மோக னேஸ்வரன், ஐரோப்பிய நாடாளுமன்ற குழு சார்பில் தலை மையாளராக ஜீன் லம்பேட், ஜோன் அர்ராட் மொன்ஸ்ரோ, தோமஸ்மான், லிடாஜோனா, நிக்கோலா ரிஷாட்டி, சிலாவி, நிராஜ்டே ல் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஓ-15)



### வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி

### பதவி வெற்றிடம்

கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை ரூபா10/= செலுத்தி தலைமைக் கந்தோரில் கடமைநாள்களில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங் கள் யாவும் '' பொது முகாமையாளர், வலி.கிழக்கு (தெ.ப) ப.நோ. கூ.சங்கம், நீர்வேலி'' என்ற முகவரிக்கு நேரடியாகவோ அன்றேல் பதிவுத்தபால் மூலமோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடல் வேண்டும். கூட்டுறவுச்சங்கங்களில் கடமையாற்றிய பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்ப முடிவுத்திகதி 10.03.2011 ஆகும். மேலதிக விவரங் களுக்கு தலைமைக்கந்தோரில் தொடர்புகொள்ளவும்.

தொ.பே:- 0213213020

| பதவியின் பெயர் | சம்பளக் குறியீடு | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| 01. லொறிச் சாரதி | 302/14(165/88) | 03 |
| 02. விற்பனையாளர் | 308/17(165/88) | 10 |

பொது முகாமையாளர்,
வலி.கிழக்கு (தெ.ப) ப.நோ. கூ.சங்கம்,
நீர்வேலி.

### பசுக்களைக் காணவில்லை

கடந்த வெள்ளிக்கிழமை (18.02.2011) முதல் நல்லூர் பண்டாரக் குளம் பிள்ளையார் கோயில் இசைமன்றம், பஞ்சலிங்கம் அவர்களுக்குச் சொந்தமான, ஜசர் இனத்தைச் சேர்ந்த வெள்ளை நிறத்தில் சந்தனக்கலர் புள்ளிகள் கொண்ட பட்டி பார்த்த கொம்பில் சங்கு கோர்க்கப்பட்ட பசு ஒன்றும், 21.02.2011 திங்கட்கிழமை முதல் மெல்லிய மண்ணிற கழுத்தில் பட்டி கட்டப்பட்ட பட்டி பார்த்த கொம்புடைய எட்டுமாத சினைப்பசு வையும் குறிப்பிட்ட திகதிகளில் இருந்து காணவில்லை கண்டவர்கள் தகவல் தந்துதவவும்.

தொடர்பு:- 0775302627


## பான் கீ மூனுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு வோடு ஐ.நா. செயலாளரின் நிபுணர் குழு தொடர்பு கொள்வதை அரசு தடுத் தது என வெளியான செய்திகளையும் அவர் மறுத்துள்ளார்.

ஐ.நா. பொதுச் செயலரின் அலுவல கத்தோடு தொடர்புகொள்ள நாங்கள் முயற்சிக்கின்றோம். நல்லிணக்க ஆணைக் குழுவோடு தொடர்புகொள்ள விருப்ப மென்றால் நேரடியாகவோ அல்லது அரசினூடாகவோ தொடர்பு கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

## ஐ.நா. நிபுணர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக் குழுவுக்கு முன்னால் நிபுணர் குழு சாட் சியமளிக்க மட்டும் இடமளிக்கப்படும் என அரசு அறிவித்திருக்கிறது.

இந்த நிலையிலேயே, ஐ.நா. செய லாளர் நாயகம் பான் கீ-மூன் இலங்கை யின் உயர்மட்ட அதிகாரிகளை நேற்றுச் சந்தித்தார். (ஓ-சி)

## அரசியல் கள ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந் திரன் மற்றும் சட்டத்தரணி கனகேஸ் வரன் ஆகியோரே இந்த ஆலோசனை யில் பங்கேற்றனர்.

இதுவரை அரசுடன் இடம்பெற்ற பேச் சுக்கள் தொடர்பாக குழுவினர் சம்பந்தனுக்கு விளக்கமளித்தனர்.

அடுத்தகட்டப் பேச்சுக்களில் கூட்ட மைப்பு முன்வைக்க வேண்டிய விடயங் கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதாக கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இழுத்தடித்துச் செல்லாமல் எதிர் வரும் மே, ஜூன் மாதங்களுக்குள் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும் என்பதில் கூட்டமைப்பு உறுதியாக உள்ளது என் றும் அவர் கூறினார். (ஓ-ஐ)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்களது பிரச்சினை கடந்த இரண்டு மாதங்களில் சர்ச்சைக் குரியதாக மாறியது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் இரண்டு நாடு களும் இணங்கிக் கொண்டதற்கு அமைய, எதிர்வரும் மார்ச் மாதம் குறித்த கூழு சந்திக்கவிருக்கிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்திய மீனவர்கள் கைதுசெய்யப் பட்ட அல்லது தொந்தரவுக்குள்ளாக் கப்பட்ட ஏறத்தாழ அனைத்துச் சம்பவங் களும் இலங்கைக் கடற்பரப்பிலேயே இடம்பெறுகின்றன.

இது எமது மீனவர்களுக்கு எதிராக பலவந்தத்தைப் பிரயோகிப்பதை நியா யப்படுத்தமாட்டாது. எனினும் நீண்ட காலத்தின் பின்னர் அப்பகுதியில் மீன் பிடியை ஆரம்பித்துள்ள இலங்கை மீன வர்கள் குறித்தும் நாம் அக்கறை கொள்ள வேண்டும்.

இதற்கிடையில் இலங்கை - இந்தி யக் கடற்பரப்பில் இந்திய மீனவர் களுக்கு நடந்த அசம்பாவிதங்கள் குறித்து உன்னிப்பான விசாரணை செய்யுமாறு தாம் இலங்கை அரசிடம் கோரியிருக் கிறார் என்றும் அவர் கூறியுள்ளார்.



### காணி விற்பனைக்கு

சுண்டுக்குளி, பாண்டியன்தாழ்வு சந்தன மாதா தேவாலயத்துக்கு கிழக்குப் பக்கமாக கிணறு, சுற்றுமதிலுடன் கூடிய 04 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0789110912

### வான் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள, சேல்ஸ் செய்யக்கூடிய Toyota வான் விற்பனைக்கு உண்டு.

0778689223


## அஸ்தியைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிராண்டித்தனச் செயலாகும். 81 வயதான மூதாட்டியின் இறு திக்கிரியைகள் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் இடம்பெற் றன. அந்த மூதாட்டியை எரித்த சாம்பலைக் கிளறி அந்த இடத்தில் நாய்களின் உடலை போடுவது என்பது வெறுக்கத்தக்க அநாகரிக மான செயலாகும். இது மனிதத் தன்மை அற்ற செயலாகும். இதற்கு அரசு தான் பொறுப்பேற்க வேண்டும். இந்த மாதிரியான செயலை யார் செய்திருப்பார்கள் என்பது அனைவருக்கும் தெரியும்.

இவ்வாறான வெறித்தனமான - காட்டு மிராண்டித்தனமான செயல் ரோகண விஜயவீரவின் தாய்க்கு நடந்ததா அல்லது அவரின் தந்தைக்கு அல்லது அவரது குடும்பத்துக்கு நடந்ததா? இல் லையே. ஜே.வி.பியின் பிடிபட்ட உறுப்பினர்களின் பெற்றோருக்கு இப்படி நடந்ததா? இல்லை. ஆனால் பார்வதியம்மாளுக்கு நடந்ததுக்கு அரசுதான் பதில் சொல்ல வேண்டும் - என்றார்.

பேராசிரியர் இரா.சிவசந்திரன் கூறியதாவது:-

அநாகரிகமான - மனிதாபிமானமற்ற இவ்வாறான செயல் உலகின் எந்தப் பாகத்திலும் இதுவரை இடம்பெற்றதாக நான் அறிய வில்லை. ஆனால் இந்தச் செயல் இங்கு நடந்தேறியிருக்கிறது. தமிழ் மக்களை அவமானப் படுத்துவதற்காகச் செய்த இந்த செய லால் தமிழ் மக்கள் அவமானப் படவில்லை. இந்தச் செயலைப் புரிந்த வர்கள் தான் அவமானப்பட வேண்டியுள்ளது. மனித நேயம் உள்ள எவரும் இதனை செய்திருக்க மாட்டார்கள் - என்றார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் தெரிவிக்கையில் -

இந்த அநாகரிகமான செயலுக்கு இராணுவமே பொறுப்பு ஏற்க வேண்டும்.

சிங்கள அரசின் அரக்கத்தனமான இந்தச் செயலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வன்மையாகக் கண்டிக்கிறது. இவ்வாறான எந்தச் செயலாலும் தமிழ் மக்களது விடுதலை உணர்வை மழுங் கடிக்க முடியாது. தமிழ் மக்களது உள்ளத்திலிருந்து பார்வதியம் மாளின் நினைவுகளை அழிக்க முடியாது. தமிழ் மக்கள் தமது இறைமைக்கான இலட்சியப் பயணத்தை எவரும் தடுத்து நிறுத்தவும் முடியாது என்பதை ஆணித்தரமாகச் சொல்ல விரும்புகிறோம் - என்றார்.

தமிழரசுக் கட்சியின் பிரமுகர் சி.வீ.கே.சிவஞானம் கூறுகை யில் -

இந்து மத கலாசாரத்தை அவமதிக்கும் செயல் இது. பார்வ தியம்மாளின் அஸ்தியை உரியமுறையில் நிறைவேற்றவிடாது அசிங்கப்படுத்திய செயல் கண்டிக்கப்பட வேண்டியது - என்றார்.

தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் பெயர் குறிப்பிட விரும்பாத மருத்துவர் கூறியதாவது -

இந்தச் செயலால் ஈழத்தமிழரும் உலகம் முழுவதும் வாழும் தமிழ்மக்களும் மனித நேயம் படைத்தவர்களும் அதிருப்தி அடை வார்கள். இதற்கு அரசும், அரச அதிகாரிகளும் பொறுப்புக் கூறவேண்டும் திட்டமிட்ட முறையில் சிங்கள பேரினவாத அரசினால் அரங்கேற்றப்பட்ட இந்தச் செயல் அந்த அரசின் அடி மனத்திலுள்ள வக்கிரப் புத்தியைக் காட்டுகிறது. இவ் வாறான செயல் இனியும் தொடரக்கூடாது - என்றார். (14)



### மரண அறிவித்தல்

### தர்மலிங்கம் விஜயஸ்ரீ



மயிலணி வடக்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், முனியப்பர் வீதி, கோண்டாவில் வடக்கை வசிப்பிட மாகவும் கொண்ட தர்மலிங்கம் விஜயஸ்ரீ நேற்று (23.02.011) புதன்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் யோகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் மு.ராமு - காலஞ்சென்ற தனலட் சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயந்தினியின் அன்புக்கணவரும் வினோஜன், ஜெனோஜன், அனோஜன், கம்சிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீவாசன் (பனை அபிவிருத்திச் சபை), ஸ்ரீ ஜெகன் (சுவிஸ்), ஸ்ரீ தாசன் (லண்டன்), அனுசியா (சுவிஸ்), ஸ்ரீ லேக்கா (ஆசிரியர், மன்னார்), உசா, ஸ்ரீபிரகாஸ் (ஆசிரியை, யா/ஊர்காவற்றுறை சென். அந்தனிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2011) வியாழக்கிழமை பி.ப 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நந்தாவில்,
முனியப்பர் கோயில் வீதி,
கோண்டாவில் மேற்கு.
021-4915408 (718)

தகவல்:
குடும்பத்தினர்.

### காணவில்லை




கல்வியங்காட்டைச் சேர்ந்த சு.தற்பரானந்தேஸ்வரசர்மா (வயது-60) என்பவரை நேற்று (23.02.2011) புதன்கிழமை 2 மணியில் பன்னாலை தெல்லிப் பழையில் காணவில்லை. இவர் கடைசியாக மஞ்சல் சேட்டும், வெள்ளை வேட்டியும் அணிந் திருந்தார். இவரைப்பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:
0212230366, 0718474583


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




வவுனியாவில் மழை பெய்வதற்கான சாத்தியம் உள்ளதுடன் ஏனைய மாவட்டங்களில் வெப்பநிலையுடன் கூடிய காலநிலை காணப்படும்.

## தம்புள்ளையில் யாழ்ப்பாண மரக்கறிகள்

கொழும்பு, பெப்.24

தம்புள்ள சந்தையில் குவிந்த யாழ்ப்பாண மரக்கறிகளால் தென்பகுதியில் மரக்கறிகளின் விலைகள் திடீரெனச் சரிவடைந்துள்ளன.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் போன்ற சீரற்ற காலநிலையால் மரக்கறிகளின் விலை எகிறி வந்தது.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் தம்புள்ள மரக்கறிச் சந்தைக்கு பெருமளவு யாழ்ப்பாண மரக் கறிகள் எடுத்துவரப்பட்டன.

ஒரு இலட்சம் கிலோ பீற்றூட், 50,000 கிலோவுக்கும் அதிகமான உருளைக்கிழங்கு, ஒரு இலட்சம் கிலோ வெங்காயம் உள்ளிட்ட பெருமளவு யாழ்ப்பாண மரக்கறிகள் தம்புள்ளச் சந்தைக்கு எடுத்து வரப்பட்டன.

# பாதுகாப்பு வலயம் இல்லை என்கிறார் ஜனாதிபதி; சுருக்கிவிட்டோம் எனக் கூறுகின்றார் சிறிபால

நாட்டில் எந்த ஒரு பகுதியிலும் அதியுயர் பாதுகாப்பு வலயம் என்று ஒன்று இல்லை என ஜனாதிபதி கூறுகின்றார். ஆனால் இன்னும் கூட எமது மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாமல் இருக்கின்றனர். எமது மக்களின் காணிகளையும், உடைமைகளையும் பாதுகாப்புப் படையினர் ஆக்கிரமித்துவைத்துள்ளனர். என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று நாடாளுமன்றில் குற்றம் சுமத்தினார்.

எமது மக்களின் கோரிக்கைகளை மட்டுமல்ல உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பைக்கூட உதாசீனம் செய்துவருகின்றது என்றும் சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

நேற்று நாடாளுமன்றில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் யாழ்.மாவட்ட எம்.பி. விநாயகமூர்த்தி எழுப்பிய கேள்வி தொடர்பாக இடைக்கேள்வி ஒன்றை எழுப்பும் போதே சுமந்திரன் இப்படிக் குற்றம் சாட்டினார்.

நேற்று வழமை போல் நாடாளுமன்ற அமர்வுகள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

ஆரம்ப நிகழ்வாக தத்தமது தொகுதி மக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாக 19 மனுக்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்த முறைப்பாடுகள் அனைத்தும் மனுக்கள் முறைப்பாட்டுக் குழுவின் கவனத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

தொடர்ந்து தனிநபர் பிரேரணைகள் நான்கும் நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டன.

காமினி ஜெயவிக்கிரம பெரேரா - ''ஜீ பியரத்ன சமூக அபிவிருத்தி மற்றும் சமூக அடிப்படை மன்றம்''

✱ ஏ.எச்.எம். அஸ்வர் - ''யூ.எல்.எம்.மாருக் மன்றம்''

✱ அருந்திக்க பெர்ணாண்டோ - சுசந்த புஞ்சி நிலமே மன்றம்.

✱ பிமெதி மாலினி பொன்சேகா - ஹெல உதாவ தேசிய இயக்கம் என்பனவற்றைக் கூட்டிணைப் பதற்கான சட்டமூலங்களைக் கொண்டுவருவதற்கான தனிநபர் பிரேரணைகளைத் தனித் தனியாகச் சபையில் சமர்ப்பித்தனர்.

பின்னர் வாய்மூல விடைக்கான 15 கேள்விகள் ஒழுங்குப் பத்திரத்தில் குறிபிடப்பட்டிருந்தன. ஆனால் 3 கேள்விக்கான பதில்கள் மட்டுமே அளிக்கப்பட்டன. காரணம் கேள்விகளைக் கேட்பதற்கு முன்னறிவித்தல்களைக் கொடுத்த உறுப்பினர்கள் சபையில் பிரசன்னமாகி இருக்கவில்லை.

கேள்வி நேரத்தில் சர்ச்சைகளையும் சூட்டையும் கிளப்பிவிடும் எதிர்க்கட்சி உறுப்பினர்களான ரவி கருணா நாயக்காவும், தயாசிறி ஜயசேகரவும் சபையில் இல்லாதது கேள்வி நேரத்தைக் களையிழக்கச் செய்துவிட்டது.

அதேவேளை யாழ்.மாவட்ட தமிழ்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான விநாயகமூர்த்தி யாழ்.மாவட்டத்தில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள எமது மக்களின் வீடுகளையும், காணிகளையும் எப்போது மீண்டும் எங்களிடம் ஒப்படைக்கப் போகின்றீர்கள் என பிரதமரிடம் கேள்வி ஒன்றைக் எழுப்பினார்.

அப்போது பிரதமர் சபையில் சமுகமளித் திருக்காததினால் சபை முதல்வர் நிமல் சிறிபால டி சில்வா பதிலளித்தார்.

### பாதுகாப்பு வலயத்தைச் சுருக்கிவிட்டோம்

ஐயா நாங்கள் இம்மாதம் அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களை மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கிவிட்டோம். இப்பொழுது வடக்கில் 1129 வீடுகளும் காணிகளும் மட்டுமே படையினரால் பயன்படுத்தப்படுகின்றன. இவை அனைத்தும் இன்னும் 3 மாதங்களில் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுவிடும். அதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்றார்-

### அதி உயர் பாதுகாப்பு வலயமே இல்லையென்கிறார் ஜனாதிபதி

அமைச்சரின் இப்பதிலைத் தொடர்ந்து மற்றுமொரு கூட்டணி உறுப்பினரான சுமந்திரன் ஒரு விடயத்தினைச் சுட்டிக் காட்டினார்.

சபாநாயகர் அவர்களே எமது ஜனாதிபதி ''யுத்தம் முடிந்து விட்டது. சமாதானம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் சகஜ வாழ்க்கைக்குத் திரும்பிவிட்டனர்'' - என்று கூறுகின்றார். நாட்டில் எந்தவொரு மூலையிலும் அதியுயர் பாதுகாப்பு வலயம் என்று கிடையாது என்கிறார். ஆனால் அமைச்சரே 1129 காணிகளும் வீடுகளும் படையினர் வசம் இருக்கின்றன என்கிறார். இவை எல்லாம் எப்போது விடுவிக்கப்படும் - என்றார்.

### வரிவிதிப்புக்கள்

நேற்றைய தினப் பணிகளில் ஏற்கனவே தெரிவுசெய்த திட்டத்தின் மூலம் விசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலமும் அமைச்சரவையின் அங்கீகாரத்துடனும் செயற்படுத்தப்பட்டுள்ள வரிவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) கட்டளைகளுக்கு நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான விடயம் முன்வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது.

இவ்விடயங்கள் அனைத்தையும் தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்ப அமைச்




சர் ரஞ்சித் சியம்பலப்பிட்டிய சபையில் முன்வைத்தார்.

### பாதிக்கப்பட்டோருக்கு கிடைத்த உதவிகள் துஷ்பிரயோகம்

இவ்விடயம் தொடர்பாக உரையாற்றிய சுமந்திரன் எம்.பி அரசின் நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டித்தார். மக்கள் பசியினாலும், பட்டினியாலும் வாடும்போது சொகுசு வாகன இறக்குமதி அவசியம் தானா என்று கேள்வியெழுப்பினார். இதனால் ஆளும்கட்சி உறுப்பினர்கள் மத்தியில் சூட்டை ஏற்றிவிட்டது.

### கழுதை எவ்வளவு கத்தினாலும் இதற்குமேல் உயராது

என்றாலும் விடவில்லை சுமந்திரன். இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகள் எல்லாம் பேச்சிலும் விளம்பரத்திலும் மட்டும்தான் வடபகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய அரசு வழங்கிய உதவிகள் கூட மக்களைச் சென்றடையவில்லை. என்றும் பட்டியல்போட்டுக் காட்டினார்.

அப்போது ஆளும்கட்சி உறுப்பினரான ஏ.எச்.எம்.அஸ்வர் அடிக்கடி குறுக்கீடுசெய்து கொண்டேயிருந்தார். அப்போது சற்றுக் கடுப்பான குரலில் கழுதை எவ்வளவுதான் கத்தினாலும் அதற்குமேல் உயராது. என்று கூறினார் சுமந்திரன் யாரைப்பார்த்து இப்படிக்கூறினாரோ தெரியவில்லை.

### பாலங்கள் உண்டு கனரக ஊர்திகள் தடை

ஐக்கியதேசியக் கட்சி உறுப்பினரான லக்ஸ்மன் கிரியெல்ல உரையாற்றும்போது. அந்த எம்பிக்கும் லக்ஸ்மன் கிரியெல்லவிற்கும் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இருவரும் மாறிமாறி குற்றச்சாட்டுக்களைச் சுமத்திக் கொண்டனர்.

ஆளும் கட்சியுமான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தல் ஆணையாளரின் பணிப்புரையையும் மீறி அரச ஊடகங்களைத் தேர்தல் பிரசாரங்களுக்குப் பயன்படுத்தி உள்ளது.

இந்த வகையில் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்குப் பலகோடி ரூபாய்களைச் செலுத்த வேண்டியுள்ளது. இன்று வரை இத் தொகை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தவில்லையென்று ஒரு குண்டைத் தூக்கிப்போட்டார். இதனால் அதிர்ச்சியடைந்த அஸ்வர் எம்.பி. துள்ளி எழுந்தார். நீங்கள் மட்டும் என்ன உங்களுடைய காலத்தில் ''லேக்கவுஸ்'' நிறுவனத்தில் அச்சிடப்பட்ட தேர்தல் போஸ்ரர்களுக்காக பெருந்தொகையைக் கட்டவில்லை என்பது எங்களுக்கும் தெரியும் - என்றார்.

இந்த இருவருடைய பரஸ்பர குற்றச்சாட்டுக்களும் பார்வையாளர் கலரியில் இருந்த பாடசாலைப் பிள்ளைகளும் இரசிக்கக்கூடியதாக இருந்தது.

**சபைச் செய்தியாளர்**
**இரா. புத்திரசிகாமணி**

அப்போது லக்ஸ்மன் கிரியெல்ல இன்னுமொரு விடயத்தையும் சபையில் கூறினார். அதாவது இன்று அரசாங்கம் அவசரமாகப் பாலங்களைக் கட்டி வருகின்றது. ஆனால் இப்பாலங்களில் கனரகப் பாரவூர்திகள் செல்லக்கூடாது என்னும் அறிவித்தல் பலகை வைக்கப்பட்டுள்ளன என்றும் லக்ஸ்மன் கிரியெல்ல கூறினார். இது எப்படி இருக்கின்றது?

# நிகழ்வுகள்

**நலன்புரிசங்கக் கூட்டம்**

தென்மராட்சி,பெப்.24

தென்மராட்சி இளைப்பாற்று வேதனம் பெறுவோர் நலன்புரி சங்கத்தின் இருபதாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

சங்கத் தலைவர் செ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் கூட்டத்துக்கு தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் முதன்மை விருந்தினராகவும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலன்ரின் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவர்.

நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறவுள்ளதால் சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு சங்கச் செயலாளர் டாக்டர் சி.கந்தையா அறிவித்துள்ளார்.

**மாணவர்களுக்கு உதவி**

நலிவுற்ற மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகப் பல்வேறு உதவிகளையும் வழங்கி வருகின்ற யாழ். எய்ட் நிறுவனம் அதன் உதவியின் ஓர் அங்கமாக நாவாந்துறை றோ.க.பாடசாலைக்கு ஒரு தொகுதி காலணிகளையும், புத்தகப்பைகளையும் இன்று முற்பகல் 10 மணிக்கு வழங்குகிறது.

பாடசாலை அதிபர் எவ்.எக்ஸ் அன்ரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு பிரான்ஸ் வாழ். திருமதி ஸ்ரீஸ்காந்த தேவா, திரு.ஹரி சண்முகநாதன் ஆகியோர் கலந்து கொள்வர்.

**தென்மராட்சி அதிபர்கள் கூட்டம் கைதடியில்**

தென்மராட்சி,பெப்.24

தென்மராட்சி கல்வி வலயத்தினால் வலய மாநாட்டு மண்டபத்தில் இதுவரை காலமும் நடத்தப்பட்டு வந்த வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டங்கள் வருங்காலங்களில் ஒவ்வொரு பாடசாலையிலும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் அதிபர்களுக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் கடற்படையினர் பயன்படுத்தும் வீடுகள் 3 மாதங்களில் உரியவர்களிடம்

## அமைச்சர் சிறிபால சபையில் உறுதி

கொழும்பு, பெப்.24

வன்னிப் பிரதேசத்தில் கடற்படையினரால் பயன்படுத்தப்பட்டுவரும் காணிகளும், வீடுகளும் இன்னும் மூன்று மாதங்களில் அம்மக்களிடமே ஒப்படைக்கப்படும். இதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த 30 வருடங்களாக அதி உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த பிரதேசங்கள் மூன்றில் ஒரு பகுதியாகக் குறைக்கப்பட்டுள்ளன - இப்படி சபை முதல்வரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான அப்பாத்துரை விநாயகமூர்த்தி, கிளிநொச்சி உட்பட வடமாகாணத்தில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளும், வீடுகளும் எப்போது அம்மக்களிடம் மீளக் கையளிக்கப்படும் என ஒரு கேள்வியை எழுப்பினார்.

பிரதமரிடம் கேட்கப்பட்ட இக்கேள்விக்கு சபை முதல்வர் நிமால் சிறிபால டி சில்வா பதிலளித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வடமாகாணத்தில் பாதுகாப்புப் படையினர் தனியாருக்குச் சொந்தமான காணிகள், வீடுகள் மற்றும் கட்டடங்கள் என 1,129ஐ பயன்படுத்தி வருகின்றனர்.

பலாலியில் 32 தனியார் காணிகளும், இரண்டு அரிசி ஆலைகளும் விமானப்படையினரால் பயன்படுத்தப்படுகின்றன.

அதேவேளை, முன்பு படையினரால் பயன்படுத்தப்பட்ட 472 வீடுகளும், காணிகளும் பொதுமக்களிடம் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளன.



இன்னும் மூன்று மாதங்களில் வன்னிப் பிரதேசத்தில் கடற்படையினரால் பயன்படுத்தப்படும் எல்லா வீடுகளும், காணிகளும் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும்.

அதேவேளை, பல காணிகள் உரிமை கோரப்படாமல் இருக்கின்றன. பலர் சுயமாகவே தமது காணிகளை படையினருக்கு வழங்கி உள்ளனர். காணிகளின் உரிமையாளர்கள் விண்ணப்பித்தால், அக்காணிகளும் அவர்களிடம் ஒப்படைக்கப்படும் என்றும் அமைச்சர் பதில் அளித்தார். (ஒ-சி)

# கைதிகளில் பலருக்கு பார்வைக்கோளாறு

கொழும்பு, பெப். 24

வெலிக்கடைச் சிறைச்சாலையில் சிறைவைக்கப்பட்டுள்ள கைதிகளில் அரைவாசிப் பேர் பார்வைக்கோளாறினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என சிறைச்சாலைகள் ஆணையாளர் அசோக்க ஹப்பு ஆராச்சி நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஆணையாளர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சிறைச்சாலையில் கடந்த 12ஆம் திகதி, கொழும்பு கண் வைத்தியசாலையின் விசேட கண் வைத்திய நிபுணர்களான பி.பி.வீரசிங்க மற்றும் என்.ஏ.ஜே.ஆர்.நெத்தசிங்க தலைமையிலான வைத்தியக்குழு கைதிகளுக்கான நடமாடும் சேவை ஒன்றை நடத்தியது.

இதன்போது சுமார் 580 கைதிகளின் கண்கள் பரிசோதனை செய்யப்பட்டன. இதில் 250 கைதிகளுக்கு குறும்பார்வை, தூரப்பார்வைக் கோளாறு இருப்பது கண்டறியப்பட்டது. இவர்களில் 15 தமிழ்க் கைதிகளும் அடங்குகின்றனர்.

மரணதண்டனை விதிக்கப்பட்டு மேன்முறையீடு செய்யப்பட்டுள்ள 167 கைதிகளும், ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டுள்ள 163 கைதிகளும், மேலும் 320 கைதிகளும் இவ்வாறு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

பார்வைக்கோளாறு உள்ளவர்கள் என அடையாளம் காணப்பட்ட கைதிகளுக்கு அன்றைய தினமே கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

மேற்படி நடமாடும் சேவையைப் போன்று மேலும் பல நடமாடும் மருத்துவ சேவைகளை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. - என்றார். (ஒ-சி)



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தெற்காசியாவுக்கான நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று வவுனியாவுக்குச் சென்று இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றத்தையும், தடுப்பு நிலையங்களில் புனர்வாழ்வு பெறும் முன்னாள் புலிப் போராளிகளையும் பார்வையிட்டனர்.

# சுயாதீன ஆணைக்குழுக்கள் ஒழிக்கப்பட்டு ஜனாதிபதி ஆணைக்குழுக்களே இயங்குகின்றன

## சபையில் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு



மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் சுயாதீன ஆணைக்குழுக்கள் ஒழிக்கப்பட்டு, ஜனாதிபதியின் ஆணைக்குழுக்களே தற்போது நாட்டில் செயற்படுகின்றன.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

வரி விதிப்பு விசேட ஏற்பாடுகள் தொடர்பான 16 கட்டளைகளை அங்கீகரிப்பதற்கான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

துறைமுகங்கள் அமைக்கப்படுகின்ற போதிலும், கப்பல்கள் வருவதில்லை. மேம்பாலங்கள் அமைக்கப்படுகின்ற போதிலும் பார ஊர்திகள் செல்லத் தடைவிதிக்கப்படுகிறது. இதுவே, இந்நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை. அபிவிருத்தித் திட்டங்கள் தேவைதான். ஆனால், அதன் மூலம் மக்கள் நன்மை அடைய வேண்டும்.

கடந்த 2005ஆம் ஆண்டு தொடக்கம் 2010ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்குள் நடைபெற்ற தேர்தல்களுக்காக - ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் அரசு செய்த விளம் பரங்களுக்காக 42 பில்லியன் ரூபா இன்னும் செலுத்தப்படாது நிலுவையிலுள்ளது. ஆனால், தேர்தல்கள் ஆணையாளர், அரச வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படவில்லை என்கிறார். இது ஒரு நியாயமான தேர்தல் என்று கூறமுடியாது.

இலங்கை மக்கள் தற்போது தொழிலின்மை, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஆகிய பிரதான இரண்டு பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்துள்ளனர். அரசு கூறி வருகின்றது போன்று இந்நாடு அபிவிருத்திப் பாதையில் செல்கின்றது என்றால், ஏன் வாழ்க்கைச் செலவு உயர்வடைகின்றது? யுத்தம் நிறைவடைந்த பின்னர் வெளிநாட்டு முதலீடுகள் பல இங்கு மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்த்திருந்தோம்.

இப்போது யுத்தம் நிறைவடைந்து இரண்டு வருடங்களாகியும், எங்கே வெளிநாட்டு முதலீடுகள்? ஊடக சுதந்திரம், ஜனநாயகம் ஆகியன காணப்படுகின்ற நிலையிலேயே வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலிட முன்வருவார்கள். ஆனால், இங்குள்ள சட்டங்கள் அவர்களுக்குத் தடையாக உள்ளன - என்றார். (ஒ-சி)

# லிபியாவிலுள்ள இலங்கையருக்கு எந்தவித ஆபத்தும் இல்லை

கொழும்பு, பெப். 24

லிபியாவில் வசிக்கும் ஆயிரத்து 200 இலங்கையர்களும் பாதுகாப்பாக இருக்கின்றனர் எனப் பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்துள்ளார்.

லிபியாவில் அரசுக்கு எதிராக நடக்கும் வன்முறைகள், ஆர்ப்பாட்டங்கள் ஆகியவை நாளுக்கு நாள் அதிகரித்துவரும் நிலையில், அங்குள்ள ஆயிரத்து 200 இலங்கையர்களும், எந்தவித ஆபத்தும் இல்லாமல் பாதுகாப்பாக இருக்கின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

பல நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டவர்கள் தமது சொந்த நாடுகளுக்குச் செல்வதற்காக விமான நிலையத்தில் வந்து குவிந்த வண்ணம் உள்ளனர். லிபிய ஜனாதிபதி கடாபி தனக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோரை அடக்கி, ஒடுக்குமாறு இராணுவத்தினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த நிலையில், ஆயிரத்து 200 இலங்கையர்களின் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்த சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட உள்ளோம் எனவும், லிபிய நிலைமைகள் குறித்து உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு வருகிறது எனவும் நியோமல் பெரேரா மேலும் தெரிவித்தார்.

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,பெப்.24

சுழிபுரம் வட-கிழக்கு (சோழிய புரம்) சம்புநாதேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா கடந்த 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

சிவராத்திரி வரை பத்துத் தினங்கள் நடைபெறவுள்ள விழாவில் 2ஆம் திகதி புதன் கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் 3ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஐ)

***

யாழ்ப்பாணம்,பெப்.24

துன்னாலை கோயிற் கடவை சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா நேற்றுப் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 3ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறும். (ஐ)

# உலக கிண்ண பாடலுக்கு ஜனாதிபதி தடை

கொழும்பு, பெப்.24

அவுஸ்திரேலியா நியூஸிலாந்து அணிகளுக்கு எதிராக வன்முறை அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் அமைந்த கிரிக்கெட் உலக கிண்ணப் பாடல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தரவுக்கிணங்க தடை செய்யப்பட்டுள்ளது.

நடப்புச் சம்பியனான அவுஸ்திரேலிய அணி பறவைத் தீனி போன்று நொறுக்கப்படும், நியூஸிலாந்து அணியினர் தாடைகள் உடைக்கப்படும் என பாடலில் எச்சரிக்கப்பட்டிருந்தது.

சிங்கள, தமிழ் வரிகள் கொண்ட இப்பாடலை செவிமடுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இப்பாடலை ஒலிபரப்ப வேண்டாம் என அரச வானொலி, தொலைக் காட்சிகளுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

அவமதிக்கும் விதமான வரிகளை அனுமதித்தமைக்காக விளையாட்டுத்துறை அதிகாரிகளையும் ஜனாதிபதி கடிந்துகொண்டுள்ளார்.

இப்பாடல் மோசமான ரசனை கொண்டதென ஜனாதிபதி கருதுகிறார். ஏனைய நாடுகளை அவமதிக்காமல் அணியையும் ரசிகர்களையும் உற்சாகப்படுத்தும் பாடலை அவர் விரும்புகிறார் என ஜனாதிபதிக்கு நெருக்கமான அதிகாரியொருவர் ஏ.எவ்.பிக்கு தெரிவித்துள்ளார்.

# சுவரொட்டி கட்டுப்பாடு நீக்கம்

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் தொடர்பான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

அரசியல் கட்சிகள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு குழுக்களுக்கிடையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யுத்தத்தால் பாதிக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதி அமைச்சினால் முன்வைக்கப்பட்ட வரி விதிப்புகள் - விசேட ஏற்பாடுகள் தொடர்பான கட்டளைகளுக்கு நாடாளுமன்ற அங்கீகாரம் பெறுவதற்கான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக உரையாற்றிய சுமந்திரன் எம்.பி. மேலும் கூறியவை வருமாறு:-

அரசு இப்போது பல்வேறு வகையான 16 வரிவிதிப்பு விசேட ஏற்பாடுகள் கட்டளைகளை இந்தச் சபையில் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பித்துள்ளது.

நாட்டுக்கு வருமானம் பெறுவதற்கான அபிவிருத்திகளை மேற்கொள்வதை நாம் எதிர்க்கவும் இல்லை. விமர்சிக்கவும் இல்லை.

ஆனால், மக்களின் அத்தியாவசிய தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்று உடனடியாகப் பரிகாரம் காணப்படவேண்டிய அதிகூடிய விடயங்களாக இருப்பவை விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தல், வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துதல். இன்று கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு விலைவாசி அதிகரித்துள்ளது. போதிய வருமானம் இல்லை. இதனால் நாட்டு மக்கள் அனைவருமே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### வீதிகளில் மக்கள் நடக்க முடியாதவாறு வாகனங்கள்

இன்றைய தேவை வீடு, உணவு, உடை. இவை மக்களுக்கு கிடைக்க வழியமைக்கப்படாத நிலையில் வாகனங்களையும், ஆடம்பரக்கார்களையும் இறக்குமதி செய்வதால் எந்த நன்மையும் இல்லை. இப்பொழுது வீதிகளில் மக்கள் நடக்கமுடியாத அளவுக்கு வாகனங்கள் நிறைந்துள்ளன.

இவை இன்று மக்களுக்குத் தேவை தானா?

உலக சந்தையில் எண்ணெய் விலை அதிகரித்துவிட்டது என்றால் எம் போன்ற சிறிய நாடுகளால் அதனைக் கட்டுப்படுத்த முடியாது.

ஆனால், விலைவாசி உயர்வையும், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இதைச் செய்ய அரசு தவறிவிட்டது.

வரவு-செலவுத் திட்டத்தின் மூலமும் வர்த்தமானி அறிவித்தல்கள் மூலமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 16 விடயங்களுக்குச் சபையின் அங்கீகாரம் கேட்கின்றீர்கள்.

ஆனால், இவை அனைத்தும் ஏழைகளை மேலும் ஏழைகளாக்கவும், பணக்காரர்களை மேலும் பணக்காரர்களாகவும் மாற்றக்கூடியதாகவே அமைந்துள்ளன.

### ஒரு வீடு கூட இதுவரை கட்டப்படவில்லை

எமது பிரதேசங்களில் 2 லட்சத்து 50 ஆயிரம் வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட இம்மக்களுக்கு 50 ஆயிரம் வீடுகளைக் கட்டிக்கொடுக்க இந்திய அரசு உறுதியளித்தது.

இந்த 50 ஆயிரம் வீடுகளில் இதுவரை ஒரு வீடாவது கட்டப்படவில்லை. ஏன் ஒரு அடிக்கல் தானும் நடப்படவில்லை.

கடந்த ஒரு வருடகாலத்தில் ஆயிரம் வீடுகளைக் கட்டுவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. அப்படியானால், 50 ஆயிரம் வீடுகள் அமைக்க ஆய்வு நடத்த மேலும் 50 வருடங்கள் ஆகுமா? எப்பொழுது இந்த வீடுகளைக் கட்டிக்கொடுக்கப் போகின்றீர்கள்?

ஆரம்பகட்டமாக வட பகுதி விவசாயிகளுக்கென இந்தியா 500 உழவு இயந்திரங்களை வழங்கியது.

ஆனால் கிளிநொச்சியில் 38 விவசாயிகளுக்கும், முல்லைத்தீவில் 38 விவசாயிகளுக்குமாக 76 உழவு இயந்திரங்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.

இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா வந்தபோது விழாவாக நடத்தப்பட்டது. பெரிதாக விளம்பரப்படுத்தப்பட்டது.

உண்மைநிலை என்னவென்றால் மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்துக்கு நூறு உழவு இயந்திரங்களும், தெங்கு அபிவிருத்திச் சபைக்கு நூறு உழவு இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. ஏனையவை படிப்படியாக தென்பகுதிக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. இப்படியான செயற்பாடுகளினால் ஒரு போதும் உங்களால் மக்கள் மனதை வெல்லமுடியாது - என்றார்.

(ஒ-சி)

## பார்வதி அம்மாளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது தகனக் கிரியைகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை வல்வெட்டித்துறை ஊறணி மயானத்தில் இடம்பெற்றமை தெரிந்ததே.

அன்றைய தினமே இரவு மயானத்துக்கு வந்த இனந்தெரியாதோர் நாய்களைத் துப்பாக்கியால் சுட்டுக்கொன்று பார்வதி அம்மாளின் உடல் தகனம் நடைபெற்ற இடத்துக்கு இழுத்து வந்து போட்டு அரைகுறையாக எரியூட்டியுள்ளனர்.

இதுகுறித்து இறுதிக்கிரியை ஏற்பாடுகளைக் கவனித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்திடம் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் கூறியவை வருமாறு:-

''பார்வதி அம்மாளின் அஸ்தியை தாறுமாறாக அள்ளி இறைத்தது காட்டுமிராண்டித்தனமானது. மிருகங்கள் கூட இதுபோன்ற இழிச் செயல்களில் ஈடுபடா.

அஸ்தியை தாறுமாறாக அள்ளி இறைத்தவர்கள் நாய்களைத் துப்பாக்கியால் சுட்டு அந்த இடத்தில் எரியூட்டியிருப்பது உச்சகட்ட இழிச் செயல்'' - என்றார்.

நேற்றுக் காலை தான் பார்வதி அம்மாளை தகனம் செய்த இடத்துக்குச் சென்றபோது அங்கு கிடந்த மூன்று நாய்களையும் அப்பகுதியிலேயே புதைத்து விட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று முன்தினம் மாலை மயானத்துக்கு வந்த சிலர் இறுதிக் கிரியைகளை நடத்திய ஐயர் யார் என சிங்களத்தில் மிரட்டும் வகையில் விசாரித்தனர் எனவும் அங்கிருந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

**SLEAS வகுப்புகள் கிளிநொச்சி**

கிளிநொச்சி அறிவுநதி புத்தகசாலையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தின் துறைசார் நிபுணத்துவ வளவாளர்களால் நடத்தப்படும் இவ்வகுப்புக்களிற்கு கிளிநொச்சி முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆசிரியர்களும் பங்கெடுக்கமுடியும்.
இடம் - கிளி/கிளிநொச்சி ம.வி
காலம் - 26.02.2011 காலை 8.30-2.30 வரை
மேலதிக தகவல்களுக்கும், பதிவுகளுக்கும்
0776737535, 0212285395
அறிவுநதி புத்தகசாலை,
கனகபுரம் வீதி, கிளிநொச்சி.

**THE SCIENCE CORNER**
CLOCK TOWER LANE - JAFFNA.
புதிய பிரிவுகள் ஆரம்பம் - PHYSICS
K.SELVAN B.SC (Hons)
சடப்பொருளியல் - Sat, Sun - ( 6- 10- 7- 10) A.m
மின்காந்த தூண்டல் - Mon 5.30 - 6.30 Pm
காந்தப்புலம் Tue, Thu 06.30 - 7.30 A.m

**யாழ்மண்ணில் எமது கிளை நிறுவனத்தின் ஊடாக**
புத்தகங்கள்
சஞ்சிகைகள்
அழைப்பிதழ்
Handbills
வெளியீடுகள்
பருவ வெளியீடுகள்,
நினைவுமலர்கள்,
துண்டுப் பிரசுரங்கள்,
கண்ணீர் அஞ்சலி,
லேபல், போஸ்டல்,
புத்தகம்கட்டுதல்,
போன்ற அனைத்துவிதமான அச்சுப்பதிப்புக்களையும் அழகுற கணனிவடிவமைப்புச் செய்து ஓவ்செற் பிறிண்டிங் செய்திட யாழ்ப்பாண நிறுவனம்
கொழும்பு பிறிண்டேர்ஸ்
666 கே.கே.எஸ் வீதி, யாழ்-T.P:0214923732

**யாழ் நகரில்** மிகக்குறைந்த கட்டணங்களில்
**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்
To Study in UK(London), Canada, Australia,Newzealand Hot... Hot courses for easy Student visa are open now
100% நல்ல சம்பளம்
FOUNDATION DIPLOMA IN HOSPITALITY (HOTEL) MANAGEMENT
FOUNDATION DIPLOMA IN NURSING (HEALTH & SOCIAL CARE)
FOUNDATION DIPLOMA IN MANAGEMENT
Qualification: G.C.E.[O/L] Plus IELTS 5.5
After G.C.E. A/L or O/L → 6 Months / 3 Months Foundation Diploma @ BCHS → 2½ Years Diploma & Degree
IELTS (International English Language Testing System) (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2 1/2 Months
We Gurantee Minimum 6.5 Band upwards
Diploma in English [2 Months] Advanced Diploma In English [2 Months]
100 % பயிற்சி
100 % வெற்றி
புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடனும் நடாத்தப்படுகிறது.
பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் 100 % உறுதி.
SPONSOR/SETTLEMENT VISA - EXAMS
பிரித்தானியா அரசாங்கத்தினால் அங்கிகரிக்கப்பட்ட நிரந்தர வதிவிட விசாவை பெற்றுக் கொள்ளுவதற்கான ஆங்கிலப் பரீட்சை தொடர்பான ஆலோசனைகளும், அதற்கான பரீட்சைகளும் (A1, PTE, ESOL) எங்களால் வெற்றிகரமாக நடாத்தப்படுகிறது.
Duration : 2 Months
புதிய பிரிவு 03-03-2011
Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913 0714299935
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
திகதி 27-02-2011 காலை : 10.00 மணி
04-03-2011 மாலை : 03.00 மணி

**IMMEDIATE VACANCIES**
COMPUTER ASSISTANT (Female) - 03
*Qualification :-*
- 6 passed in O/L & 03 Passed in A/L
- Below 24 Years
- Ms Office

Field Officer (Male) - 01
*Qualification :-*
- 6 Passed in O/L & 03 Passed in A/L
- Below 26 Years
- Driving License
- Computer & English Knowledge Preferable

Colsing Date :- 28.02.2011
Forward Your CV's to - info@gatherpage.com
OR
Manager,
Gatherpage Pvt (Ltd.)
No - 09, Venkadesan Road,
Jaffna.
Contact No :- 0217200684

வணிகக்கல்வி
திரு.S. பிரதீபன்
A/L 2011
வணிகத்திட்டம்
ஆரம்பம் - 26.02.2011
சனி 6 Am
A/L 2011, 2012, 2013
Day, Paper புதிய
அனுமதி
வழங்கப்படும்
யூனிவேர்சல்
கந்தர்மடம்

**வீடு விற்பனைக்கு**
யாழ்.நகருக்குள் பிரதான வீதியில் அமைந்துள்ள 2 பரப்புக் காணியில் 4 படுக்கை அறைகள், அலுவலக அறை, சமயலறை, 2 விசாலமான இருக்கை அறைகள் மற்றும் வாகனத்தரிப்பிடத்துடன் கூடிய மேல்மாடி வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு 0726997899

**காணி விற்பனைக்கு**
A-9 வீதியில் அரியாலையில் அமைந்துள்ள 26 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு
0726997899

**புதிய பிரிவுகள்**
Diploma Courses..
Rs.800 Upwards
*MS Office *Accounting
*Web Devel.* Multimedia
*AutoCAD VB.net, LINUX, ICT,GIT,Kids Prog
International Courses...
Computer Engineering, CIMA,IELTS / Toefl
Cisco-CCNA,CCNP ICDL-CAD, BCS-UK
Oracle Java prog., Red Hat Engineer
Degree Course-BIT-University of Colombo
Free: ICDL, Dip. in English, Hardware, DTP, Internet & Email
SMS your name & course to 0772 395 895 & get Schol.
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு
Closing Date 25.02.2011
MCS 324,Palaly Road,Parameswara Junction www.mcsitcampus.org
Call 772395895

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.02.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org